REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 நவம்பர் 27 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 89 இல. 282 | Saturday 27,November, 2021 | 24பக்கங்கள் | 30/-

ஆறுமுகநாவலர் 142 ஆவது குருபூஜை

நாடு முழுவதும் அனுஷ்டிக்க அரசாங்கம் ஏற்பாடு

வடக்கு , கிழக்கு, மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்து சமய, கலாசார 06

இரு டோஸ்கள் ஏற்றிய 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றல் இனி நடமாடும் சேவை மூலம்

தொற்றாளர்களுக்கு Molnupiravir குளிசைகள் வழங்கவும் ஏற்பாடு

கிராம மட்டத்தில் கொரோனா தொற்றலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அதிக கவனம் செலுத்தவும் பணிப்பு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவை மூலம் மூன்றாவது டோஸ் (Booster) தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத்துறை 06

Molnupiravir Capsule மருந்தை கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக மோல்னுபிரவீர் கெப்சூல்களை (Molnupiravir Capsule) நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, 06

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அரசு திட்டம்

முகக்கவசம், தடுப்பூசி, இடைவெளி பேணல் தொடரும்

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன், பல்வேறு துறைகளின் சேவை நடவடிக்கைகளை வழமை போன்று மேற்கொள்ள, அனுமதி வழங்க எதிர்பார்த்திருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

திருமண வைபவங்கள், சினிமா திரையரங்குகள், உணவகங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றை சுகாதார வழி 06

கொடும்பாவியை எரிக்கும் செயல்;

எதிர்கால சந்ததியையே எரிக்கும் செயலாகும்

பாராளுமன்றத்தில் வியாழேந்திரன் உரை

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

இரசாயனப் பசளை கோரி ஜனாதிபதி, விவசாய அமைச்சர் ஆகியோரின் உருவ பொம்மைகளை எரித்தாலும் நாட்டின் எதிர்கால சந்ததியின் உருவபொம்மைகளே இவ்வாறு எரிகின்றன என்பதை மறந்துவிடக் கூடாதென இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார். 06

இந்தியாவிலிருந்து நாடு திரும்ப விரும்பும் இலங்கையருக்கு கௌரவமான வாழ்வு

அவர்களது பூர்வீக இடங்களில் வாழ ஏற்பாடுகள் செய்யப்படும்

பிரதி உயர் ஸ்தானிகரிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை நாட்டுக்கு அழைத்து வருதல் மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைள் தொடர்பில், சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கான பிரதி உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று (26) நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே இவ் விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் 06

இந்தியாவுக்கு மேலதிகமான விமான சேவை

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இந்தியாவுக்கான விமான சேவைகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு முன்னர் இருந்ததைப் போலவே ஸ்ரீலங்கன் விமான சேவையை மீண்டும் நிறுவ உறுதிபூண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 06

சிறைச்சாலை திணைக்களத்துக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள், புனர்வாழ்வு அதிகாரிகள் தமது பயிற்சியை நிறைவு செய்து வெளியேறினர். அங்குனுகொலபெலஸ்ச சிறைச்சாலை விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்...

குறிஞ்சாக்கேணியில் கடற்படையினரின் படகுச்சேவைகள்

திருகோணமலை, கிண்ணியா குறிஞ்சாங்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை ஆற்றைக்கடந்து செல்வதற்கு அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பயணிகள் படகு சேவையை இலங்கை கடற்படை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, கிழக்கு கடற்படை கட்டளையின் மேற்பார்வையின் கீழ் ஒரே நேரத்தில் 25 பயணிகளை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லக்கூடிய 06

ஈஸ்டர் தின குண்டுத்தாக்குதல்:

பூஜிதவுக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிக்க IGPக்கு அழைப்பு

29இல் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

போதிய புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை தடுக்க நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் 06

SLFP யுடன் எமக்கு எந்தவித பிரச்சினையுமே கிடையாது

ஓரிருவர் செல்வது ஒரு பொருட்டே அல்ல

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் எம்முடன் இருக்கிறார்கள். ஓரிருவர் எம்மை விட்டு செல்வதால் எமக்குப் பிரச்சினை கிடையாதென இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 06

அரச பாடசாலைகளுக்கு டிசம்பரில் விசேட விடுமுறை

அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 23,24, 25, 26ஆம் திகதிகளில் கிறிஸ்மஸ் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து டிசம்பர் 27 ஆம் திகதி முதல் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென்றும் அவர் மேலும் 06

Gas சிலிண்டர் வெடிப்பு தொடர்பான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் அறிக்கை

இரசாயன செறிமானத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே, கடந்த சில நாட்களில் எரிவாயு வெடிப்பு ஏற்பட்டதாக ஊடகங்களில் வெளியான தகவல்களில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லையென அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றின் மூலம், இதனைத் தெரிவித்துள்ளது.

அண்மையில், மெக்டொனால்ட் உணவகத்தில் ஏற்பட்ட தீப் பரவலுக்கு, அந்த உணவகத்தில் எரிவாயு கசிவு ஏற்பட்டு வெடித்தமையே காரணமாகும் என்றும் அந்த அறிக்கையில் 06

"யுகதனவி" மின் உற்பத்தி ஒப்பந்தம்

மனுமீதான பரிசீலனைக்கு 5 பேரடங்கிய நீதிபதிகள் குழாம்

கெரவலபிட்டிய 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தின் அரசுக்கு சொந்தமான பங்குகளில் 40 வீதமானவற்றை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்க அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் 06

இலங்கை பரீட்சை திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர்

கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் எல்.எம்.டி தர்மசேன புதிய பரீட்சை ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அப் பதவியில் பணியாற்றிய பீ. சனத் பூஜித நேற்று (26) ஓய்வு பெற்றதையடுத்து இந்த நியமனம் 06

08 இடங்களில் தாக்குதல் இடம்பெறலாம் என

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் 20ஆம் திகதியே தகவல் கிடைத்தது

CIDயின் முன்னாள் தலைமை அதிகாரி சாட்சியம்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று 08 இடங்களில் தாக்குதல் நடத்தப்படலாமென 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி பிற்பகல் 04.14 மணிக்கு தமக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்ததாக அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன நேற்று முன்தினம் (25) தெரிவித்துள்ளார். அது தொடர்பில் தாம் உடனடியாக 06

புத்தளத்தில் நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

மக்களை அவதானமாக இருக்க பணிப்பு

புத்தளம் மாவட்டத்தில் ஐந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் 32 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. 06

கிளிநொச்சியில் பொலிஸாரை தாக்கியோர் கொழும்பில் கைது

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் இரு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட தகராறை சமரசம் செய்ய முயன்ற பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய 06 பேர் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜகிரிய பிரதேசத்திலுள்ள கட்டட நிர்மாணம் நடைபெறும் இடமொன்றில் வைத்து இச் சந்தேகநபர்கள் 06 பேரும் நுகேகொடை, மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. தர்மபுரத்தை சேர்ந்த 20 மற்றும் 28 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். 06

விக்கல் வீராச்சாமி

அரசாங்கம் உண்மைகள ஏற்க பழகிக்–கொள்ள வேணும் எண்டு சிறிதரன் ஐயா உயர் சபையில தெரிவிச்சிருக்கிறார்....

அவங்க மூட்டை மூட்டையா பொய் கூறுவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ள பழகின மாதிரிய மனசுல வெச்சு கூறுகி–றாரோ தெரியல...!!!

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய விமான ஓடுதளம் மற்றும் ஓடுபாதையை திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பூரண நிதி அனுசரணையின் கீழ் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் முழு ஆதரவுடன் புதிய விமான ஓடுதளம் மற்றும் ஓடுபாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் தொடர்பான விசாரணை...

கொழும்பு வடக்கு நிருபர்

'பயங்கரவாத தாக்குதலொன்று நடாத்தப்படலாம் என கிடைக்கப் பெற்ற தகவலை, பல நாட்களுக்கு முன்னர் பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்திருந்தேன். எனினும் ஏப்ரல் 20 ஆம் திகதி வரை தக்குதல் நடாத்தப்படும் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.

ஏப்ரல் 21 ஆம் திகதி முற்பகல் தாக்குதல் நடாத்தப்படும் என்ற தகவலை, மிக்க பொறுப்புடன் சில மணி நேரங்களுக்கு முன்னர் நான் வழங்கிய நிலையில்,அதனை தடுக்காமைக்கான பொறுப்பினை என்னால் ஏற்க முடியாது என முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்தார்.

21/4 உயிர்த்த ஞாயிறு தினதொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு வழக்குகளின் பிரதான சாட்சியாளரான முன்னாள் அரச உளவுச் சேவையின் பணிப்பாளரும் தற்போதைய மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபருமான நிலந்த ஜயவர்தன தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்குகளானது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான, மேல் நீதிமன்றின் ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹம்மட் இஸ்ஸதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் (25) மூன்றாவது நாளாகவும் விசாரிக்கப்பட்டது. இதன்போதே முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பிலும், பிரதிவாதியின் தரப்பு குறுக்குக் கேள்விகளுக்கு பதிலளித்தும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன இவ்வாறு சாட்சியமளித்தார்.

விசாரணையின் போது, பிரதிவாதி முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன,

'பயங்கரவாத தாக்குதலொன்று நடாத்தப்படலாம் என கிடைக்கப் பெற்ற தகவலை, பல நாட்களுக்கு முன்னர் பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்திருந்தேன்.ஏப்ரல் 21 ஆம் திகதி முற்பகல் தாக்குதல் நடாத்தப்படும் என்ற தகவலை, மிக்க பொறுப்புடன் சில மணி நேரங்களுக்கு முன்னர் நான் வழங்கிய நிலையில், அதனை தடுக்காமைக்கான பொறுப்பினை என்னால் ஏற்க முடியாது.

ஏப்ரல் 20 ஆம் திகதிவரை, தாக்குதல் நடாத்தப்படும் எனும் நம்பிக்கை இருக்கவில்லை. இந்த தாக்குதலுக்கான ஆடைகள் கூட 16 ஆம் திகதியே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்படி இருக்கையில் எனக்கு 4 ஆம் திகதி கிடைத்த தகவல் தொடர்பில் எவ்வாறு பூரண நம்பிக்கை கொள்ள முடியும்.' என சாட்சியமளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதிவாதி சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன்,

உளவுச் சேவை பிரதானியே 20 ஆம் திகதி தான் உளவுத் தகவல் மீது நம்பிக்கை கொள்ள ஆரம்பித்திருப்பின் , மற்றையவர்கள் தொடர்பில் என்ன கூற வேண்டி உள்ளது என கேள்வி எழுப்பினார்.

'நான் உளவுத் துறை பிரதானியாக இருப்பினும், நாளை தாக்குதல் நடக்கும் எனக் கூறி ஊரடங்கை பிறப்பித்தால் தாக்குதல் நடந்தாலும், நடக்காவிட்டாலும் இறுதியில் நானே குற்றவாளியாவேன்.' என அதற்கு பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன குறிப்பிட்டார்.

இந் நிலையில் தொடர்ந்தும் ஜனாதிபதி சட்டத்தரனி மொஹான் வீரகோனின் குறுக்குக் கேள்விகளுக்கு பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்ததாவது,

'2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த தாக்குதலை மையப்படுத்தி, தாக்குதல் ஒன்று நடக்கலாம் என ஏபரல் 4 ஆம் திகதி தகவலளித்த தரப்பே ஏப்ரல் 20 ஆம் திகதி மாலை 4.12 இற்கு மீளவும் தகவல் அளித்தது. அந்த உளவுத் தகவல் தொடர்பில் நான் உடனடியாக பாதுகாப்பு செயலர், பொலிஸ் மாஅதிபரை தெளிவுபடுத்தினேன். நாட்டில் ஊரடங்கை பிறப்பித்தோ, நாட்டை முடக்கியோ அதனை தடுக்காமை எனது பலவீனமல்ல.

பாதுகாப்பு செயலர்கள் மாதத்துக்கு மாதம் மாறினாலும், அரச உளவுச் சேவை வழங்கும் உளவுத் துறை அறிக்கைகளை சரியாக கையேற்காமையின் பொறுப்பை நான் ஏற்க முடியாது. எனக்கு கிடைக்கும் உளவுத் தகவல்களை நான் நேரடியாக பாதுகாப்பு செயலருக்கே வழங்கினேன் என தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன்,

சாட்சியாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தனவிடம், தேசிய உளவுச் சேவையில் சேவையாற்றும் 1300 1400 பேர் தொடர்பில் எவ்வளவு நிதி செலவிடப்படுகிறது என வினவினார்.

குறித்த கேள்விக்கான பதில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்டுள்ளதால், அதற்கான பதிலை வழங்க முடியாது என இதன்போது சாட்சியாளர் கூறினார்.

இதன்போது நீதிபதிகள் குழாமும் அந்த கேள்வியை தொடுப்பதற்கு அனுமதி மறுத்தது.

இதனைவிட நேற்று, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வாவின் நெறிப்படுத்தலில் சாட்சியமளிக்கும் போது, சாட்சியாளரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன தெரிவித்ததாவது,

'தேசிய உளவுச் சேவை என்ற ரீதியில் நாம் முன்னெடுப்பது உளவுத் துறை நடவடிக்கைகளாகும். நாம் வழங்கும் தகவல்களுக்கு அமைய நடவடிக்கை முன்னெடுப்பது எமது பொறுப்பல்ல.

'பயங்கரவாத தாக்குதலொன்று நடாத்தப்படலாம் என கிடைக்கப் பெற்ற தகவலை, பல நாட்களுக்கு முன்னரே பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்திருந்தேன்'

தடுக்காமைக்கான பொறுப்பினை என்னால் ஏற்க முடியாது. பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிலந்த ஜயவர்தன

மரணித்துள்ள மாகாண சபைகளை புதுப்பிக்காது புதிய அரசியலமைப்பை உருவாக்குங்கள்

பேராசிரியர் இந்துராகாரே தம்மரதன தேரர்

நாட்டுக்கு புதிய அரசியல் அமைப்பொன்று தேவை என்ன நீண்டகாலமாக தேசிய அமைப்புகள் வேண்டுகோள் விடுக்கின்றன. 1972 குடியரசு அரசியலமைப்புக்கு பின்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையுடனும் வேறு பல யோசனைகளுடனும் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன முன் வைத்தார். அதில் இருந்த குறைபாடுகள் அதிலிருந்த பலவீனங்கள் காரணமாக அந்த அரசியல் அமைப்புடன் நாட்டை முன்னெடுத்து செல்ல முடியாது என்னும் முடிவுக்கு வர நேரிட்டது. அதனால் பொது மக்கள், தேசிய அமைப்புகள், புத்திஜீவிகள் புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வர பரிந்துரை செய்தார்கள். தற்போது அதற்கான தருணம் ஆகும். ஜனாதிபதியும் அதற்கு தயார். அதனால் சமூக பொறிமுறையை புதுப்பித்தல், அரச பொறிமுறையை சீரமைத்தல், அரச பொறிமுறையின் பலவீனங்கள் மற்றும் சம்பள முரண்பாடுகள் போன்ற அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு தேர்தல் முறையை மாற்றும் முறையுடன் நாட்டில் இன முரண்பாடு மற்றும் வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரதிநிதிகள் இல்லாத வகையில் உள்ள அரசியல் அமைப்பாக தற்போது உள்ள அரசியல் அமைப்பு அறிந்து கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் புதிய அரசியலமைப்புக்கான பாதை திறந்துள்ள நேரம் இதுவாகும். இந்த அரசியலமைப்பை திருத்த முயற்சிக்கும் போதே தேர்தல் முறையிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனால் எமக்குத் தெரியும் தற்போது பழைய மரணித்த மாகாணசபை யோசனையை கொண்டுவந்து அதன் தேர்தலை நடத்தி புதிதாக மாகாண சபைகளை அமைப்பது அதனை உயிர்ப்பிப்பதற்குப் பதிலாக புதிய அரசியலமைப்பின் கீழ் புதிய உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறையுடன் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் உருவாகும் முறையொன்றை ஏற்படுத்த வேண்டும்.

நாட்டை மாற்ற வேண்டுமென்றால் அரசியலமைப்பை மாற்றியே ஆக வேண்டும். அதனால் புதிய அரசியலமைப்பு அவசியமாகும்.ஆனால் அந்த அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு முக்கியமான அரசியலமைப்பு திருத்தங்களை எவ்வாறு செய்வது என்ற யோசனைகளும் முன்வைக்கப்பட வேண்டும். ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பொதுமக்களிடம் ஆலோசனை பெறப்பட்டது. நானும் தனிப்பட்ட ரீதியில் எனது யோசனைகளை முன் வைத்திருந்தேன். தேசிய அமைப்புகள் மூலமும் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன. நாம் அந்த அரசியல் அமைப்பு தொடர்பாக, நீண்ட கலந்துரையாடலின் பின்னரே பொதுமக்களின் பிரதிநிதிகள், அறிஞர்களின் கருத்துகளை ஆராய்ந்து அரசியலமைப்பை தயாரிக்க வேண்டியுள்ளது. நாட்டை நேசிக்கும் அதேவேளை எதிர்காலத்துக்கு உகந்த தேசாபிமான இனவாதமற்ற நாட்டை உருவாக்க புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென அன்றும் நாம் எமது ஒப்புதலை தெரிவித்தோம் இன்றும் அதனையே. கூறுகின்றோம் ஆதலால் இதற்கு நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம்.

ஜனாதிபதி புதிய அரசியல் அமைப்பை ஒரு வருடத்துக்குள் கொண்டு வருவதாக கூறுகின்றார். பொதுஜன பெரமுன தலைவர் அடுத்த வருட நடுப்பகுதிக்கு முன்னர் மாகாணசபை தேர்தலை நடத்தவுள்ளதாக கூறுகின்றார். அவ்வாறென்றால் எப்படி புதிய அரசியலமைப்பை கொண்டு வர முடியும்? என கேட்ட கேள்விக்கு பதிலளித்த தேரர்,..

கூட்டு பிரகடனங்களை செய்வதே அனைவரினதும் பொறுப்பாகும். அதன்படி பார்த்தால் தற்போது நாட்டுக்கு அவசியமானது மாகாண சபைகளை கொண்டுவந்து மீண்டும் அமைப்பதல்ல. எதிர்காலத்துக்கான சிறந்த நாட்டை உருவாக்குவதே அவசியமான ஒன்றாகும். அண்மையில் அதிகரித்த பொருட்களின் விலை, சம்பள முரண்பாடு, அரச பொறிமுறையின் முறைசாரா தன்மை போன்றவை பிரச்சினைகளாக உள்ளன. அவற்றை தீர்ப்பதற்கு நீண்டகால பொறிமுறையே அவசியமான ஒன்றாகும். அதுதான் புதிய அரசியலமைப்பை கொண்டு வரும் யோசனையாகும். அதற்கிடையில் பொருத்தமற்ற மாகாண சபை யோசனையை மீண்டும் கொண்டுவர கட்சிகளும் தலைவர்களும் யோசனைகளை கூறுவார்களானால் அதற்காக செயல்படுவார்களானால் நான் அங்கு முறையற்ற தன்மை அதாவது பொருத்தமற்ற நிலைமை உள்ளதாக எண்ணுகிறேன். தற்போது புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வருவதே நாட்டுக்கு நல்லது. அதை விடுத்து மாகாணசபை முறையை புதுப்பிப்பதல்ல.

தமிழில்: வீ.ஆர். வயலட்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 நவம்பர் 27 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
25 முதல் 27 வரை
சுபஹ் - 04.45
லுஹர் - 11.59
அஸர் - 03.21
மஃரிப் - 05.51
இஷா - 07.05

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் கார்த்திகை 11
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: அஷ்டமி

இராசி பலன்கள்
மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - சுகம்
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

இலங்கை வந்துள்ள அரிஸ்துல் காதிரியா தரிக்கா சர்வதேச அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய அஸ்ஷைக் தைக்கா அஹமட் நாசிரை கௌரவிக்கும் நிகழ்வொன்று கொழும்பு மாநகர சபையின் பிரதிமேயர் எம்.ரி.எம். இக்பால் தலைமையில் நடைபெற்றது. அலுவலகத்தில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் அருகில் மாநகர சபை உறுப்பினர் வண. தம்மரங்சி தேரர் இருப்பதையும் படத்தில் காணலாம்.

படகு விபத்தில் அறுவர் உயிரிழப்புக்கு

கிண்ணியா நகர சபை தலைவர் மறைமுகமான ஒரு காரணி

கைதான அவருக்கு டிசம்.09 வரை விளக்கமறியல்

திருகோணமலை – கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 06 பேர் உயிரிழந்த படகுப் பாதை விபத்து தொடர்பில் கிண்ணியா நகர சபை தலைவர் எஸ்.எச்.எம். நளீம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

கிண்ணியா பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர், விசாரணைகளினிடையே இவ்வாறு கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.இதன்போது அவரை எதிர்வரும் 09 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதவான் ஐ.பி. ரஸாக் உத்தரவிட்டார்.

இப்படகுப் பாதை விபத்து தொடர்பில் முன்னர் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 08 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் (24) உத்தரவிட்டது.

படகுப் பாதையின் உரிமையாளர், செலுத்துநர் மற்றும் கட்டணம் வசூலிப்பவர் ஆகிய 30,40,53 வயதுடைய மூவருமே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கவனயீனமாக செயற்பட்டு, 06 பேருக்கு மரணத்தை ஏற்படுத்தியமை மேலும் 20 பேருக்கு காயமேற்படுத்தியமை தொடர்பில் அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டின் கீழ் 24 ம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அம் மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் ஐ.பி. ரஸாக் உத்தரவிட்டிருந்தார்.

06

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையுடன் நெருக்கமாகவே செயற்படுகிறது

ஜனாதிபதியுடனான சந்திப்பில் உதவிப் பொதுச் செயலாளர் கலீட் கியாரி

ஐக்கிய நாடுகள் சபை, எப்போதும் இலங்கையுடன் நெருக்கமாகவே செயற்படுகின்றதென, அதன் அரசியல் அலுவல்கள், அமைதியைக் கட்டியெழுப்பல் மற்றும் அமைதிச் செயற்பாடுகள் தொடர்பான உதவிப் பொதுச் செயலாளர் கலீட் கியாரி (Khaled Khiari) தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம்(25) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே கலீட் கியாரி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக ஜனாதிபதி மற்றும் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் (Antonio Guterres)குமிடையில் நடைபெற்ற இருதரப்பு

06

விவசாயத்துறையை முன்னேற்ற

காலத்திற்கேற்ற சட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தும்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

விவசாயத்துறையை முன்னேற்றும் வகையில் காலத்திற்குப் பொருத்தமான சட்டங்களை வகுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் மில்கோ உட்பட நட்டத்தில் இயங்கி வந்த நான்கு நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக முன்னேற்றியுள்ளதாக தெரிவித்த அவர் மேற்படி 4 நிறுவனங்களும் இந்த அரசாங்கம் பொறுப்பேற்கும் போது 3198 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது இந்த நிறுவனங்களின் மூலம் 800 மில்லியன் ரூபாவை இலாபம் ஈட்ட முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 2024ம் ஆண்டுக்குள் உருளைக்கிழங்கு, வெங்காயம், செத்தல் மிளகாய் ஆகியவற்றில் தன்னிறைவை ஏற்படுத்தி இறக்குமதியை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

இரசாயனப் பசளை உபயோகத்தை தடை செய்வதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற அதேவேளை அதனூடான பிரதிபலன்கள் தொடர்பில் எவரும் தெரிவிக்காமை கவலையான விடயம் என்றும் அவர்

06

துப்பாக்கி சூட்டில் டிங்கல் வசந்த பலி!

சம்பவத்தில் இரு பொலிஸாரும் காயம்

'சன் சைன் ' சுத்தாவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான 'டிங்கல் லசந்த' என்றழைக்கப்படும் ஹேவா லுனுகே லசந்த பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மீட்கச் சென்ற வேளையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடந்த செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி மாத்தறை – கொடவில பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 'சன் சைன்' சுத்தா என்றழைக்கப்படும் அமில பிரசங்க

06

உருளைக்கிழங்கு, வெங்காய உற்பத்தி:

உள்நாட்டு அறுவடையின் போது இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும்

இராதாகிருஷ்ணன் எம்பி அரசாங்கத்திடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

மலையக பகுதிகளில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலங்களில் வெளிநாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்வதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் அது தொடர்பில் வர்த்தக அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி எம்பி வீ.இராதாகிருஷ்ணன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்படுகின்ற போதும் மாத்தளை மாவட்டத்தில் பெரிய வெங்காயம் அறுவடை செய்யப்படும் போதும் வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்து எமது உள்ளூர் விவசாயிகளை பாதிப்புக்குள்ளாக்க வேண்டாம் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று விவசாய அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களுக்கான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

இலங்கையானது 55 வீதம் விவசாயிகளைக் கொண்ட நாடு. இங்கு உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வெளிநாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யப்படுவதை குறைக்க வேண்டுமே தவிர வெளிநாட்டில் இருந்து பெருமளவான பொருட்களை இறக்குமதி செய்வது முறையற்றது.

06

மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

திருத்தச் சட்டமூலத்துக்கு ஒப்புதல்

மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் வர்த்தக அமைச்சார் ஆலோசனைக் குழுவில் அங்கீகரிக்கப்பட்டது.

வர்த்தகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் (25) நடைபெற்ற வர்த்தக அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இந்தத் (திருத்த) சட்டமூலத்தின் மூலம் மூன்று முக்கிய விடயங்கள் திருத்தப்படவுள்ளன. மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் பெயரை லலித் அத்துலத்முதலி புலமைப்பரிசில் நிதியமாக மாற்றுவது, மஹாபொல அறக்கட்டளையின் தலைவர் பதவிக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிப்பது மற்றும் பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் இந்நிறுவனங்களை கையாள்வது போன்ற திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, இந்த சட்டமூலம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி:

57 நாட்களில் 113 மாணவருக்கு கொவிட்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சியில் கடந்த 57 நாட்களில் 113 பாடசாலை மாணவர்கள் அடங்கலாக 1,452 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மாவட்ட தொற்று நோயியலாளர் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (26) கிளிநொச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று (27) ஆரம்பிக்கப்படும்

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை:

தமிழக தலைவர்களுடன் கோபால் தொடர் சந்திப்பு

இந்திய மீன்பிடி அமைச்சரையும் சந்தித்தார்

கடற்றொழில்துறையில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான ஒத்துழைப்பு வாய்ப்புக்கள் குறித்து இந்தியா அவதானம் செலுத்தியுள்ளதோடு, கடற்றொழிலில் ஈடுபடும்போது மீனவர்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் போது இந்திய கடற்றொழில்துறை அமைச்சர் உள்ளிட்ட துறையுடன் தொடர்புடைய முக்கியஸ்தர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே இவ்விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, கடந்த ஞாயிறன்று இராமேஸ்வரத்தில் பல்வேறு மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போதே கடற்றொழிலில் ஈடுபடும்போது மீனவர்களின் பாதுகாப்பு முக்கியமானதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல!

பாராளுமன்றத்தில் சார்ள்ஸ் நிர்மலநாதன்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல. அந்தவகையில் இனங்களுக்கிடையிலான பிளவுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமே தவிர அதனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் நாட்டில் பெரும் பிரச்சினைகள் ஏற்படவே வழிவகுக்கும் அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவது அவசியமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை வாக்குகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மோசமான விளைவுகளுக்கே வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விவசாய அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்

06

ITN முறைகேடு குற்றச்சாட்டு:

விசாரணைக்கு பணிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தில் (ஐ.ரி.என்) முறைகேடு நடந்திருப்பதாக தெரிவிக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பணித்துள்ளேன் என தெரிவித்த தகவல் ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும, குற்றவாளிகளை நான் ஒரு போதும் பாதுகாக்க மாட்டேன் எனவும் தெரிவித்தார்.

திஸ்ஸ குட்டியாரச்சி எம்பி எழுப்பியிருந்த வாய்மூல விடைக்கான கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் டளஸ் அழகப்பெரும, இவ்வாறு தெரிவித்தார்.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	143.01	149.30
கனடியன் டொலர்	156.79	162.96
யூரோ	223.85	232.26
ஜப்பான் யென்	1.7169	1.7858
சிங்கப்பூர் டொலர்	145.77	150.65
ஸ்டேலிங் பவுன்ஸ்	265.16	273.85
சுவிஸ் பிராங்க்	211.85	219.78
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	534.00	கட்டார் ரியால்	55.29
குவைத் டினார்	665.86	சவூதி ரியால்	53.68
ஓமான் ரியால்	522.98	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.81

தினகரன்
THINAKARAN
திகைரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 21

குறள் தரும் சிந்தனை

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

நல்லவர்களின் தொடர்பைக் கைவிடுவது என்பது பலருடைய பகையைத் தேடிக் கொள்வதை விடக் கேடு விளைவிக்கக் கூடியதாகும்.

அலட்சியம் நீங்கும் வரை ஆபத்து எம்மை தொடரும்!

நாட்டில் உச்ச நிலையில் இருந்த கொவிட் தொற்றின் மூன்றாம் அலை தணிவு நிலைக்கு வந்ததையடுத்து ஒட்டு மொத்த மக்களும் நிம்மதி அடைந்திருந்தனர். ஆனால் அந்த நிம்மதியைக் குலைக்கும் வகையில் கவலை தரும் செய்திகள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக வீழ்ச்சி நிலையில் இருந்த கொவிட் தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளன.

இந்த எச்சரிக்கையை மக்கள் உதாசீனம் செய்து விட முடியாது. கொவிட் தொற்றின் முதலாம், இரண்டாம், மூன்றாம் அலைகளை வீழ்ச்சி நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தது. பெறுமதியான ஏராளமான உயிர்களை கொவிட் தொற்றுக்கு நாம் பறிகொடுத்துள்ளோம். பொருளாதாரத்தில் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளோம். கல்வி உட்பட பல்வேறு துறைகளிலும் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் விபரிக்க முடியாதவையாகும்.

நாட்டில் இறுதியாகத் தலைதூக்கிய கொரோனாவின் மூன்றாம் அலையை தணிவு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஒட்டுமொத்த நாடுமே பெரிதும் போராட வேண்டியிருந்தது. அந்தப் போராட்டத்தில் நாம் ஓரளவு வெற்றி பெறுவதற்கு சில மாதங்கள் சென்றன. கடந்த மாதம்தான் நாம் நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கினோம். ஆனால் அந்த நிம்மதி நீண்ட காலத்துக்கு நீடிப்பதற்கான அறிகுறிகளைக் காண முடியவில்லை. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சமீப தினங்களாக கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

நிபுணர்கள் கூறுகின்ற எச்சரிக்கைகளைப் பார்க்கின்ற போது கொவிட் தொற்றின் மற்றொரு அலை உருவெடுக்குமோ என்ற அச்சமே எமக்குத் தோன்றுகின்றது. இந்த அதிகரிப்பை நாம் எவ்வாறாவது கட்டுப்படுத்தியே ஆக வேண்டியுள்ளது. கொவிட் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கையானது தினமும் அதிகரித்தபடி செல்வது நல்லதொரு அறிகுறி அல்ல. இந்த அதிகரிப்பை மற்றொரு அலைக்கான எச்சரிக்கை அறிகுறியாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையில் மாத்திரமன்றி உலக நாடுகள் பலவற்றிலும் நிலைமை இவ்வாறுதான் தற்பொழுது உள்ளது. கொவிட் தொற்றானது தணிவு நிலையில் சில காலம் காணப்பட்டது. ஆனால் தற்பொழுது எல்லா நாடுகளிலும் கொவிட் தொற்று படிப்படியாக அதிகரித்தபடியே செல்கின்றது. மக்கள் மத்தியில் கடந்த ஒரு வருட காலத்துக்கு மேலாக அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால் கொவிட் தொற்று நிலைமையில் தணிவு நிலைமை ஏற்பட்டதும் மக்கள் மத்தியில் அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்கள் குறைந்தபடியே செல்கின்றன. மக்களின் இந்த அலட்சியப் போக்குதான் கொரோனா தொற்று அலைகள் மீண்டும் மீண்டும் தலைதூக்குவதற்குக் காரணமாக அமைகின்றது என்பதுதான் உண்மை.

கொவிட் தொற்று தணிந்ததும் மக்கள் மத்தியில் அச்சம் நீங்கி விடுகின்றது. கொவிட் தொற்று பரவல் மீண்டும் உருவெடுக்காதென்று மக்களில் பலர் நம்புகின்றனர். மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற எச்சரிக்கைகளையும் மக்களில் பலர் பொருட்படுத்துவதில்லை. சுகாதாரப் பழக்கவழக்கங்கள், சமூக இடைவெளி பேணுதல் போன்றவற்றில் கரிசனை செலுத்தத் தவறி விடுகின்றனர். சில நாட்கள் கடந்தும் மற்றொரு அலை அமைதியாகவே உருவெடுத்து விடுகின்றது. முன்னைய தவறுகளை பாடமாக எடுத்துக் கொள்கின்ற மனோநிலை நம்மில் பலரிடம் இல்லை. இவைகளே கொவிட் தொற்று பரவுதலை முற்றாக முடிவுக்குக் கொண்டு வர முடியாதிருப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கொவிட் தடுப்பூசியேற்றும் நடவடிக்கையில் முன்னணியில் திகழும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையின் பயனாக கொவிட் தொற்று பரவலும், உயிரிழப்புகளும் பெருமளவில் குறைந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளோரும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனரென்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அதேவேளை தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளவர்கள் கொவிட் தொற்றுக்கான காவியாகவும் செயற்பட முடியுமென்பதை மறந்து விட முடியாது.

கொவிட் தொற்று பரவல் அதிகரிப்பதற்கு சமூக இடைவெளி பேணப்படாததே பிரதான காரணமாக அமைகின்றது. நாட்டில் முடக்க நிலைமை நீக்கப்பட்டதும் மக்களில் பெரும்பாலானோர் அனைத்து ஆபத்தையும் மறந்த நிலையில் வெளியே நடமாடத் தலைப்படுகின்றனர். கொவிட் தொற்றும் அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. மக்கள் மத்தியில் முதலில் அலட்சியம் நீங்க வேண்டும். அப்போதுதான் கொவிட் ஆபத்தில் இருந்து நாடு விடபட வழியேற்படும்.

editor.tkn@lakehouse.lk

ராவல்பிண்டி வர்த்தக, தொழில்துறை சர்வதேச சாதனை விருதுகள் மாநாடு

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம், 33வது ராவல்பிண்டி வர்த்தக மற்றும் தொழில்துறை சர்வதேச சாதனை விருதுகள் மற்றும் பாகிஸ்தான் இலங்கை வர்த்தக வாய்ப்புகள் மாநாட்டை, பாகிஸ்தானின் மூன்றாவது பாரிய வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனமான ராவல்பிண்டி வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்துடன் இணைந்து கடந்த 23ஆம் திகதியன்று ஏற்பாடு செய்திருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச சாதனையாளர் விருது வழங்கும் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாகிஸ்தானின் முன்னணி தொழில்முனைவோருக்கான விருதுகளை வழங்கி வைத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உரையின் போது, இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மேற்கொண்ட இலங்கை விஜயமானது இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான ஆதரவு மற்றும் நல்லெண்ணத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்தது என நினைவு கூர்ந்தார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம், பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளில் இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலான பரந்த அடிப்படையிலான நீண்ட கால ஒத்துழைப்பை அவரது விஜயம் மேலும் வலுப்படுத்தியுள்ளதாக பிரதமர் சுட்டிக் காட்டினார். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று உறவானது பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் உள்ள பாதுகாக்கப்பட்ட பரந்த மற்றும் வளமான பௌத்த பாரம்பரியத்தால் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால் இந்த மாத தொடக்கத்தில் வெளியிடப்பட்ட 'காந்தாரா: பாகிஸ்தானின் புத்த பாரம்பரியம்' என்ற அதிநவீன ஆவணப்படம் குறித்தும் பிரதமர் கருத்துத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயத்தை ஒட்டி, 2021 பெப்ரவரி 24 ஆம் திகதி நடைபெற்ற பாகிஸ்தான் – இலங்கை வர்த்தகம் மற்றும் முதலீட்டு மாநாட்டை அடுத்து, கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் ராவல்பிண்டியில் இருந்து பாகிஸ்தானின் சுமார் 100 வர்த்தகப் பிரதிகளுக்கான இலங்கை விஜயம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

(07ஆம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானின் முன்னணி தொழில் முனைவோருக்கு பிரதமர் மஹிந்த விருதுகள் வழங்கிவைப்பு

சைவமும் தமிழும் இலங்கையில் இன்று நிலைத்திருக்க காரணமானவர் நாவலர்

பெருமானாரின் 142ஆவது குருபூஜை இன்று நாட்டின் பல இடங்களில் அனுஷ்டிப்பு

இலங்கையில் தமிழும் சைவமும் அழிந்து விடாமல் காப்பாற்றுவதற்காக இறுதி மூச்சு வரை பாடுபட்ட நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமானின் 142ஆவது குருபூஜை தினம் இன்றாகும். நாவலர் குருபூசை முன்னிட்டு நாட்டின் பல இடங்களில் இந்து சமய கலாசார திணைக்களத்தினால் வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்விடத்தில் நாவலர் பெருமானின் வாழ்வின் இறுதி நிமிடங்கள் பற்றி பலருக்கும் தெரியாத உண்மைகள் உள்ளன. சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் வாழ்ந்த அவர் தனது இறுதி வேளையிலும் கடவுள் பற்றிய சிந்தனையுடனேயே கண்களை மூடினார்.

தனது இறுதிக் காலத்தில் இரண்டு நாட்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்தார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர் புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய் விட்டது.

வேதாரணியத்து சைவ சிவாச்சாரியாரை அழைத்து நாவலர் நித்திய பூஜை செய்யும் ஆத்மார்த்த சிவலிங்கமூர்த்திக்கு பூஜைகள் நடத்தப்பட்டன. பூக்களைக் கையிலெடுத்து ஒவ்வொன்றாகப் போட்டு தன்பாட்டிற் கும்பிட்ட வண்ணமிருந்தார் நாவலர்.

தன்னைச் சூழ இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் பெருமான் காலமாகப் போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணியத் தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார்.

தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தை பருகினார். சயனிக்கும் இடத்திற் தலையிற் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ் செய்தார்.

கார்த்திகை மாதம் 21ம் நாள் மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்கு கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர்.

வித்தியாசாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். 'கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்' என்பதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவேயில்லை. என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16ம் நாளில் உலக வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலருக்கு சனிக்கிழமை கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்கு கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதீனத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப்படும் நமச்சிவாய தேசிகரால் அந்தியேட்டி செய்யப்பட்டு அவரது வீட்டிலும் வண்ணார்பண்ணை கோம்பயன் மணற் சுடலையிலும் தேசிகராற் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன.

நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக்களினால் ஒரு பூந்தேர் செய்யப்பட்டு பூதவுடல் வைக்கப்பட்டு அதற்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத்துயர் தாங்க முடியாது அங்கப் பிரதட்சணமாக சுமார் மூன்றரை மைல் தூரம் சென்று சுடலையை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்கமுடியாத உருக்கமான ஒரு நிகழ்வு. கோம்பயன் மயானத்தில் இராத்திரிவேளை சந்தனக்கட்டைகள் அடுக்கி ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகியது.

'நானுயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வருட காலம் சைவசமய உண்மைகளைப் போதித்து வந்தேன்' இவை நாவலரின் கடைசிப் பிரசங்க வாசகங்கள். நாவலரைப் போல் நமக்கு யாருளர்?

நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவலர் பெருமானுக்குப் பல நினைவுச் சின்னங்கள் இன்று வரை நிறுவப்பட்டு வருகின்றன. அவர் வாழுங் காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைந்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள் ஏராளம். ஈழநாட்டில் சைவமும் தமிழும் இன்று நிலைபெற்று உள்ளதென்றால் அதற்கு இப் புண்ணியவானே முக்கிய காரணம் என்பதை உணர வேண்டும்.

அப்பெருமகனின் சரித்திரத்தை, சிறப்புக்களை சாதனைகளை அனைவரும் முழுமையாக படிக்க வேண்டும். சைவப் பாடசாலைகள், சைவ நிறுவனங்கள், அனைத்திலும் நாவலர் நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர் பெருமானை மீள நினைப்பதற்கு நாம் வழி செய்ய வேண்டும்.

('சைவத்தமிழர்களின் கலங்கரை விளக்கம்' எனும் நூலிலிருந்து.....)

வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

காடுகளை மீளுருவாக்கும் பாரிய செயல் திட்டம்



இலங்கையில் வன அடர்த்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன தலைமையின் கீழ் இலங்கை விமானப் படையினர் இலங்கை வன பாதுகப்பு திணைக்களம், பேராதனை பல்கலைக்கழக விவசாயபீடம், மத்திய சுற்றுச்சூழல் ஆணையகம் மற்றும் மாஸ் கெபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து ஆரம்பித்துள்ளனர். கடந்த 23 ஆம் திகதி வத்தேகம கெபிளித்த வனப்பகுதியில் 06வது முறையாக வான் வழிமூலம் விதைகுண்டு வீச்சு செயற்திட்டம் இடம்பெற்றது.

விமானப்படை கட்டளை வேளாண்மை பிரிவின் கட்டளை அதிகாரி குருப் கேப்டன் ரஜீவ் கொடிப்பிலி மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் தலைமையில் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் அமைத்துள்ள வேளாண்மை பிரிவினால் இந்த விதைக்குண்டுகள் தயாரிக்கப்பட்டன. 2030 ஆம் ஆண்டில் பசுமை விரிவாக்கத்தை 27% முதல் 32% ஆக உயர்த்துவதன் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கையின் வன அடர்த்தியை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதே இத்திட்டத்தின் இலக்காகும்.

இதன் முதலாவது செயற்திட்டமாக ரணுறவ தேசிய வனப்பகுதியின் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 5,000 விதைக்குண்டுகளும் , 2 வது கட்டமாக அம்பாறை லகுன வனப்பகுதியின் 60 வனப்பகுதியில் 67,000 விதைக்குண்டுகளும் 3வது கட்டமாக லகுன தேசிய பூங்காவில் 2020 டிசம்பர் காலப் பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் 30,000 விதைக்குண்டுகளும் நான்காவது முறையாக மீண்டும் லகுன தேசிய பூங்காவில் 60 ஏக்கர் நிலப்பரப்பில் 67,000 விதைக்குண்டுகளும் 5 வது முறையாக கெபிளித்த தேசிய வனப்பகுதியில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் 80,000 விதைக்குண்டுகளும் இதுவரை விமானப்படையினால் வான் வழிமூலம் வீசப்பட்டுள்ளன. வீரவெல இலங்கை விமானப்படை தளத்தை மையமாக கொண்டு எம்ஐ 17 ஹெலிகொப்டர் உதவியுடன் சுமார் 65,000 விதைக்குண்டுகள் சுமார்70 ஏக்கர் நிலப்பரப்பில் வான் வழிமூலம் வீசப்பட்டன. இவற்றுள், கூலன், வேம்பு, ஆத்தி, நாகை, புளி, பருத்தி, பாலை, வீரை, மருது, கித்துள் போன்றவை உள்ளடங்குகின்றன. இந்த திட்டத்திற்கு விமானிகளாக விங் கமாண்டர் சேனக கூரகமுவ மற்றும் துணை விமானியாக பிளைட் லேப்ட்டினால் சுதார அமரதேவ ஆகியோர் செயற்பட்டனர்.

இலங்கை விமானப் படையினால் ஆறாவது தடவையாக வான் வழியாக விதைகுண்டுகள்

சம்பந்தப்பட்டோர் பொறுப்புடன் செயற்பட்டிருப்பின் கிண்ணியா பரிதாபத்தை தவிர்த்திருக்க முடியும்!

கிண்ணியா பிரதேசத்தில் உள்ள மக்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திய நாளாக கடந்த 23.11.2021 ம் திகதி அமைந்துள்ளது. அதுதான் கிண்ணியா படகு விபத்தில் சிறுவர்கள் உட்பட 06 பேர் பலியாகிய சம்பவமாகும். யாரும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்ந அனர்த்தம் கிண்ணியாவையே சோகத்தில் ஆழ்த்திய கறுப்பு தினமாக வரலாற்றில் பதிவாகியது.

குறிஞ்சாங்கேணி பாலமானது கிண்ணியா நகரசபை மற்றும் கிண்ணியா பிரதேசசபை ஆகிய உள்ளூர் அதிகாரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களை இணைக்கின்ற ஒரு முக்கியமான பாலமாகும். இப்பிரதேச மக்கள் இப்பாலத்தினூடான போக்குவரத்து சேவையையே அதிகமாக பயன்படுத்துகின்றனர்.

கிண்ணியா குறிஞ்சாங்கேணி பாலம் அமைந்துள்ள பிரதேசமானது களப்பு சார் பிரதேசமாக உள்ளதுடன் கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட 1000 க்கு மேற்பட்டோர் தம் பல்வகையான தேவைகளை நிறைவேற்றுவதற்காக தினந்தோறும் இப்பாலத்தை கடந்தே வருகின்றனர். நீர் வழிந்தோடக்கூடிய பாலமாக இக்களப்பு சார் பிரதேசம் உள்ளது.

இப்பாலம் 1977 ஆம் ஆண்டு புதிதாக புனர்நிர்மானம் செய்யப்பட்டது. அதன் பின்னர் ஏற்படும் அதிக மழையுடனான வெள்ளம் காரணமாக பாலம் பல தடவைகள் சேதமாக்கப்படுவதுடன் அவ்வப்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பல அரசியல்வாதிகளை உருவாக்கிய இப் பிரதேசத்தில் இப்பாலத்தை உரியபடி நிர்மாணிக்க முடியாமை கவலைக்குரிய விடயமாகும். கிராமிய வீதியபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தலைமையில் இப் பாலத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கான ஆரம்ப வைபவம் கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி இப்பிரதேசத்தில் நடைபெற்றது. களப்பினூடாக பாலம் அமைப்பது ஏனைய பிரதேசங்களில் பாலம் அமைப்பதனை விட சிரமமானது. காரணம் கடல் சுற்றாடலியல் விடயங்களை பேணி மக்களின் கடல் வாழ்வாதார தொழிலிற்கு பாதிப்பின்றி மேற்கொள்ள வேண்டியது அவசியம். பாலம் நிர்மாணிக்கும்வரை மாற்று வழியை பயன்படுத்துமாறு மக்களுக்கு உரிய முறையில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது தொடர்பான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மேலும் முன்னாள் கிண்ணியா பிரதேச செயலாளர் மொஹமட் கனி இப்பாலத்தால் பயணம் செய்ய வேண்டாம் என்றும் இது அபாயத்திற்குரியது என்று காணொளி மூலம் மக்களை அறிவுறுத்தியதையும் அவதானிக்க முடிந்துள்ளது. இப்பாலத்தால் படகு சேவையை மேற்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்கவில்லை என்றும் கிண்ணியா நகர சபை தமது அதிகாரத்திற்கப்பால் சென்று இப்படகு சேவையை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளதாகவும் இதுவே மக்களின் உயிரை காவு கொள்ள ஏதுவாக அமைந்ததாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்படகு சேவை கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனையவர்களுக்கு கட்டணத்துடனும் இப்படகு சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ளது முறையானதா அல்லது முறையற்றதா என்பது ஒரு புறம் இருக்க இப்படகு போக்குவரத்திற்கு உரிய தரத்தை கொண்டதாக காணப்பட்டதா? ஒரு தடவையில் செல்ல வேண்டிய பயணிகளின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்பு அங்கிகள் போக்குவரத்தின் போது பயன்படுத்தப்பட்டதா என்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

கிடைக்கப் பெற்ற தவகல்களின்படி இப்படகு சில வள்ளங்களை சேர்த்தும் பரல்கள் மற்றும் மரப்பலகைகளை கொண்டும் தயாரிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துடன் குறித்த படகில் ஒரு தடவையில் 20 பேர் பயணிக்கக் கூடியதாக இருக்கையில் 30க்கு மேற்பட்டவர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்படடிருக்கவில்லை.

இது அபாயகரமான படகு சேவையாக காணப்பட்டதுடன் மக்கள் அதனை பொருட்படுத்தாது இப்படகு சேவையால் பயணம் செய்வது இலகுவானது என்று நினைத்து பயணம் மேற்கொண்டிருக்கின்றார்கள். இப்படகு சேவை குறித்து அனைவரும் அலட்சியமாக இருந்தமையே இவ்விபத்து ஏற்பட மூல காரணமாகும்.

படகு விபத்து ஏற்பட்டதும் குறித்த இடத்திற்கு பொதுமக்கள், முப்படை, பொலிசார், அரச அதிகாரிகளும் சென்று மீட்பு பணிகளை மேற்கொண்டனர். பாடசாலை தினமாக குறித்த நாள் அமையப் பெற்றதால் பாடசாலை மாணவர்களும் படகிலே சென்றுள்ளனர். உயிரிழந்த 06 பேருள் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரிகள் மற்றும் தாயும் அவரது மகளும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த இரு சகோதரிகளும் இணை பிரியாத நண்பர்களாகவே வாழ்ந்துள்ளனர். விபத்திற்கு முன்னர் அச்சிறுமிகளது காணொளியை பார்க்கையில் அனைவருக்கும் கண்ணீர் கொட்டும் அவர்களது மழலை வார்த்தைகளின் வெளிப்பாடு. தனது தந்தையோடு கதைத்த காணொளியாக அது அமையப் பெற்றிருக்கலாம். அவர்கள் அளவளாவிய விடயம் 'நீண்ட நாட்களுக்கு பின்னர் பாடசாலை செல்லவுள்ளோம். அதுவும் படகு பாதையில் போகவுள்ளோம். மீண்டும் லொக்டவுன் வருமோ தெரியல: போய்ட்டு வாரோம்' என்ற வாசகங்களை கொண்டதாக அக்கானொளி காணப்படுகின்றது.

மேலும் உயிரிழந்தவர்களுள் முன்பள்ளி ஆசிரியையும் அவரது 3வயது மதிக்கத்தக்க முன்பள்ளி மாணவனும் காணப்பட்டதுடன் தாய் தனது மகனை அணைத்தவாறு உயிரை இழந்த உணர்வுபூர்வமான சம்பவம் பதிவாகியது. கிண்ணியாவிலே சோகத்தை ஆழ்த்திய நிகழ்வு இவ்வாறிருக்க கிண்ணியா இளைஞர்கள் உட்பட பொது மக்கள் அனைவரும் வீதிக்கு வந்திறங்கியதுடன் கோசங்களை எழுப்பியவர்களாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இதனால் கிண்ணியாவிலே பாரிய பதற்ற நிலை ஏற்பட்டது. புஹாரியடி சந்தியிலே டயர் கொழுத்தப்பட்டு கண்டனங்கள் எழுப்பப்பட்டன. மறுபுறம் கிண்ணியா வைத்தியசாலை பிரதேசத்திலே பதற்றம் நிலவியதுடன் மக்கள் கூட்டமும் நிரம்பி வழிந்தது. கிளர்ந்தெழுந்த மக்களை கட்டுப்படுத்த பாதுகாப்பு படை மற்றும் பொலிசார் கடமையில் இருந்த போதும் கட்டுப்படுத்த முடியாத காரியமாகவே அமைந்திருந்தது.

கிண்ணியா நிலவரங்களை அறியும் நோக்குடனும் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சனடிபாடிகோரள உடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற ஏற்பாடாயிருந்த கிரமாத்துடனான கலந்துரையாடல் முன்னேற்ற குழு கூட்டத்தை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் நடத்துமாறு கோரி கிண்ணியாவுக்கு சென்றார். அரசாங்க அதிபர் கிண்ணியா பிரதேச செயலகத்திற்கு வருகை தந்தார். அதன்போது பிரதேச செயலாளர் எம்.ஏ. அரசாங்க அதிபருக்கு நிலைவரங்களை எடுத்துக் கூறினார்.

குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் மக்கள் கூட்டம் பிரதேச செயலகத்தை நோக்கி படையெடுத்தது. பிரதேச செயலகத்திற்குள் நுழைய முற்பட்ட மக்கள் கூட்டத்தை பொலிசார் தடுத்து நிறுத்தினர். இருப்பினும் பிரதான நுழைவாயில் கதவை உடைத்து உள்வர முற்பட்டனர். பொலிசார் உள்ளே வர விடாது தடுத்தனர் மக்கள். பிரதேச செயலகத்திற்கு முன்னால் உள்ள மையவாடியிலிருந்தவர்கள் பிரதேச செயலகத்தின் கண்ணாடிகளை கல்லினால் எறிந்து உடைத்தனர். பல கற்கள் வீசப்பட்டன. பல கண்ணாடிகள் உடைத்து சேதமாக்கப்பட்டன. பிரதேச செயலக முன்புற மதிலிலே காணப்பட்ட அலங்கார மின்குமிழ்கள் உடைத்து நொருக்கப்பட்டன. இதனால் பிரதேச செயலகத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டது. மேலும் கிளர்ந்தெழுந்த மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வீட்டுக்கும் சேதத்தை ஏற்படுத்தினர்.

வருகை தந்தவர்களது கோரிக்கைகளை முன்வைக்குமாறு அரசாங்க அதிபர் குறிப்பிட்டார். ஏற்பட்ட சம்பவம் இனிமேல் ஏற்படக் கூடாது. உயிரிழந்தவர்ளது வீடுகளுக்கு சென்று அவர்களது துக்கத்தில் கலந்து கொண்டு முடியுமான உதவிகளை செய்வதே அரசாங்க அதிபரின் நோக்கமாக அமைந்திருந்தது. இருப்பினும் மக்களோடு இரண்டற கலந்து செயற்படக் கூடிய வாய்ப்பு அரசாங்க அதிபரிற்கு கிடைக்கவில்லை. காரணம் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆக்ரோசமாக செயற்பட்டமையே ஆகும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களது கோரிக்கைகளை என்னவென்பதை அறிந்து செயற்பட அரசாங்க அதிபர் தயாராக இருந்தார்.

அரசாங்க அதிபர் உடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரை தொடர்பு கொண்டு கோரிக்கையை முன்வைத்தார். அதற்கிணங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இரண்டு வாரங்களுக்குள் இயந்திர படகு சேவையை மேற்கொள்வதாக தெரிவித்தனர்.

(22ம் பக்கம் பார்க்க)

ஆக்ரோஷம் பொங்கியெழ பொதுச் சொத்துகளுக்கும் தனியார் உடைமைகளுக்கும் சேதம் விளைவித்ததும், ஊடகவியலாளர்களைத் தாக்கியதும் விவேகமான செயல்களாவென்பதையும் சம்பந்தப்பட்டோர் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்

எஸ்.எம்.றசீன்...✍
(தகவல் உத்தியோகத்தர்), மாவட்ட ஊடகப் பிரிவு, மாவட்ட செயலகம், திருகோணமலை

படகு விபத்தில் அறுவர்...

03ஆம் பக்க தொடர்...

இந்நிலையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கமல் சில்வா, திருகோணமலை பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லயனல் குணதிலக்க ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரஹ்மனகேயின் வழி நடத்தலில், கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் மேலதிக சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது நேற்றுமுன்தினம் கிண்ணியா பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட நகர சபை தலைவர் நளீம், அங்கு கைது செய்யப்பட்டார். கைது தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ,

‘06 பேரின் உயிரிழப்புக்கு காரணமான சம்பவத்துக்கு மறைமுகமாக படகுப் பாதையை நடத்திச் செல்ல அனுமதியளித்துள்ளார். இது தொடர்பில் எந்த கவனத்தையும் அவர் செலுத்தவில்லை. இவ்வாறான பின்னணியிலேயே சம்பவத்துடன் அவருக்கு குற்றவியல் பொறுப்பு சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டர்’ என குறிப்பிட்டார்.

நாம் சிங்கள மக்களுக்கு...

03ஆம் பக்க தொடர்...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதில்லை என அரசாங்கம் தெரிவித்திருந்தபோதும் அரிசி இறக்குமதியை மேற்கொண்டு வருகிறது. அதற்கிணங்க வெளிநாடுகளில் இரசாயன உரம் பாவிக்கப்பட்டு நெற்பயிர்ச்செயகை மேற்கொள்ளப்பட்ட அரிசியை நாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றது என்பதை அரசு ஏன் கவனத்தில் கொள்ளவில்லை.

இரசாயன உர பாவனையை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்தால் அதனை கட்டம் கட்டமாக நடைமுறைப் படுத்தி இருக்கலாம் ஆனால் அரசாங்கம் மேற்கொண்ட திடீர் முடிவு காரணமாக விவசாய சமூம் பெரும் பாதிப்புகளையும் இழப்புகளையும் எதிர்நோக்கியுள்ளது என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

அது தொடர்பில் அரசாங்கம் தமது கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும். விவசாயிகள் பாதிப்படையாத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலத்திற்கேற்ற சட்டங்களை...

03ஆம் பக்க தொடர்...

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும்...

அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும் பணி சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது.

இத்தகு பெருமை மிகு பெருமானின் 142 ஆவது குருபூஜை நன்நாளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடு முழுவதும் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவும் குருபூஜையும் சேர்ந்த நிகழ்வாக, இன்று 27 ஆம் திகதி சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இலங்கை சைவநெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு, கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் இன்று 27 சனிக்கிழமை, காலை 8.00 மணிக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை...

03ஆம் பக்க தொடர்...

சந்திப்பின் பிரதிபலனாகவே, கலீட் கியாரி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அன்டோனியோ குட்ரெஸ்சின் வாழ்த்துகளை ஜனாதிபதிக்கு தெரிவித்த கலீட், ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை தொடர்பான விசேட அவதானத்துடன் நீண்ட காலம் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

துப்பாக்கி சூட்டில்...

03ஆம் பக்க தொடர்...

ஹெட்டிஹேவா கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பிரதான சந்தேகநபராக ‘டிங்கல் லசந்த’ என்றழைக்கப்படும் லசந்த என்பவரை அடையாளப்படுத்தினர். எவ்வாறாயினும் சம்வத்தை அடுத்து தலைமறைவாகியிருந்த டிங்கல் லசந்தவை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

தலைமறைவாகியிருந்த டிங்கல் லசந்தவை பொலிஸார் வியாழக்கிழமை கைது செய்தனர். சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவர் மறைந்திருந்த வீட்டில் கொலைக்காக பயன்படுத்திய கைத்துப்பாக்கி மற்றும் கைகுண்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டமைக்கமைய சந்தேகநபருடன் பொலிஸாரும் ஸ்தலத்துக்குச் சென்றனர்.

இதன்போது சந்தேக நபருக்கும் பொலிஸாருக்குமிடையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் சந்தேக நபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபரை கைது செய்வதற்காக சென்றபோது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் களுத்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்துள்ள சந்தேக நபர் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவராவார்.

குறிப்பாக பணத்துக்காக கொலை செய்தல், கொள்ளையடித்தல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்டவை தொடர்பில் தேடப்பட்ட முக்கிய சந்தேக நபராவார்.

இந்த துப்பாக்கிசூட்டு சம்பவம் தொடர்பில் களுத்துறை மாவட்டத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ், களுத்துறை குற்ற விசாரணைப்பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை பரீட்சை...

வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி, அடுத்த வாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக எல்.எம்.டி.தர்மசேனகடமைகளைப் பொறுப்பேற்க உள்ளார். சனத் பூஜித 2017 ஆண்டு நவம்பர் மாதம் முதல் பரீட்சை ஆணையாளர் நாயகமாக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

Molnupiravir Capsule மருந்தை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷநேற்று ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று (26) கூடிய கொவிட்19 தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஇந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

கொவிட்19 நோயாளிகளுக்காக, பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் மோல்னுபிரவீர் வில்லை (Molnupiravir Capsule) பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கொவிட்19 தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது.

இதன்போதே,கொவிட்19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டு வந்தது போன்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினூடாக இந்த வில்லைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

கடற்படையினரின்...

பயணிகள் படகொன்று இயக்கப்பட்டுள்ளது.

படகில் பயணிகள் பாதுகாப்பாக ஏறுவதற்கு தற்காலிக இடமொன்றும் கடற்படையால் அமைக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள்...

பாதுகாப்பமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மாஅதிபர் ஆகியோருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக கொழும்பு விசேட மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் அவர் கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிரான வழக்கில் மூன்றாவது நாளாகவும் நிலந்த ஜயவர்த்தன சாட்சி வழங்கினார்.

ஏப்ரல் 20 ஆம் திகதி கிடைத்த புலனாய்வுத் தகவலை தொலைபேசி மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்ததாக அவர் கூறியுள்ளார்.

எனினும், அந்தத் தகவல் தொடர்பில் அவர் அவ்வளவு கவனம் செலுத்தாமையை அறிந்து கொண்டமையினால், பாதுகாப்புச் செயலாளருக்கும் அதனை அறிவித்ததாக நிலந்த ஜயவர்தன சாட்சியம் வழங்கியுள்ளார்.

பொலிஸ் மாஅதிபர் இந்தத் தகவலை பாரதூரமாக கவனத்திற் கொள்ளவில்லையென்பது தமக்கு தெரிந்ததாக பாதுகாப்பு செயலாளரிடம் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட கடும்போக்குவாதிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்படலாமென கிடைத்த தகவல்கள், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கூட வெளிப்படுத்தப்படவில்லையெனவும் அதனை மறைத்து வைத்திருக்க வேண்டிய எவ்வித தேவையும் தமக்கு இருக்கவில்லையெனவும் நிலந்த ஜயவர்தன கூறியுள்ளார்.

நாட்டில் அவ்வேளையில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப அதனை வெளிப்படுத்துவதனால் ஏற்பட முடியுமான அனைத்து பிரச்சினைகளையும் தாம் எதிர்கொள்வதற்கு நேரிடுவதால், அது தொடர்பில் அன்றைய தினம் கலந்துரையாட முயற்சிக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பத்தகுந்த புலனாய்வு தகவல்களை பொறுப்புடன் வழங்கியிருந்த போதிலும், அதனை தடுத்து நிறுத்தாமைக்கான பொறுப்பை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அதிகாரிகள் என்ற வகையில், தமக்கு கிடைக்கும் தகவல்களை உரிய தரப்பினருக்கு அறிவிக்கும் செயற்பாட்டையே தம்மால் மேற்கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது, ஜனாதிபதி இலங்கையில் இருக்கவில்லை. எனவே, பாதுகாப்பு செயலாளருக்கு நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 20 ஆம் திகதி தனக்கு கிடைத்த அனைத்து புலனாய்வு தகவல்களையும் அவ்வேளையிலேயே பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்ததாகவும் நிலந்த ஜயவர்தன கூறியுள்ளார்.

நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெதிகே மற்றும் மொஹமட் இஸடீன் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிர்கால சந்ததியையே...

கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரிசி உட்பட சிறு தானிய உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது. அதிலிருந்து மீளவே இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.14,021 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் பாரபட்சமின்றி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாடுகள் முன்னேற கிராமங்கள் முன்னேற்றப்பட வேண்டும். கொரோனாவால் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. உள்ளாடைகளுக்குக் கூட வெளிநாடுகளில் தங்கியிருக்கும் நிலை குறித்து வெட்கப்பட வேண்டும்.எமக்குத் தேவையானதை நாமே உற்பத்தி செய்யும் நிலை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய முன்னேற்றத்துக்கு 72,492 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர், ஜனாதிபதி போன்றோரின் உருவப்பொம்மைகள் எரிக்கப்படுகின்றன. ஆனால் இது எதிர்கால சந்ததியின் உருவ பொம்மைகளே என்பதை எரிக்கப்படுகின்றன. இரசாயன பசளை பயன்பாட்டால் பாடசாலை மாணவர்களுக்குக் கூட புற்றுநோய் ஏற்படுகிறது.

இந்தியாவிலிருந்து நாடு...

தங்கியிருக்கின்றவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக பிரதி உயர்ஸ்தானிகரினால் கடற்றொழில் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்களுக்கு பயண ஏற்பாடுகளை இலவசமாக வழங்குவதற்கும் பொருட்களை எற்றிவருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்த பிரதி உயர் ஸ்தானிகர், அழைத்து வரப்படுகின்றவர்களின் செலவுகளுக்காக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முதல் கட்டமாக தலா 30,000 ரூபாய் வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும், அடுத்த வருடம் சுமார் 7,000 குடும்பங்களை அழைத்து வருவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அழைத்து வரப்படுகின்றவர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் சர்வதேச, தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இம் முயற்சிகளை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டுக்கு வருவதற்கு விரும்புகின்ற இலங்கையர், தங்களுடைய பூர்வீக இடங்களில் மீள்குடியேறி இயல்பு வாழ்கையை தொடர்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்ததுடன் இவ்விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷமற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷஆகியோரின் பூரணமான ஒத்துழைப்பத் தனக்கு கிடைக்குமெனவும் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவின் சிறப்பு முகாம்கங்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த மாதம் முல்லைத்தீவிற்கு விஜயம் மேற்கொண்டபோது சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு பகுதியினரின் உறவினர்கள் தன்னை சந்தித்தமையை சுட்டிக்காட்டியதுடன், அதுதொடர்பாக ஏற்கனவே இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

பூஸ்டர் தடுப்பூசி...

அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷஆலோசனை வழங்கினார்.

நேற்று (26) கூடிய கொவிட்19 தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

வைத்தியசாலைகளுக்கு கிளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சை நிலையத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தி ஒருமாதம் கடந்த தொற்றா நோய்களுக்கு இலக்காகியுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், இந்த மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம், புற்று நோயாளிகள், புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவோர், உறுப்பு மாற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டோர், இரத்த மாற்று செய்யப்பட்ட நோயாளிகள், தொற்றா நோய் காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த அனைவருக்கும், விசேட வைத்திய பரிந்துரைக்கமைய மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. உரிய சிகிச்சை நிலையங்கள் (கிளினிக்) அல்லது சனிக்கிழமை நாட்களிலும், இத்தரப்பினருக்கான மூன்றாவது தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்படுமென்று, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

உள்நாட்டு அறுவடையின்...

03ஆம் பக்க தொடர்...

நாட்டில் முன்னைய காலங்களில் இரசாயன உரம் இல்லாமலேயே விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது அவ்வாறில்லை கேள்வி அதிகமாக உள்ள நிலையில் இரசாயன உரம் மிகவும் அவசியமாகிறது. ஒரே இரவிலேயே இரசாயன உரத்தின் இறக்குமதியை நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் சரியானதல்ல.

அதற்காக நாம் விவசாய அமைச்சரை அல்லது ஜனாதிபதியை மட்டும் குறை கூற முடியாது. ஜனாதிபதிக்கு விவசாயத்துறை தொடர்பில் ஆலோசனை வழங்கியவர் யார் என்று தேடிப் பிடித்து அவரை தூக்கிலிட வேண்டும்.

குறிப்பாக நுவரெலிய மாவட்ட விவசாயிகள் உரத் தட்டுப்பாடு காரணமாக பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் உரப் பிரச்சினை காரணமாக மரக்கறிகளின் விலை மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. இந்த உர பிரச்சினைக்கு விரைவாக தீர்வு கண்டு விவசாயிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

புத்தளத்தில் நீர்த்தேக்க...

இதன்படி, தெதுரு ஓயா நிர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகள் ஐந்து அடி வரையும், இராஜாங்கணை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் எட்டு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் ஆறு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் நான்கு அடி வரையும், நான்கு வான் கதவுகள் இரண்டு அடிவரையும் தப்போவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் 06 அங்குலம் வரையும் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் 06 வான் கதவுகளும் இரண்டு அடி வரையும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நான்கு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மனுமீதான பரிசீலனைக்கு...

மனுக்கள் மீதான பரிசீலனைக்கு பிரதம நீதியரசர் தலைமையிலான 05 பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

மனுக்கள் மீதான பரிசீலனைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் எல்லே குணவன்ச தேரர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க மற்றும் இலங்கை மின்சார தொழில் நுட்ப சங்கத்தின் பொதுச்செயலாளர் ரஞ்சன் ஜயலால் பெரேரா ஆகியோரால் இந்த 03 அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷஉள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் 27 பேர், இலங்கை மின்சார சபை, வெஸ்ட் கோஸ்ட் பவர் தனியார் நிறுவனம், லக்தனவி நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை, இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம், கொள்வனவு செய்யும் அமெரிக்க நிறுவனம், நிதி,மின்சார, வலு சக்தி அமைச்சுக்களின் செயலர்கள், அமைச்சரவையின் செயலர் உள்ளிட்ட 43 தரப்பினர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

அரச பாடசாலைகளுக்கு...

தெரிவித்தார்.

கொவிட்19 பரவல் காரணமாகப் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

நாட்டில் கொவிட்19 பரவல் குறைவடைந்தது.தற்போது பாடசாலைகள் கட்டம் கட்டமாக மீண்டும் திறக்கப்பட்டு, கல்வி செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் பொலிஸாரை...

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் கடந்த ஒக்டோபர் 04 ஆம் திகதி இடம்பெற்ற மோதலொன்றின் போதே, இவர்கள் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து அதிகாரியொருவரையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பில் தேடப்பட்டுவந்த ஆறு பேரும் இவ்வாறு சுமார் ஒன்றரை மாதங்களின் பின்னர் இராஜகிரியவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

Gas சிலிண்டர் வெடிப்பு...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில், செயல்நிலையிலிருந்த மின்சார உபகரணங்களிலிருந்து வெளியான தீப்பொறிகளும் அதற்குக் காரணமாகுமென்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர், இரத்தினபுரி, அலவ்வ, வெலிகம உள்ளிட்ட சில பிரதேசங்களில், இதுபோன்று எரிவாயு கசிவு காரணமாக, ஏற்பட்ட தீப்பரவல் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டன.

இதேநேரம், நேற்று , கொட்டாவ பன்னிப்பிட்டிய பகுதியில் இது போன்றதொரு சம்பவம் பதிவானது. வீடொன்றில் இடம்பெற்ற இந்த வெடிப்பு சம்பவத்திற்கு எரிவாயு கசிவே காரணமாகுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டை இயல்பு நிலைக்கு ...

காட்டல்களின் கீழ் வழமை போன்று மீண்டும் செயற்படுத்த தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், திறக்கப்படும் இடங்கள் எந்த எல்லைக்குள்ளிருக்க வேண்டும் என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இடங்கள் பொதுமக்கள் பாவனைக்காக வழமை போன்று திறக்கப்பட்டாலும் கூட, முகக்கவசம் அணிதல், பூரண தடுப்பூசிகளைப் பெற்றிருத்தல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணல் போன்றன குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கு...

இதற்கமைய ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் இந்திய நடவடிக்கைகள் குறித்து சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவூறுத்த இதுவே சிறந்த சந்தர்ப்பமாகுமென அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க இது ஒரு சிறந்த வாய்ப்பெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா திகழ்வதாகவும், இந்தியாவுக்கான முழுமையான செயற்பாடுகளை மீள ஸ்தாபிக்க ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூஜிதவுக்கு எதிரான வழக்கில்...

சாட்சியமளிப்பதற்காக எதிர்வரும் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸ் மாஅதிபர் சி.டி விக்கிரமரத்னவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று (26) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நாமல் பலல்லே, ஆதித்ய படபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷதீன் ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

SLFP யுடன் எமக்கு எந்தவித...

சிறிசேன பாராளுமன்றத்தில் தெரிவித்த குற்றச்சாட்டை முழு நாடும் கண்டது. சேதனப் பசளை தொடர்பான முடிவை சு.க அமைச்சர்கள் இருக்கையில் அவர்களின் உடன்பாட்டுடனே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டன. கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். அவர் தெரிவித்த குற்றசாட்டை மறுக்கிறேன்.சேதனப் பசளை விவகாரத்தை தமது அரசியலுக்காக பயன்படுத்தி வருகிறார். விவசாயிகள் 50 வீத சேதனப் பசளைக்கு உடன்பட்டுள்ளனர் என்றார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இது தொடர்பில் கருத்துத் தெரிவித்ததோடு இந்தப் பிரச்சினையை மேலும் நீடித்துக் கொண்டு கொண்டு செல்லத் தேவையில்லை. யாராவது எம்.பியை பற்றி பேசுவதானால் அவர் சபையில் இருக்கும் போதே பேச வேண்டும் என சபை முதல்வர் கூறியிருந்தார். எனவே முன்னாள் ஜனாதிபதி சபையில் இருக்கும் வேளையில் இந்தப் விடயத்தை பேசியிருந்தால் அவருக்கும் பதில் வழங்கியிருக்கலாம். இந்த விடயத்தை தொடர்ந்தால் எமக்கும் பேச நேரிடுகிறது என்றார்.

அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருஷாபிஷேகம்

கற்பிட்டி பனையடி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருஷாபிஷேக நவோத்திர (1008 சத) சங்காபிஷேக விஷேட நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. புத்தளம் தில்லையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சோமசுந்தரம் தியாகராஜா குருக்கள் ஆதின கர்த்தா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பால்குட பவணி, மஹா யாகங்கள், வசந்த மண்டப பூஜைகள் என்பன இடம்பெற்றன. அத்துடன், இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் எனவும், அனர்த்தங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பு பெற வேண்டும் எனவும் இதன்போது விஷேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. படம்: கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

பாரதநாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷவர்தன் ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரம் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

பொலன்னறுவை சிறுநீரக வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலன்னறுவை மாவட்ட சிறுநீரக வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறை நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

12 பில்லியன் ரூபாய் செலவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலன்னறுவை தேசிய சிறுநீரக வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார அலுவலக பணியாளர்களின் குறைபாடு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட சேவையினை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வைத்திய சாலையை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளதுடன். கடந்த ஜூன் 11 ஆம் திகதி தற்போதய ஜனாதிபதியினால் வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இந்த வைத்தியசாலையில் 100 இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் இருந்த போதும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார அலுவலக பணியாளர்கள் இல்லாமையினால் 30 இயந்திரங்களை மாத்திரமே உபயோகிப்பதாகவும் வைத்திய சங்கத்தினர் தெரிவித்தனர்.

முதியோர் மற்றும் சிறுவர் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு 201 கட்டில்கள் இருந்த போதும் அலுவலக பணியாளர்கள் இல்லாமையினால் படுக்கை திறன் 25 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த வைத்தியசாலைக்கு பணிப்பாளர் ஒருவர் உள்ளிட்ட எண்ணிக்கைக்கான ஒப்புதல் சுகாதார அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ள போதும் அதை சுகாதார அமைச்சு நிறைவேற்ற தவறியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடும் மழை நீரில் மூழ்கியது கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் மஹா வித்தியாலயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் மஹா வித்தியாலய வளாகம் நீரில் மூழ்கியுள்ளது.

நீண்ட நாட்களுக்கு பின்னர் கற்றல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் முறையான திட்டமிடப்பட்ட வடிகாலமைப்பு வசதிகள் இல்லாமையினால் பாடசாலை வளாகம் நீரில் மூழ்கியுள்ளது. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் வெகுவாக பாதிக்கப்பட்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மழை காலம் தொடரும் போதெல்லாம் இந்நிலைக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் தொடர்ந்தும் முகம்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவிக்கப்பட்ட போதும் இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பாடசாலை நிர்வாகம், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் அங்கலாய்கின்றனர்.

சைவப்புலவர் அமரர் சு. செல்லத்துரையின் சிவகதிப் பிரார்த்தனையும் "மூலவிருட்சம்" நூல் வெளியீடும்

இளவாலை மூதறிஞர் சைவப் புலவர் அமரர் சு. செல்லத்துரையின் சிவகதிப் பிரார்த்தனையும் "மூலவிருட்சம்" நூல் வெளியீடும் நாளை (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலையிலுள்ள கேணியடி சிவபூமிமடத்தில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை சைவப்புலவர் கு. றஜீபனும், நூல் வெளியீட்டுரையை ராஜி கெங்காதரனும் நூல் நயவுரையை பா. மகாலிங்கசிவமும் நினைவுரையை வைத்தியகலாநிதி த. பேரானந்தராஜா (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

புத்தளம் குருநாகல் வீதியில் அமைந்திருந்த பழைய தூர்ந்து போயிருந்த கட்டடங்கள் நகர சபையினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் மேற்பார்வையின் கீழ், புத்தளத்தில் அமைக்கப்பட்டு வரும் அல்பா வர்த்தக மத்திய நிலைய வாகனத் தரிப்பிடங்களுக்குத் தேவையான காணிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இவை அகற்றப்பட்டன.

படம்: புத்தளம் தினகரன் நிருபர்

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

ஐந்து நீர்த்தேக்கங்களின் 30 வான் கதவுகள் நேற்றுமுன்தினம் முதல் (25) திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

குறித்த நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன்படி, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகள் ஐந்து அடி வரையும், ராஜாங்கன நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகள் எட்டு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் ஆறு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் நான்கு அடி வரையும், நான்கு வான் கதவுகள் இரண்டு அடிவரையும் தப்போவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் ஒரு அடி வரையும், இரண்டு வான் கதவுகள் 6 அங்குலம் வரையும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் ஒரு அடி வரையும் அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் நான்கு அடி வரையும் திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கடமை நேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், தெதுரு ஓயா, ராஜாங்கன, இங்கினிமிட்டிய, அங்கமுவ மற்றும் தப்போவ நீர்த்தேக்கங்களுக்கு அண்டிய தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ராவல்பிண்டி வர்த்தக, தொழில்துறை...

(04ஆம் பக்கத் தொடர்)

வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

இவ்விழாவில் உரையாற்றிய வர்த்தக அமைச்சர் இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் பாகிஸ்தானின் முன்முயற்சியை வரவேற்றதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவினை சுட்டிக் காட்டினார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இருதரப்பு வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் எவ்வாறாயினும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முழு சாத்தியப்பாட்டையும் உறுதி செய்ய தொடர்ச்சியான முயற்சிகள் தேவை எனவும் வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டியதோடு பாகிஸ்தானுக்கான இலங்கை பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்தும் வகையில் இலங்கை வர்த்தக நாமங்கள் மற்றும் தயாரிப்புகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கைக்கான பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் உரையாற்றும் போது, பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA) செய்து கொண்ட முதல் நாடு என்ற பெருமையை இலங்கை அனுபவிக்கிறது என்று சுட்டிக் காட்டியதோடு, பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அமைய, வர்த்தகம் மற்றும் முதலீட்டின் உயர் சாத்தியமுள்ள துறைகளில் கூட்டு முயற்சிகள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு உறவுகளை மேலும் உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். இலங்கையுடனான உயர் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள பாகிஸ்தான் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் பதில் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

வர்த்தகச் செயலர் திருமதி அஸ்மா கமால், இருதரப்பு வர்த்தகத்தின் சாத்தியமான பகுதிகள், சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் வழிகள் ஆகியவற்றை விரிவாக விளக்கப்படுத்தியதோடு இக்கருத்தரங்கில் நோக்கம் மற்றும் அடைவுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்த அவர், எதிர்காலத்திலும் இது போன்ற நிகழ்வுகளின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தார்.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தக மற்றும் முதலீட்டுப் பிரிவானது, இலங்கையில் முதலீட்டாளர்கள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பாகிஸ்தானிய வர்த்தக சமூகத்தினரிடையே வர்த்தக ரீதியிலான கலந்தாலோசனை ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தது.

பாகிஸ்தானின் ராவல்பிண்டி வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் (CCC) மற்றும் இலங்கை வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (FCCISL) ஆகியவற்றுக்கிடையில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கைச்சாத்திடப்பட்டன. அதே வேளையில், மருந்து உற்பத்தி, வாகன மற்றும் கல்வி உள்ளிட்ட துறைகளில் பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் தனியார் வர்த்தக நிறுவனங்களுக்கு இடையே ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கையில் நிலவும் கொவிட் 19 விதிமுறைகளின்படி இந்நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

திகதி 25.11.2021 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4597
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,338,680.00
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 2 8 6 6 4 8 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,812,190.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2892
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,906,060.00
ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கங்கள் 09 35 57 77 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,095,364.80

Mega POWER மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 945
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,571,540.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 155,247,806.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q | சுப்பர் இலக்கம் 11 | வெற்றி இலக்கங்கள் 39 41 69 73

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 627
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,486,920.00
ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கங்கள் 11 52 55 72 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,217,372.00

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1171
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,017,720.00
வெற்றி இலக்கம் மேஷம் | வெற்றி இலக்கங்கள் 5 2 4 9 3 2 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,579,712.00
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்ட்டத்தை கொண்டு வருகின்றது.

25.11.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 537,374
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 21,320,920.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள 18
• ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
• பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
• வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.
ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

கேள்வி கோரல்

கணனி மற்று கணனி துணைப்பாகங்களை கொள்வனவு செய்தல்

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் இவ் வைத்தியசாலைக்கு தேவையான கணனி மற்றும் கணனி துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (கீழ்க்காணுமாறு)

01) Desktop Computers - 25 nos
02) Laser Printers - 20 nos
03) USB Pendrives - 25 Nos
04) Portable Wi - Fi router - 05 nos
05) External Hard Disk - 10 nos
06) Wireless access point - 02 nos

(1) இது பற்றிய ஆர்வம் காட்டுகின்றவர்கள் கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ. 2,000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணமொன்றை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது அடையாள அட்டையை சமர்ப்பித்து 2021.11.26 முதல் 2021.12.06 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இவ் வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

(2) கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கணனி மற்றும் கணனி துணைப்பாகங்களை கொள்வனவு செய்தல் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை களுபோவில தெஹிவளை 2021.12.07 என்று குறிப்பிட்டு 2021.12.07 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர் பிரதேச பெறுகைக்குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்திய சாலை, களுபோவில, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2021.12.07 மு. ப. 10.00 இற்கு கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(3) கேள்வி ஆவணங்களை 02 பிரதிகள் மூளப்பிரதி மற்றும் நகல் பிரதியென்று குறிப்பிட்டு வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் 02ஐ தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதி நிதிக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

(5) கேள்வி ஆவணங்களை கட்டணங்கள் இன்றி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் பரீட்சிக்கலாம்.

(6) அரச ஒப்பந்தங்கள் நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

(7) குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழையுங்கள்
(தொ.பே. இலக்கம் 011 2763038)

தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,
களுபோவில, தெஹிவளை.

மஹாவலி வலயங்களின் குடியேற்றங்களில் கால்வாய் மற்றும் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

இலங்கை மஹாவலி அதிகார சபை

விலைமனு அறிவித்தலுக்கான பிற்சேர்க்கை

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கு உரித்தான 2021.11.05 ஆம் திகதியன்று ஒப்சேவர் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனு அறிவித்தல் தொடர்பானது.

ஒப்பந்த இலக்கம்	வேலைக்கான விளக்கம்	தேவைப்படும் CIDA துறை மற்றும் பதிவுத் தரம்	மீளளிக்கப்படாத கட்டணம்
DDG/TS/CON/HW/KOT/SCADA/21	Refurbishment of Spillway Automation PLC & SCADA System, EIC Office Kotmale – Kadadora (Estimated value – Rs.21.3 Mn without VAT, Contract period – 120 days)	EM 1 for Electrical & Mechanical Services	Rs.5,000.00

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதியானது 2021.12.03 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்கள் 2021.12.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும்.

வளமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500 ஆம் இலக்கத்தின் 3 ஆம் மாடியின் இலங்கை மஹாவலி அதிகாரசபை தொழில்நுட்ப சேவைகளுக்கான பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் பார்வையிடுவதற்காகவும் பரீட்சிப்பதற்காகவும் http://mahaweli.gov.lk என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன தெளிவாக குறிப்பிடப்பட்டு 2021.12.03 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அல்லது தூதஞ்சல் சேவையில் பணிப்பாளர் நாயகம், இலங்கை மஹாவலி அதிகாரசபை, 9 ஆம் மாடி, இல. 500, **T.B.** ஜாயா மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனு திறத்தல் கூட்டமானது 2021.12.03 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு திறத்தல் கூட்டத்திற்கு நேரடியாக பங்குபெற இயலாதவர்களுக்காக zoom technology மூலமாக நடாத்தப்படும்.

மூலப்பிரதி விலைமனு அறிவித்தலிலுள்ள ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றமில்லை.

தற்போதுள்ள கோவிட்-19 தொற்று சூழ்நிலையை தவிர்ப்பதற்காக விலைமனுதாரர்கள் இலத்திரனியல் ஊடகத்தை பாவிக்குமாறு உற்சாகப்படுத்துகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு, இலங்கை மஹாவலி அதிகாரசபை தொழில்நுட்ப சேவைகள் பிரிவுடன் பின்வருமாறு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 011-2689651, 011-2687475. மின்னஞ்சல்: ddgts.masl@gmail.com **or** mdswrppddigana@gmail.com Division of Major Dams & Reservoir Operations of MASL at Digana on 0812-374383, 0812-374259.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மஹாவலி அதிகார சபை.

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை

பெறுகை அறிவித்தல்

2022ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் பின்வரும் ஆதனங்களை 2022ஆம் வருடத்தில் இடக் குத்தகைக்கு வழங்குவதற்கான விலைமனுக்கள் 2021-11-26ஆம் திகதி முதல் 2021-12-15ஆம் திகதி வரை வழங்கப்படும். உங்களுக்குத் தேவையானால் குறித்த விலைமனுக்கள் மற்றும் நிபந்தனைகளை மேற்படி தினங்களுக்கிடையில் அரச அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 16.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள் 2021-12-15ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே பி.ப. 3.00 மணிக்குத் திறக்கப்படும்.

மீன் தட்டுகள்

குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு கடல் மீன் தட்டு
உனகஸ்வெவ சந்தியின் கடல் மீன் தட்டு
விஜயபுர சந்தியின் குளத்து மீன் தட்டு
சிராவஸ்திபுர சந்தி கடல் மீன் தட்டு
நெலும்குளம் சிறிய கால்வாய்க்கு அருகிலுள்ள குளத்து மீன் தட்டு
குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு குளத்து மீன் தட்டு
ஆலங்குளம் குளத்திற்கு முன்னாலுள்ள குளத்து மீன் தட்டு
குடா நெலுபெவ சந்தை இடப்பரப்பு குளத்து மீன் தட்டு
ஜனஹித சந்தியின் மீன் தட்டு
பிரதேச சபை சந்தியின் மீன் தட்டு
கவரன்குளம் சந்தியின் குளத்து மீன் தட்டு
பாலாவிகுளம் சந்தியின் குளத்து மீன் தட்டு
5 கால்வாய் சந்தியின் குளத்து மீன் தட்டு
நாச்சாதுவ சந்தி மீன் தட்டு
கிறவுன் பிஸ்கட் நிறுவனம் அருகிலுள்ள குளத்து மீன் தட்டு
ஞானிக்குளம் 3ஆம் மைக்கல் அருகிலுள்ள மீன் தட்டு
நெலும்குளம் பெரிய கால்வாய் அருகிலுள்ள மீன் தட்டு
மொரகொட சந்திக்கு அருகிலுள்ள மீன் தட்டு

இறைச்சிக் கடைகள்

அத்துருவெல்ல மாட்டிறைச்சிக் கடை
குடா நெலுபெவ மாட்டிறைச்சிக் கடை

பாற்சாலைகள்

குடா நெலும்பெவ பிரதேச வைத்தியசாலை அருகிலுள்ள பாற்சாலை

ஏனையவை

ஜயபிம விடுமுறை விடுதி
நெலும்பெவ உப அலுவலக சிற்றுண்டிச்சாலை
கவரன்குளம் பொருளாதார நிலையத்திலுள்ள மரக்கறி விற்பனை நிலையம்

2021 நவம்பர் 25ஆம் திகதி

எஸ். பீ. குமாரதாச
தலைவர்,
கி.நு.ப. பிரதேச சபை,
விஜயபுர.

பெறுகை அறிவித்தல்

மாவட்ட பொது வைத்தியசாலை - பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் 2021ஆம் வருடத்திற்கான கட்டிட நிர்மாணங்கள், திருத்தவேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களை நியமித்துக் கொள்வதற்காக மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இயைபாக 2021-12-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள்

இல.	ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர்	ஒப்பந்த இலக்கம்	விலைமனு ஆவணக் கட்டணம்	ICTAD தரம்	விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா)
1	அரச ஒசுசலவிற்கு அருகிலிருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் வரை வைத்தியசாலையின் முன்னால் எல்லைச் சுவரை நிர்மாணித்தல்	DGHP/ACC/F8/20-18/2021	3,500.00	C7 அல்லது C6	125,000.00
2	ஆவண வைப்பகமொன்றுக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல்	DGHP/ACC/F8/20-19/2021	3,500.00	C6 அல்லது C4	400,000.00

02. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

இல.	ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர்	எண்ணிக்கை	குறிப்பீட்டிலக்கம்	விலைமனு ஆவணக் கட்டணம்	விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா)
1	OPERATION THEATER LAMP (CEILING)	02	DGHP/ACC/F12/ME/OT.L.30/2021	3,500.00	160,000.00
2	INFANT T-PIECE RESUSCITATOR	02	DGHP/ACC/F12/ME/IR.31/2021	3,500.00	60,000.00
3	OTOACOUSTIC EMMISIONS(OAE) SCREENER	01	DGHP/ACC/F12/ME/OAE.32/2021	3,500.00	100,000.00
4	BALOON PUMP	01	DGHP/ACC/F12/ME/B.P.33/2021	3,500.00	400,000.00
5	PROTABLE X-RAY MACHINE	01	DGHP/ACC/F12/ME/P. X-Ray.34/2021	3,500.00	120,000.00
6	PROTABLE ULTRA SOUND SCANER HIGH END	01	DGHP/ACC/F12/ME/ P.U.S.H.E.35/2021	3,500.00	140,000.00
7	MULTIPARA MONITOR HIGH END	10	DGHP/ACC/F12/ME/ MU.MO.H.E.36 /2021	3,500.00	300,000.00

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்காக விலைகளைக் கோருகையில் 50 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த நிர்மாணங்களுக்கு பிராந்திய முன்னுரிமையாக 05% மற்றும் CIDA முன்னுரிமை (Regional Preference) 4/2016(II) அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
02. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விலைமனு ஆவணக் கட்டணமாக இந்த வைத்தியசாலையின் கணக்காளருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது கதுருவெல இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 7040277, DIRECTOR – DISTRICT GENERAL HOSPITAL POLONNARUWA என்ற கணக்கிற்கு பணத்தை வைப்பிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விலைமனுக்களைக் கொள்வனவு செய்யும் போது கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள் தவிர கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் உருப்படிக்கு இயைபான விலைக்கோரல் பெறுமதி 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டால், விலைமனுதாரர் அல்லது அவர் சார்பான பிரதிநிதியொருவர், உப பிரதிநிதியொருவர் அல்லது முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் கொழும்பு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. இந்த விலைக்கோரலுக்கு இயைபான விலைக்கோரல் முன்னேடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2021-12-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலையின் 02ஆம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ள உத்தேசிக்கும் வழங்குநர்கள் நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் ஊடாக 2021-12-07ஆம் திகதிக்கு முன் dghpolonnaruwapro@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
05. விலைக்கோரல் தனி உருப்படியாக முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் தனி உருப்படியாகவே விலைக்கோரல் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது பதிலீடுகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கூடாது என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
07. ஆர்வம் கொண்ட மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள் / முகவர்கள் அல்லது பெயரிடப்படுபவர்களால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியில் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    i. பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வரையப்பட்ட கடிதத் தலைப்பிலான எழுத்து மூலக் கடிதம்
    ii. மேற்காணும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
08. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 362) எனும் தொலைபேசி இலக்கங்களின் வாயிலாக விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2021-12-16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கடமை நாட்களில் மட்டும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகை மற்றும் கிரய முகாமைத்துவ பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
09. பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2021-12-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து (அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு) பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் கலந்து கொள்வாரானால் அதை உறுதி செய்யும் ஆவணத்தை நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. இந்தப் பெறுகை தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை.
2021-11-25.

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

Supply and Delivery of GI Pipes, Insect Proof Nets and Plastic Crates for Dry Chili Production Program in Eastern and North Central Provinces

1. கமத்தொழில் அமைச்சின் விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் (ASMP) ஆகுசெலவிற்காக 558.63 மில்லியன் அ.ஐ. டொலருக்கு நிகரான கடனொன்றை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **Supply and Delivery of GI Pipes, Insect Proof Nets and Plastic Crates for Dry Chili Production Program in Eastern and North Central Provinces** என்ற ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. Supply and Delivery of GI Pipes, Insect Proof Nets and Plastic Crates for Dry Chili Production Program in Eastern and North Central Provinces என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.

விளக்கம்	ஒப்பந்த இலக்கம்	எண்ணிக்கை	விலைமனுப்பிணை பெறுமதி	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்)
மட்டக்களப்பு மாவட்டத்திற்காக (களுதாவளை கொத்தணி) ஜி.ஐ குழாய்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்	LK-MOA-PMU-252040-GO-RFB	1900 Nos	160,000.00	5000.00
மட்டக்களப்பு மாவட்டத்திற்காக (களுதாவளை கொத்தணி) பூச்சி தடுப்பு வலைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்	LK-MOA-PMU-252038-GO-RFB	20000 L.M.	110,000.00	5000.00
வட மத்திய மாகாணத்திற்காக பிளாஸ்டிக் பெட்டிகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்	LK-MOA-PMU-251784-GO-RFB	7000 Nos	110,000.00	5000.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் அமைச்சு, விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகைத் திணைக்களத்திலிருந்து 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக 2021.11.26 ஆம் திகதியிலிருந்து 2021.12.16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது செயற்றிட்ட நிதி முகாமையாளரிடம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2021.12.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் அவைகளை முடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன் தற்போது நாட்டில் நிலவும் தொற்று சூழ்நிலை காரணமாக விலைமனுதாரர்கள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விலைமனுக்களின் விலைகள் விலைமனுக்களை திறந்த பின்னர் விரைவாகவே மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக சேர்க்கப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இரு தபாலுறைகளும் இன்னொரு தனி தபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் பின்வரும் சொற்கள் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். "Supply and Delivery of GI Pipes, Insect Proof Nets and Plastic Crates for Dry Chili Production Program in Eastern and North Central Provinces".
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகை குழு,
விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல.

தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521
திகதி: 26.11.2021.

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service

மவுண்ட் ஜீன் தோட்டத்தில் பாரிய மரங்கள் வெட்டப்படுவதாக புகார்

மஸ்கெலியா நிருபர்

வட்டவளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட அரச பெருந்தோட்ட யாக்கத்துக்கு உரித்தான, மவுண்ட் ஜீன் தோட்டத்தில் கடந்த ஆறுமாத காலமாக பாரிய மரங்கள் தறிக்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இத்தோட்டத்தில் கடந்தகாலங்களில் 800 ஏக்கரில் தேயிலைப் பயிர் செய்யப்பட்டிருந்த போதும்.

அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் இத்தோட்டம் சிறிது சிறிதாக காடாகி தற்போது 110 ஏக்கர் காணியில் தேயிலைப் பயிர் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாத காலமாக தோட்ட நிர்வாகத்தால் 600 பாரிய மரங்கள் வெட்ட பணிப்புரை இருந்தபோதும், சுமார் இரண்டாயிரம் மரங்களுக்கு மேல் வெட்டப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தோட்டத்திலுள்ள சகல தேயிலைசெடிகளும் பழுதடைந்து போயுள்ளதாக அங்கு பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது தோட்டத்தில் 110 தொழிலாளர்கள் பணி புரிவதாகவும், இதில் 65 பெண் தொழிலாளர்களுக்கும் 45 ஆண் தொழிலாளர்களுக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் பணி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இவ்வாறு தேயிலை செடிகள் அழிக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் மேலும் தங்களுக்கு வேலையின்றி வேறு தொழில்களை நாடவேண்டி வரும் என கவலைதெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தறிக்கப்படும் மரத்திற்கு பெருந்தோட்டநிறுவனங்கள் பணம் பெற்றபோதும் தொழிலாளர்கள் எவ்விதமான கொடுப்பனவுகளையோ, நன்மையோ பெறுவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் வெட்டப்பட்ட போதிலும் அதன் பெறுமதி பல கோடி ரூபாவாகும்.

இது குறித்து அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

கொவிட் விழிப்புணர்வு; துண்டுப்பிரசுரங்கள் செந்தில் தொண்டமானிடம் கையளிப்பு

கொவிட் விழிப்புணர்வு தொடர்பிலான உலக சுகாதார அமைப்பின் தமிழ் மொழி மூலமான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் பிரதிகள் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் கிளையின் அழைப்பின் பேரில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான், வைத்தியர் அமல் ஹர்ஷா மற்றும் யுனிசெப் தலைவர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

லயன்ஸ் கழகத்தின் மூலம் இரத்தினபுரி போதானா வைத்தியசாலை கொவிட் 19 வார்ட்டு தொகுதிக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரண பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பெண் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் சமூக அபிவிருத்தியில் ஆர்வம் காட்ட வேண்டும்

முன்னாள் எம்.பி திலகராஜ்

பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சமூக அபிவிருத்தியில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

தலவத்துகொட கிராண்ட் மொனார்ச் விருந்தக மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு எனும் 2018ஆம் ஆண்டு முதலான ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது. இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. அந்த தெரிவு முறையில் குறைப்பாடுகள் உள்ளபோதும் பெண்கள் தமது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்த இந்த ஏற்பாடு வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பௌதீக அபிவிருத்தி விடயங்களைக் காட்டிலும் உள்ளூர் மட்டத்தில் சமூக அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் பெண் உறுப்பினர்கள் ஆர்வம் காட்டுதல் அவசியம்.

தூய்மையான அரசியல் கலாசாரம் ஒன்றை கட்டியெழுப்பும் பணியை பாராளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் சுமார் 25 பேர் அளவில் செயற்பட்டோம். அதில் பெண் அரசியல் பங்கேற்பை உறுதி செய்வது ஓர் அம்சமாகும். அதேபோல மதிப்பாய்வு சம்பந்தமான கொள்கை மற்றும் சட்ட உருவாக்கத்தைச் செய்வதிலும் எமது பங்களிப்பு இருந்தது.

உண்மையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளும் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். பெண் உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தில் 25 சதவீத இட ஒதுக்கீட்டு நடைமுறை 2018 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் அவர்களின் அரசியல் பங்களிப்புக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மலையக அரசியல் தளத்தில் உரையாடல் அரங்கம் ஒன்று எனது தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. அத்தகைய அரங்கத்தின் இலச்சினையை, அரசியலில் ஆண் பெண் சமவாய்ப்பை உறுதி செய்யும் வகையில் வடிவமைத்துள்ளோம். அத்துடன் பெண் தலைமைத்துவ முன்னெடுப்புகளுக்கு எப்போதும் எமது ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவியை கடத்தி துஷ்பிரயோகம் செய்ய முயற்சி

தைரியமாக போராடி தப்பிய மாணவி

பண்டாரவளை, எல்ல கரந்தகொல்ல பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த நபரொருவரை மாணவி தைரியமாக எதிர்கொண்டு தப்பித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

17 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு தப்பித்துள்ளார்.

நேற்று முன்தினம் (25) பாடசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வேளையிலேயே அவர் இச்சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

கிராமத்திற்குச் செல்லும் கிளை வீதியில், ஸ்கூட்டரில் வந்த ஒருவர், வீதியில் மாணவியை மறித்து, தாக்கி, அருகில் உள்ள பாழடைந்த தோட்டத்திற்கு இழுத்துச் சென்றுள்ளார்.

பின்னர், சந்தேகநபர் மாணவியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றபோது, மாணவி சந்தேகநபரின் முகத்தை கடித்து, கல்லால் முகத்தில் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் சந்தேகநபரை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பிரதேசம் பாழடைந்த பகுதியாக காணப்படுவதால் கடந்த காலத்திலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் புதிதாக 44 பேருக்கு கொரோனா

மாத்தளை சுழற்சி நிருபர்

மாத்தளை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் தொற்றாளர்களாக 44 பேர் புதிதாக இனம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. மாத்தளை மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அண்மையில் சடுதியாக குறைந்திருந்த நிலையில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 44 பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அன்றைய தினமே கொரோனா மரணங்கள் இரண்டு பதிவாகியுள்ளன.

மீண்டும் மாத்தளை மாவட்டத்தில் கொரோனா பரவுவதை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் சமூக

இருவர் மரணம்

இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றி செயற்படுவதன் மூலம் இந்நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என மேற்படி சுகாதார பணிமனை காரியாலயத்தின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு -பதுளை பிரதான பாதையில் பயணிப்போர் அவதானம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

கடும் மழை காரணமாக கொழும்பு பதுளை பிரதான வீதி வழுக்கும் தன்மை கொண்டுள்ளதாக போக்குவரத்து பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே வாகன விபத்துக்களை கட்டுப்படுத்த பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பலாங்கொடை இம்புல்பே பகுதியிலிருந்து பலாங்கொடை நகர எல்லை வரையிலும் மாதொல வரையுள்ள பகுதியும் அவதான நிலைமை உள்ள இடங்களாக உள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

மழையுடன் பாதையில் ஏற்பட்டுள்ள ஈரலிப்பு தன்மை காரணமாக அதிகாலையிலும் மாலை வேளையிலும் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் வேண்டியுள்ளனர்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வுகளை இங்கு காணலாம். ஆளுநர்

சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் ஓவியக் கண்காட்சி

பலாங்கொடை தினகரன் நிருபர்

சப்ரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள பிள்ளைகளின் திறமைகளை வெளிக்காட்டும் சித்திர ஓவிய கண்காட்சி கடந்த 23ஆம் திகதி இரத்தினபுரி மாகாணசபை கேட்போர் கூடத்தில் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம் பெற்றது.

இரத்தினபுரி கேகாலை இரண்டு மாவட்டங்களில் உள்ள சிறுவர் அபிவிருத்தி 16 மத்திய நிலையங்களில் இருந்து சுமார் 450 பிள்ளைகள் இந்நிகழ்வில் பங்கு கொண்டனர். இவர்கள் ஐந்து வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

பெற்றோர்களினால் நீதிமன்றங்களின் மூலம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் இவ்வாறு 16 மத்திய நிலையங்களில் தங்கியுள்ளனர். சப்ரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் மூலம் இவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிகழ்வில் பிள்ளைகளின் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் திறமை காட்டிய மாணவமாணவிகளுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ வழங்கி வைத்தார்.

காணவில்லை

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை நகரை வசிப்பிடமாக கொண்ட சி.முத்துசாமி ஐயர் (வயது 72) என்பவரை காணவில்லையென அவரது குடும்பத்தவர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்ற இவர் இன்று வரை வீடு திரும்பவில்லையென அவரது குடும்பத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரை கண்டால் உடனே தகவல் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். குறித்த நபர் காணமால் போன இரண்டு தினங்களில் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் மகனால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தன்னுடைய தந்தை தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக தனது 0766940905, 076 6184984 தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தருமாறும் கோரியுள்ளார்.

ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

தனது 39 வருட ஆசிரியர், அதிபர், கல்விப் பணிப்பாளர் சேவையில் இருந்து மலர்விழி சுப்பிரமணியம் அண்மையில் ஓய்வு பெற்றார். விஞ்ஞான, கணித பாட ஆசிரியராக இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் தொழிலை ஆரம்பித்த இவர் பின்னர் கந்தபளை மெதடிஸ்கல் லூரியில் ஆசிரியராக பணியாற்றினார்.

1985ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை பார்க் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி அதன் பின்னர் கந்தபளை மெதடிஸ்ட் கல்லூரியில் பிரதி அதிபராகவும் பின்னர் அதிபராகவும் 2007ஆம் ஆண்டு வரை கடமையாற்றினார்.

2007ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்ட இவர் நுவரெலியா கல்வி வலயத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

சிறிது காலத்தின் பின்னர் நுவரெலியா வலயத்தின் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பான உதவி கல்வி பணிப்பாளராக பொறுப்பேற்று தான் ஓய்வு பெறும் வரை தனது கடமைகளை மிக சிறப்பாக செயற்படுத்தினார்.

மத்திய மாகாணத்திலுள்ள மிக சிரேஸ்ட திட்டமிடல் பிரிவு கல்வி பணிப்பாளராகவும் கல்வி திட்டமிடல் துறையில் மிகச் சிறந்த வளவாளராகவும் தான் ஓய்வு பெறும் வரை மிக சிறப்பாகவும் துடிப்புடனும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச செய்திகள்

பல பிறழ்வுகளுடனான புதிய கொரோனா திரிபு தென்னாபிரிக்காவில் கண்டுபிடிப்பு

உலக நாடுகள் எச்சரிக்கை நடவடிக்கை

தென்னாபிரிக்காவில் நோய்த் தொற்று அதிகரிப்பதற்கு காரணமானதாகக் கூறப்படும் அதிக எண்ணிக்கையான மரபணு பிறழ்வுகளுடன் புதிய கொவிட்19 திரிபு ஒன்று கண்டுடிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடாக உள்ள தென்னாபிரிக்காவில் இந்த மாதம் ஆரம்பம் தொடக்கம் தினசரி நோய்த் தொற்று சம்பவங்கள் பத்து மடங்காக அதிகரித்துள்ளது.

இதனை அடுத்து பிரிட்டன் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகள் தென்னாபிரிக்காவுக்கு பயணத் தடை விதித்துள்ளன. தெற்கு ஆபிரிக்காவின் மேலும் ஐந்து நாடுகளில் இந்த புதிய வைரஸ் திரிபு பற்றிய கவலை அதிகரித்துள்ளது.

இந்த புதிய திரிபு டெல்டா திரிபை விடவும் அதிக தொற்று கொண்டதாகவும் தற்போதிருக்கு தடுப்பு மருந்துகளை எதிர்க்கும் தன்மை கொண்டது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

'துரதிருஷ்டவசமாக நாம் புதிய திரிபு ஒன்றை அவதானித்துள்ளோம். அதுவே தென்னாபிரிக்காவில் கவலை அதிகரிக்கக் காரணமாகும்' என்று வைரஸ் மருத்துவ நிபுணர் டுலியோ டி ஒலிவேரியா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பி.1.1.529 என்று அழைக்கப்படும் இந்த திரிபு 'மிக அதிக எண்ணிக்கையான மரபணு பிறழ்வுகளை கொண்டிருக்கிறது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த திரிபுக்கு உலக சுகாதார அமைப்பு கிரேக்க பெயர் ஒன்றை சூட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'துரதிருஷ்டவசமாக இது தொற்று நோயின் மறுபிறப்பை ஏற்படுத்துகிறது' என்று அந்த மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

தென்னாபிரிக்காவில் இருந்து பொட்ஸ்வானா மற்றும் ஹொங்கொங் சென்ற பயணிகளிடமும் இந்த வைரஸ் திரிபு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக மருத்துவர் டி ஒலிவேரியா குறிப்பிட்டுள்ளார்.

இந்த வைரஸ் திரிபு பற்றி தீவிரமாக அவதானித்து வருவதாக குறிப்பிட்டிருக்கும் உலக சுகாதார அமைப்பு இதனை ஒரு திரிபாக பார்ப்பது மற்றும் இது பற்றி கவலை கொள்வது பற்றி ஆராய்வதற்கு நேற்று முக்கிய கூட்டம் ஒன்றையும் அந்த அமைப்பு நடத்தியது. 'ஆரம்பக்கட்ட ஆய்வில் இந்த வைரஸ் திரிபு பெரும் எண்ணிக்கையிலான பிறழ்வுகளை கொண்டிருப்பதை காட்டுவதோடு இது பற்றி தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது' என்று உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

பெரும் அச்சறுத்தல்

இந்த புதிய திரிபு தீவிர அவதானத்திற்கு உரியது என்றும் நோய்த் தொற்றின் அதிவேகமான அதிகரிப்பு பெரும் அச்சுறுத்தலை கொண்டது என்றும் தென்னாபிரிக்க சுகாதார அமைச்சர் ஜோ பால்ஹா எச்சரித்துள்ளார். தென்னாபிரிக்காவின் தினசரி தொற்று சம்பவங்கள் கடந்த புதனன்று 1,200 ஆக இருந்தது. இதுவே இந்த மாத ஆரம்பத்தில் அது 106 ஆக மாத்திரமே இருந்தது.

இந்த புதிய திரிபு கண்டுபிடிக்கப்படும் முன்னர் பண்டிகைக் காலத்தை ஒட்டி வரும் டிசம்பர் நடுப்பகுதியில் ஆரம்பிக்கக்கூடிய நான்காவது அலை ஒன்று பற்றி தென்னாபிரிக்காவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

நாட்டில் 22 புதிய வைரஸ் திரிபு சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக அரசின் தொற்று நோய்களுக்கான தேசிய நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

வர்த்தக மையமாக இருக்கும் ஜொஹன்னஸ்பேர்க் மற்றும் தலைநகர் பிரிடோரியா மற்றும் குவாடெங் உட்கட நாட்டின் மூன்று மாகாணங்களில் சோதனையில் நோய்த் தொற்று கண்டறியப்படும் எண்ணிக்கை வேகமாக அதிகரித்திருப்பதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பிரிடோரியாவில் உள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றியில் வைரஸ் கொத்தணி ஒன்று ஏற்பட்டிருப்பது கவலை அளிப்பதாகவும் அது குறிப்பிட்டது.

கடந்த ஆண்டு பீட்டா வைரஸ் திரிபு தொன்னாபிக்காவிலேயே கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் இந்தியாவில் டெல்டா வைரஸ் திரிபு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அந்த திரிபின் தொற்று எண்ணிக்கை தற்போது சரிந்துள்ளது.

ஆபிரிக்க பிராந்தியத்தில் அதிக பெருந் தொற்று பதிவான நாடாக தென்னாபிரிக்கா உள்ளது. அங்கு 2.95 மில்லியன் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 89,657 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த புதிய கொரோனா வைரஸ் திரிபில் 50 மரபணு பிறழ்வுகள் உள்ளன என்றும், ஸ்பைக் புரோட்டின் இடையில் 30க்கும் மேற்பட்ட பிறழ்வுகள் இருப்பதாகவும் மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொரோனா தடுப்பூசிகள் இந்த ஸ்பைக் புரத இழையையே இலக்கு வைக்கின்றன. அதேபோன்று மனிதர்களின் உடலுக்குள் ஊடுருவ கொரோனா வைரஸ் இந்த ஸ்பைக் புரத இழையைத்தான் பயன்படுத்துகின்றது.

மனிதர்களின் உடலோடு முதலில் தொடர்பு கொள்ளும் ரெசப்டாரில் 10 பிறழ்வுகள் உள்ளன. உலகை உலுக்கிய கொரோனா வைரஸின் டெல்டா திரிபிலேயே ரெசப்டார்களில் இரண்டு பிறழ்வுகள் மட்டுமே இருந்தன.

கொரோனா வைரஸை தோற்கடிக்க முடியாத ஒரு நோயாளியின் உடலிலிருந்து இத்தனை அதிக பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

காகிதத்தில் மிகவும் அச்சுறுத்தக் கூடியதாக தோன்றும் பல கொரோனா திரிபுகள், எதார்த்தத்தில் ஒன்றுமில்லாமல் போய் உள்ளன. அதற்கு பல உதாரணங்கள் உள்ளன. கொரோனா வைரஸின் பீட்டா திரிபு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மிகவும் அச்சுறுத்தக் கூடியதாக மக்களின் கவலைக் குரியதாக இருந்தது. அத்திரிபு மனிதர்களின் நோய் எதிர்ப்பு மண்டலத்தில் சிக்காமல் தப்பிப்பதில் சிறந்து விளங்கியது. ஆனால் எதார்த்தத்தில் அதிவேகமாக பரவக்கூடிய டெல்டா திரிபு உலகை தவிக்க வைத்தது.

பல நாட்கள் திருடியவருக்கு ஒரு நாள் சிறைத் தண்டனை

அமெரிக்காவில் பல அருங்காட்சியகத் திருட்டுகளைப் புரிந்தவருக்கு ஒரு நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1960களிலும் 1970களிலும், அருங்காட்சியகங்களில் பல பொருட்களைத் திருடியதை 78 வயது கேவின் ஒப்புக்கொண்டார். 2018ஆம் ஆண்டு தான் திருடிய ஓர் அரியவகைத் துப்பாக்கியை விற்க முயன்றபோது அவர் பிடிபட்டுள்ளார். அப்போதுதான் கேவின் தான் புரிந்த மற்ற திருட்டுகளையும் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பழைய பொருட்களைச் சேகரிக்கும் ஆர்வத்தில் அவற்றை திருடியதாக அவர் காரணம் கூறியுள்ளார். அவர் புரிந்த திருட்டுகளில் பலவற்றுக்குத் தண்டனை அளிக்கும் காலவரையறை முடிந்துவிட்டதாக கூறப்படுகிறது.

ஒரு நாள் சிறைத் தண்டனையைத் தவிர ஓராண்டு வீட்டில் இருப்பது உட்பட 3 ஆண்டுகள் கண்காணிப்புடன் கூடிய விடுதலையும் 25,000 டொலர் அபராதமும் கேவினுக்கு விதிக்கப்பட்டது.

அவர் திருடிய பொருட்களுக்குச் சுமார் 23,000 டொலரையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

கடந்த செவ்வாய்க்கிழமை சக்கர நாற்காலியில் நீதிமன்றத்தின் முன் ஆஜரான கேவின் தனது திருட்டுகள் பற்றி எதுவும் கூறாதாபோதும் மனவேதனையை வெளிப்படுத்தினார்.

"இந்த அனைத்து பிரச்சினைகளுக்காகவும் வருந்துகிறேன். இது பற்றி உண்மையில் நான் அப்போது சிந்திக்கவில்லை. இப்போது எல்லாம் வெளியே வந்துவிட்டது" என்று நீதிமன்றத்தின் முன் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய நிலக்கரி சுரங்க விபத்தில் 52 பேர் பலி

ரஷ்யாவின் சைபீரியாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 52 பேர் உயிரிழந்துள்ளதாகக் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து கடந்த பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு ரஷ்யாவில் ஏற்பட்ட மிக மோசமான சுரங்க விபத்தாக கூறப்படுகிறது.

நவம்பர் 25ஆம் திகதி, வியாழக்கிழமை, மொஸ்கோவிலிருந்து சுமார் 3,500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லிஸ்ட்வேஸ்னியா என்ற சைபீரிய சுரங்கத்தில் காற்றோட்டத்துக்காக சுரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த வாயிற் குழியில் படிந்திருந்த நிலக்கரித் துகள்களில் தீ பற்றியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

அவசர உதவி சேவையைச் சேர்ந்த ஓர் அதிகாரி, சுரங்கத்துக்குள் சிக்கிக் கொண்டவர்களில் யாரும் உயிரோடு இல்லை என ஒரு செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார். லிஸ்ட்வேஸ்னியா சுரங்கத்தின் பணிப்பாளர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பிராந்திய ஆய்வுக் குழு கூறியுள்ளது. 49 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் நான்கு பேர் மிக மோசமான நிலையில் இருக்கின்றனர். ரஷ்யாவில் உள்ள 58 நிலக்கரிச் சுரங்கங்களில் 34 வீத சுரங்கங்கள் பாதுகாப்பற்றவை என்று 2016இல் அந்நாட்டு அரசு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் 2004 ஆம் ஆண்டு மீத்தேன் வாயு வெடிப்பில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பறக்கும் மர்மப் பொருள்கள் பற்றி பென்டகன் விசாரணை

அமெரிக்காவின் பாதுகாக்கப்பட்ட வான் பரப்பில் 'பறக்கும் மர்மப் பொருள்கள்' காணப்பட்டது தொடர்பான தகவல்களைப் பற்றி ஆராய ஒரு நடவடிக்கைக் குழுவை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அமைத்துள்ளது.

ஆர்வமூட்டும் பொருள்கள் பற்றி ஆராய்ந்து, தொடர்புடைய அச்சங்களைப் போக்க இந்தக் குழு உழைக்கும் என்று செவ்வாய்க்கிழமை பென்டகன் அறிவித்துள்ளது.

இந்த பறக்கும் மர்மப் பொருள்களை இராணுவ விமானிகள் பார்த்துக் குழம்பியுள்ளனர். இவை குறித்து தகவல்களும் அளித்துள்ளனர்.

பறக்கும் மர்மப் பொருள்கள் தோன்றியதாக வந்த இத்தகைய 144 தகவல்களை ஆராய்ந்து உண்மையை வெளிக்கொண்டுவரும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இராணுவ அறிக்கை ஒன்று கடந்த ஜூன் மாதம் வெளியானது. ஆனால், பறக்கும் மரமப் பொருள் குறித்து எந்த விளக்கத்தையும் அந்த அறிக்கையால் தர முடியவில்லை.

ஆனால், இந்தப் பொருட்கள் வேற்றுக் கிரகத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்ற கோணத்தை இந்த அறிக்கை மறுக்கவில்லை.

2004ஆம் ஆண்டு முதல் பறக்கும் மர்மப் பொருள்களைப் பார்த்ததாக செய்யப்பட்ட 144 பதிவுகளில் ஒரே ஒரு நிகழ்வுக்கு மட்டும் விளக்கம் கிடைத்துள்ளது. மீதி 143 நிகழ்வுகளுக்கும் எந்த விளக்கமும் இல்லை.

இந்தப் புதிய குழுவை உயர் மட்ட இராணுவ, உளவுத் துறை நிர்வாகிகள் மேற்பார்வை செய்வர்.

ஆங்கிலக் கால்வாயை கடப்போரை

திரும்பப் பெற பிரான்ஸுக்கு பிரிட்டிஷ் பிரதமர் அழைப்பு

பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் அனைத்துக் குடியேறிகளையும் பிரான்ஸ் திரும்ப பெற்றுக்கொள்ளுமாறு கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்குச் செல்வதற்காகக் கால்வாயைக் கடக்க முயன்ற 27 குடியேறிகள் மூழ்கியதைத் தொடர்ந்து அவர் அவ்வாறு கூறினார்.

அந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்துக்குரிய 5 ஆட்கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கால்வாயைக் கடப்போர் மீண்டும் பிரான்ஸுக்குத் திரும்ப, அதனுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள ஜோன்சன் பரிந்துரைக்கிறார்.

இந்நிலையில், ஆங்கிலக் கால்வாய் ஒரு மயானமாக மாற அனுமதிக்கப் போவதில்லை என்று பிரான்ஸ் பிரதமர் இமானுவல் மக்ரோன் சூளுரைத்துள்ளார்.

கால்வாயில் மனிதக் கடத்தல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டுவர, ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஒருங்கிணைந்த அணுகுமுறையை இருநாட்டுத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் குடியேறிகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு மும்மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த பிரச்சினை பற்றி பேச பிரிட்டன் உள்துறை செயலாளர் பிரீதி படேல நாளை ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் உள்துறை அமைச்சர் கெரால்ட் டார்மனினை சந்திக்கவுள்ளார்.

ஆங்கிலக் கால்வாயில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற விபத்து அந்த கால்வாயில் இடம்பெற்ற மோசமான விபத்தாக உள்ளது. இதில் ஒரு கரப்பிணி உட்பட ஏழு பெண்கள், மூன்று சிறுவர்கள் மற்றும் 17 ஆண்கள் உயிரிழந்தனர்.

இடிந்து விழும் அபாயத்தில் ஆப்கான் மரபுரிமை சின்னம்

யுனெஸ்கோவின் புகழ்பெற்ற உலக மரபுரிமைச் சின்னமாக விளங்கும் ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தில் அமைந்திருக்கும் 'மினாரத் ஒப் ஜம்' கோபுரம் இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதாக தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

'இந்த கோபுரத்தின் நிலை குறித்து கவனம் செலுத்தத் தவறினால், அது இடிந்து விழுவதை விரைவில் காணக் கிடைக்கும். அது மிகப்பெரிய அவமானமாக அமையும். அதனால் இவ்விடயத்தில் யுனெஸ்கோ அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்' என்று கோர் மாகாண தகவல் மற்றும் கலாசாரத் திணைக்களத் தலைவர் அப்துல் ஹை கூறியதாக 'டோலோ நியூஸ்' தெரிவித்துள்ளது.

800 வருடங்களுக்கு முன்னர் கியாசுதீன் கோரி மன்னர் காலத்தில் இந்த மினாரத் நிர்மாணிக்கப்பட்டது.

'இந்த மினாரத்தை பாதுகாக்க வென கடந்த 20 ஆண்டுகளாகக் கவனம் செலுத்தப்படவில்லை. என்றாலும் எதிர்வரும் குளிர்காலத்தில் இது இடிந்து விழுந்து விடலாமென்று நாங்கள் மிகவும் கவலையடைகிறோம்," என்று சிவில் உரிமை ஆர்வலர் ஹசன் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தலிபான்கள் கடந்த ஓகஸ்ட் நடுப்பகுதியில் நாட்டைக் கைப்பற்றிய பின்னர், ஆப்கானிஸ்தானின் கலாசார பாரம்பரியத்தையும் அதன் பன்முகத்தன்மை மற்றும் சர்வதேச சட்டத்தை முழுமையாகப் பாதுகாக்க ஐ.நா கலாச்சார முகவரகம் அழைப்பு விடுத்துள்ளது.

கிழக்கின் குரல்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்து சம்பவத்தின் பின் இலவச படகு சேவையை இலங்கை கடற்படை நேற்று (26) முதல் சேவையை ஆரம்பித்துள்ளது. கிண்ணியா நகர சபை பிரதேச சபையை இணைக்கும் இறங்கு துறையே குறிஞ்சாக்கேணி பாலம் இதில் சுமார் 25 நபர்கள் ஒரே தடவையில் பயணிக்க முடியும். பாதுகாப்பு அங்கிகள் நிறைந்த சேவையாக இச் சேவை காணப்படுகிறது. பால புனர்நிர்மாணம் முடிவடையும் வரை கடற்படையின் படகு சேவை இடம் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

தோப்பூர் பிரதேசத்தில் T–56 துப்பாக்கியுடன் ஒருவர் கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை தோப்பூர் பிரதேசத்தில் T56 துப்பாக்கி ஒன்றினை மறைத்து வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் சூரியபுர விஷேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு நேற்று முன்தினம் இரவு (25) கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது அவரிடமிருந்து

T56 துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டதாகவும் விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் தோப்பூர்பாலத்தோப்பூர் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் ரவீந்திரன் (46வயது) எனவும் தெரியவருகின்றது.

காத்தான்குடியில் பல வீதிகள் வெள்ளத்தில்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த அடை மழையினால் காத்தான்குடியில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

வடிகான்களும் வெள்ளத்தில் நிரம்பிய நிலையில் காணப்பட்டது. இதையடுத்து வெள்ள நீரை வடிந்தோடச் செய்யும் வகையில் காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் புதிய காத்தான்குடி தோணாக்கால்வாயை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

காத்தான்குடி நகர சபை சுகாதார ஊழியர்களைக் கொண்டு புதிய காத்தான்குடி தோணாக்கால்வாய் துப்பரவு செய்யப்பட்டு வீதியில் தேங்கி கிடந்த வெள்ள நீர் வடிந்தோடச் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண இணைந்த சேவை

இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு பிரதம செயலாளர் அறிவித்துள்ளார்

ஒலுவில் விசேட நிருபர்

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2020, 2021 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த இடமாற்றத்தினை நடைமுறைப்படுத்துமாறு, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித.பி.வணிகசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் மற்றும் 2020, 2021ம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் இதுவரை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாததாலும், எதிர்வரும் 2022ம் வருடத்திற்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோராமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2020,2021ம் ஆண்டுக்கான இடமாற்றக் கட்டளைகளை பூரணமாக நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்திலேயே 2023ம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தினை இலகுவாக செயற்படுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2020,2021 வருடாந்த இடமாற்றக் கட்டளை கிடைக்கப்பெற்று இதுவரை புதிய சேவை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்காத இணைந்த சேவை உத்தியோகத்தர்களை எதிர்வரும் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் புதிய சேவை நிலையத்தில் கடமையை பொறுப்பேற்பதற்கு ஏதுவாக விடுப்பு செய்வது சம்பந்தப்பட்ட நிறுவன தலைவரது பொறுப்பாகும்.

ஓட்டமாவடியில் மாணவர்களுக்கு டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

கல்குடா தினகரன் நிருபர்

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் தற்போது நாட்டில் மழை காலம் ஏற்பட்டுள்ள நிலையில் டெங்கு தாக்கம் வராத வகையில் வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்துகளை ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் வழிகாட்டலில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட ஓட்டமாவடி சாஹிரா வித்தியாலய மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஓட்டமாவடி சாஹிரா வித்தியாலய அதிபர் எம்.அபுதாஹிர் தலைமையில் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு தாக்கம் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்துக்களை பொதுச் சுகாதார பரிசோதகர் யூ.எல்.எம். ஜின்னா வழங்கினார்.

வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தயாரித்த 'கலிகாலன்' நாளை திரையரங்குகளில்

ஒவ்வொரு பெரிய சாதனைகளும் சிறிய முயற்சியிலும் இடைவிடாத உழைப்பிலும் தான் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் இந்திய சினிமா எனும் பெரும் விருட்சத்தின் அடியில் துளிர்க்கும் எம்மவர் சினிமாவும் ஒரு பெரும் விருட்சமாக வளர வேண்டுமானால் இரசிகர்களின் ஆதரவு எனும் உரமும் இலாபம் எனும் நீரும் அவசியம் என வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்தார்.

சிப்ஸ் சினிமாஸ் எனும் தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக 'கலிகாலன்' எனும் சிறிய திரைப்படத்தினை தயாரித்துள்ள அவர் நாளை திரையரங்குகளில் வெளியிடப்படவிருக்கும் இத்திரைப்படம் தொடர்பில் கல்முனை ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் ஈழத்துக் கலைஞர்களின் பாரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் 'கலிகாலன்' போன்ற திரைப்படங்களை நாம் ஆர்வத்துடன் சென்று பார்வையிடுவதுடன், எமது கலைஞர்களை ஊக்கப்படுத்துவது மட்டுமல்லாமல் எமது கலைஞர்களின் திறமைகளை நாம் பாராட்டுவதன் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக சினிமா பாரிய வளர்ச்சி காணும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. அத்தோடு நாளை வெளியாகவுள்ள 'கலிகாலன்' திரைப்படத்தை திரையரங்குகளில் சென்று பார்வையிடுவதுடன் ரசிகர்கள் தமது ஆதரவை வழங்குவதன் மூலம் மேலும் பல சினிமாக்கள் கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் இருந்து பல திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கும் மட்டக்களப்பு சினிமா வர்த்தக ரீதியில் வளர்ச்சி காண்பதற்கும் சினிமா துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்களின் ஆதரவினையும் மட்டக்களப்பில் இருந்து சினிமாத்துறைக்காக பாரிய பங்காற்றிவரும் கலைஞர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தாம் செலவழிக்கும் பணம் திரும்பி வரும் எனும் நம்பிக்கை மிகவும் தூர்ந்து போயிருக்கும் நிலையிலும் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ச்சியாக எம்மை போன்று குறுந்திரைப்படங்களை தயாரிக்கின்றனர்.

அந்தவகையில் 'சிப்ஸ் சினிமாஸ்' எனும் எனது தயாரிப்பு நிறுவனத்திற்கூடாக 'கலிகாலன்' எனும் சிறிய திரைப்படத்தினை நாளை திரையரங்குகளில் வெளியிட இருக்கின்றோம். இத்திரைப்படத்திற்கு மக்கள் பெரும் வரவேற்பை கொடுப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தற்போது மட்டக்களப்பில் சினிமா வர்த்தக ரீதியில் வெற்றி பெறுவதற்கான காலம் கனிகின்றது என்றே கூறலாம். மேலும் இதுவரை மட்டக்களப்பு திரையரங்குகளில் மாத்திரம் திரையிடப்பட்டு வந்த இவ்வகையான சிறிய திரைப்படங்கள் 'கலிகாலன்' திரைப்படத்தின் மூலமாக அம்பாறை மாவட்டத்திற்கும் நகர்ந்திருப்பது இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் மற்றுமொரு சான்றாகும்.

எனது தயாரிப்பில் வெளியாகின்ற கலிகாலன் குறுந்திரைப்படமானது மட்டக்களப்பின் பிரபலமான இயக்குநராக அடையாளம் காணப்பட்டுள்ள கு. கோடீஸ்வரன் என்பவர் இயக்கியுள்ளர். இக்குறுந்திரைப்படமானது திரையரங்கு இரசிகர்களைக் கவரும் விதமான ஜனரஞ்சக சினிமா பாணியில் சிறந்த கதை, திரைக்கதைகளைக் கொண்டு படங்களை இயக்கி இருக்கின்றார்.

சிறிய திரைப்படங்களாக இருந்தாலும் அவை தொடர்ச்சியாக வெளியிடப்படும் போது ஏனைய தொழிநுட்பக் கருவிகளின் தரமும் கலைஞர்களின் திறனும் தானாக மேம்படும் எனும் நம்பிக்கையை அவர் கொண்டுள்ளதை இக்குறுந்திரைப்படத்தில் நாம் காணலாம் என்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த

அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு - 2021

கல்லடி குறூப் நிருபர்

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இந்த ஆண்டுக்கான சர்வதேச ஆய்வு மாநாடு மட்டக்களப்பு கல்லடியிலுள்ள அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராசதுரை அரங்கில் நிறுவகத்தின் இன்னிய அணியினரின் வரவேற்புடன் ஆரம்பமாகியது. கட்புல மற்றும் தொழில்நுட்ப கலைகள் துறையின் தலைவர் கலாநிதி சு.சிவரெத்தினத்தின் வரவேற்புரையினை தொடர்ந்து சர்வதேச ஆய்வு மாநாட்டின் தலைவர் கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ் அறிமுகவுரையை நிகழ்த்தியிருந்ததுடன் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி பணிப்பாளர் உரையை நிகழ்த்தியிருந்தார்.

இணையவழி தொழில்நுட்பம் ஊடாகவும் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் இசைத்துறைத் தலைவர் பேராசிரியர் ஞானா குலேந்திரன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாக முதல்வர் பேராசிரியர் வ. கனகசிங்கம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சுதேஷ் மணிதிலஹே ஆகியோரும் கலந்து கொண்டு இணையவழியில் உரையாற்றியிருந்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கட்புல ஆற்றுகைகள் கலைகள் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சௌமிய லியனஹே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் சென்னை கலாசேத்ரா கலைக் கல்லூரியின் வருகைதரு பேராசிரியரும், மீனம்பாக்கம் ஏ.எம். ஜெயின் கல்லூரியின் இணைப்பேராசிரியருமான முனைவர் சே.இரகுராமன் தனது ஆதாரசுருதி உரையை பரதமும் ஆய்வும் என்ற தலைப்பில் இணையவழி மூலமாக நிகழ்த்தினார்.

பாண்டிருப்பில் நாவலர் சிலை திறப்பு

துறைநீலாவணை நிருபர்

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பெரிய தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் தொண்டினை கௌரவிக்கும் வகையில் கல்முனை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தின் நுழைவாயிலில் அன்னாரின் சிலை திறந்து வைக்கப்பட்டது.

கருணை உள்ளம் அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையில் இச்சிலை வடிவமைக்கப்பட்டது. இப்பாடசாலை அதிபர் கணேசலிங்கம் தியாகராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நேற்று கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நாவலர் சிலையினை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந் நிகழ்வில் கல்முனை தமிழ் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, தொழிலதிபரும் சமூக செயற்பாட்டாளருமான க.பிரகலாதன் ஆசிரிய ஆலோசகர்களான மா.லக்குணம், க.சாந்தகுமார், கருணை உள்ளம் அறக்கட்டளை அமைப்பின் தலைவர் அ.ரஜிவன், வி.எஸ். கே வர்த்தக நிலைய உரிமையாளர் வ.கோணேஸ், கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் பு.கேதீஸ் துரைவந்தியமேடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் செல்லையா பேரின்பராஜா ஓய்வு நிலை ஆசிரியை செல்வி க.வசந்தி பாடசாலை நலன்விரும்பி எஸ். கமலநாதன் ஆகியோர் கௌரவ, சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 நவம்பர் 27
சனிக்கிழமை

வவுனியாவில் நாவலர் குருபூசை

வவுனியாத் தமிழ்ச் சங்கமும் ஆதி விநாயகர் ஆலயமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை இன்று சனிக்கிழமை கார்த்திகை மகத்தில் ஆதிவிநாயகர் ஆலய வசந்த மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், நாவலர் திருவுருவ வழிபாட்டினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்கள் நிகழ்த்த திருமுறை ஓதப்படும். வரவேற்புரையினை ஆலயத்தின் செயலாளர் தே.அமுதராஜ் வழங்குவார். தலைமையுரையினைத் தொடர்ந்து இடம்பெறும் சிறப்புரைகளில் "நலம் பெருக்கிய நாவலர்" என்றபொருளில் சிவத்தமிழ்ச் செல்வர் சிவ.கஜேந்திரகுமாரும் "நாவலர் நற்பணிகள்" என்ற பொருளில் சைவமணி செல்வ.சண்முகமும் உரையாற்றுவார்கள்.

திருநாவற்குளத்தில் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையால் மக்கள் அவதி

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா திருநாவற்குளத்தில் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்தமையால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மழை காரணமாக திருநாவற்குளம் பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளிற்குள் வெள்ளநீர் உட்புகுந்தமையால் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இதனால் இவ்வீடுகளில் வசிப்பவர்கள் தற்போது உறவினர்கள் வீடுகளில் வசித்து வருகின்றனர். அத்தோடு இப்பகுதியின் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்தும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினை மழைக் காலங்களில் தமக்கு ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதாக இப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தீருவில் திடலில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்த அனுமதி

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை தீருவில் திடலில் மாவீரர்நாள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நகர சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தீருவில் திடலில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதற்கு வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எழுத்து மூலம் அனுமதி கோரி இருந்தார். அதற்கு, நகரசபை தலைவர் என்.செல்வேந்திரா, " தீருவில் திடலை எந்த நிகழ்வுகளுக்கும் வழங்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளமையால், திடலில் நிகழ்வுகளை நடத்த அனுமதிக்க முடியாது" என எழுத்து மூலம் பதில் அளித்து இருந்தார்.

அந்நிலையில், சபை உறுப்பினர்கள் சபையை கூட்டி அது தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் என நகர சபை தலைவரிடம் கோரியதை அடுத்து சபைக்கூட்டம் கூட்டப்பட்ட போது, கொரோனா விதிமுறைகளை கடைப்பிடித்து, சுகாதார நடைமுறைகளுடன் நிகழ்வினை நடாத்துவதற்கு அனுமதிப்பது என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஒலிபெருக்கி சாதனங்கள் பயன்படுத்துவதாயின் அதற்காக மாத்திரமே பொலிசாரிடம் அனுமதி கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரணைமடு குளத்தின் நீர்மட்டம் உயர்வு

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 36 அடி நீர் கொள்ளவு கொண்ட இரணைமடு குளத்தின் நீர்மட்டம் 29 அடி 8 அங்குலமாக உயர்வடைந்துள்ளது. நேற்று முன்தினம் நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள நிலவர அறிக்கையின்படி இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 அடி கொள்ளவு கொண்ட கல்மடு குளத்தின் நீர்மட்டம் 25 அடி 10 அங்குலமாக காணப்படுவதுடன் பிரமந்தனாறுக் குளம் மற்றும் கனகாம்பிகை குளம் என்பன கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நீர்மட்டம் உயர்வடைந்து வான் பாய்ந்து வருகின்றன.

இதேபோன்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளத்தில் நீர் மட்டம் 22 அடி 5 அங்குலமாகவும் கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் 07அடி 2 அங்குலமாகவும் உயர்வடைந்துள்ளது. அத்துடன் புதுமுறிப்புக்குளம், குடமுருட்டிக்குளம், வன்னேரிக் குளம் என்பவற்றின் நீர்மட்டம் உயர்வடைந்து வான் பாய்கின்றன.

குருநகரில் வீதியில் டயர் கொளுத்திய இருவர் கைது

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வீதியில் டயர் கொளுத்திய குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பகுதியில் வெள்ளிக்கிழமை டயர்கள் கொளுத்தப்பட்டன. சம்பவம் தொடர்பில் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து டயர் கொளுத்திய சந்தேகநபர்கள் இருவரை கைது செய்ததுடன், வீதியில் எரிந்த டயர்களையும் அப்புறப்படுத்தினர்.

வவுனியாவில் தொடர் மழை காரணமாக வீடுகள் சேதம்: 115 பேர் பாதிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் தொடர் மழை காரணமாக 31 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. வவுனியாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது. பெய்துவரும் மழையினால் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 66 பேரும், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் 3 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வவுனியா மாவட்டத்தில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் மேலதிக தகவல்களை சேகரித்து வருகின்றனர்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி

கொரோனாத் தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமாக மூன்றாவது தடவையாக கொரோனாத் தடுப்பூசி 29 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படவுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்

60 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபாம் தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக் குறைந்து மூன்று மாத இடைவெளியின் பின் இத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளால் அறியத்தரப்படும்.

கொரோனாவிற்கான இரண்டு தடுப்பூசிகளையும்; பெற்றுக் கொண்ட 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது தடுப்பூசி அட்டையை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் மார்கழி மாதம் 04, 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ் மாவட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள்; வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

தமிழ்ச்சங்கம் நடத்தும் நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் நினைவரங்கம் இன்று 27. 11. 2021 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிகழ்விற்கு அனுசரணை வழங்கும் கரிகணன் நிறுவனப் பணிப்பாளர் சிவ.ராஜ்குமார் தம்பதியர் மங்கள விளக்கேற்றுவர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தொடக்கவுரையையும் யாழ். மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும் வழங்குவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ச.அமலஅசாம் நடையில் நின்றுயர் நாயகன் நாவலர் என்ற பொருளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ஜெ. தவேதன் எழுந்த கொழுங்கனல் என்ற பொருளிலும் உரையாற்றுவர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழாசிரியரும் இந்து ஆன்மீகப் பிரசாரகருமாகிய க. கனகதுர்க்கா நாவலர் வழி என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும் நன்றியுரையையும் வழங்குவார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்ச்சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

மீன் பிடித்துக்கொண்டு இருந்த இளைஞன் மின்னல் தாக்கி பலி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, இராசேந்திரங்குளம் குளத்தில் மீன் பிடித்துக்கொண்டு இருந்த இளைஞன் ஒருவர் மின்னல் தாக்கி மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருவதுடன், அவ்வப்போது இடி மின்னல் தாக்கமும் ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இராசேந்திரங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் மீன் பிடித்துக்கொண்டு இருந்துள்ளார். இதன்போது அப் பகுதியில் மின்னல் தாக்கியதில் குறித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். இச் சம்பவத்தில் 30 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

குளக்கரையில் இளம் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா இராசேந்திரகுளம் குளப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குறித்த நபர் இராசேந்திரகுளத்தில் மீன்பிடிப்பதற்காக நேற்று (26.11) காலை தனது வீட்டில் இருந்து சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் வீடுதிரும்பாத நிலையில் அவரது மனைவி குளத்துப் பகுதிக்குச் சென்று தேடியுள்ளார்.

இதன்போது குளப்பகுதியில் காணப்பட்ட பிட்டியில் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது. மின்னல் தாக்கத்தின் காரணமாக இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவத்தில் சிவலிங்கம் தினேஷ்குமார் (வயது 28) என்ற இளம் குடும்பஸ்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் மாங்குளத்தில் மரநடுகை

வவுனியா விசேட நிருபர்

மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் மாங்குளத்தில் மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி காண்டீபன் மற்றும் கட்சியின் மாங்குளம் பகுதி செயற்பாட்டாளர்கள் இணைந்து வீதியோரத்தில் மரநடுகையில் ஈடுபட்டனர்.

கார்த்திகை மாதம் மர நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு வருடந்தோறும் பல்வேறு பகுதிகளிலும் மரநடுகை இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் மரநடுகை மாதத்தை முன்னிட்டு கார்த்திகை 26 ஆம் திகதியான நேற்று (26.11) இம் மரநடுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பருத்தித்துறை நகரசபை தவிசாளர் உள்ளிட்ட 17பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்.விசேட நிருபர்

யாழ்.பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை நகரசபையில் 17 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பருத்தித்துறை நகரசபையின் 2022 ம் ஆண்டுக்கான பாதீட்டு அமர்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை நகரசபை தவிசாளர், உறுப்பினர்கள், மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக 17 பேர் நேற்றிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை நகரசபையின் 2022 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு இடம் பெற்ற வேளை அங்கு கலந்து கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இந்நிலையில் அவ் அமர்வில் கலந்து கொண்ட உறுப்பினர்களுடன் ஒரு தொழிநுட்ப உத்தியோகத்தர், மற்றும் ஒரு எழுதுனர் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

கண்கள் பனிக்குது

இழப்பதற்கு இனி
என்ன இருக்கு
கண்ணீரில் நனைகிறது
பெத்தமனங்கள்
எத்தனை கனவுகள்
எத்தனை கற்பனைகள்
சுமந்துகொண்டு
புத்தகப்பையுடன்
சென்ற நீங்கள்
கபனுடையுடன்
திரும்பியதேனோ!

கண்கள் பனிக்குது
கல்புகள் பதறுது
பெற்றதாய்
பொறுப்பாளா!
இல்லை
பின் சென்றுழைத்த
தந்தை மறுப்பாரா!

கலைந்த கனவுகள்
இழந்த நிம்மதி
போன உயிர்
திரும்ப வருமா!
இல்லை
அழுதுதான் பலன்
கிடைக்குமா!

பெரிதுவத்துப் பெற்ற
பிள்ளை
பிஞ்சிலே இழந்ததை
விஞ்சியே விசும்பலாமா!

நித்திரை இழந்து
நிம்மதி கலைந்து
வளர்த்த கண்மணிகள்
கிள்ளைமொழியுடன்
அன்ன நடை பயின்ற
விதம்
அனைத்தும் மறந்து
விடுமா!

அல்லாஹ்
தந்த பரிசை
அவனே திருப்பிட்டான்
நாமும் வாடலாமா
தினமும் இதையேற்க
வாய்ப்பைத் தருவானா!

நாளை மஹ்ஸரில்
எம்குழந்தை சந்திக்க
ஏற்ற வழி தருவாயா
எங்கள் நாயகம்
முகம்மது பெயரால்
கேட்கிறோம்
இதை ஏற்பாயா!

தோப்பூர் சிராஜ்தீன்
நற்பிட்டிமுனை, கல்முனை.

குறிஞ்சாக்கேணி பாலத்தின் ஓலம்

படகு பரிதாபத்தை தோற்றுவித்தது
பாலர் பிள்ளைகள் உருக்குலைத்தது
பாடசாலை சீருடை சீர்குலைந்தது
பைகள் உள்ளங்களை வெளிப்படுத்தியது.

கவலைகள் நிரம்பி வழிந்தது
கடலலை சூழ்ந்து கொண்டது
கனவுகளை பறித்த புத்தகம்
கரை ஒதுங்கி கொண்டது
கபன் துணியால் அணைக்கப்பட்டது.

விண்ணுலகம் சென்று விட்டார்கள்
வீடு திரும்பாது
மண்ணுலகம் பற்றி கொள்வார்களை
ஏடு விரும்பாது
வீண் போகாது பிரார்த்தனைகள்
எம் வாழ்வில் நிலைக்கட்டும்.

தேர்ந்தேடுத்த பிரதிநிதிகளை
அன்றைய ஆதரவு
பிழை சொல்லியது
ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப்பு தெரிவித்தது
இன்றைய தொந்தரவு
சரி செய்யாது
மனங்களை மாற்றிக் கொண்டது
குணங்களில் தொற்றிக் கொண்டது.

வழிநடத்தவும்இ வழிகாட்டவும்
வழிகள் தெரியாது
தலைமைத்துவம்
குறைபாட்டை அறியாது
வன்முறை ஏற்படுத்தியது
சூழலை மாசுபடுத்தியது
வணக்கத்தின் வழிபாட்டின்
அருகே நிகழ்ந்தது
அரங்கேற்றி வைக்கப்பட்டது
ஜ்வாலை கருகே தகர்ந்தது.

உயிர்கள் பற்றிய உணர்வுகள்
நாளை மறக்க நேரிடும்
வாதிடும் அறிவுகளிடத்தில்
எனக்கும் பேச தகுதியுமில்லை
வேரிடம் நான் வளர்த்து கொள்ளவுமில்லை
ஒன்றாலும் ஒன்றுமில்லை
யதார்த்த நிலையின்
பூச்சியத்தில் ஆரம்பமாகும்.

மபாஸ்

சுவனத்தை தந்தருள்!

ஏடதை கையில் ஏந்தி
எழில் கொஞ்சும் காலையில்
வீடதை மறந்து இனியெம்
வீடது பள்ளிதான் என்றெண்ணி;..

காலடி வைத்து படகிலேறி
கடந்திட்ட கடல் பாதை
ஆழத்தை அறியா பிஞ்சுகள்
ஆங்கது படகோடு கவிழ்ந்தனரே!

உயிரது பிரிந்த போது
உருகிய நெஞ்சங்கள் கோடி
பயிரது விளைய முன்னே
பறித்திட காலம் இதுவோ?

கண்களில் வடியும் நீரை
கடலுக்கே விட்டுச் செல்வோம்,
புண்களாய் இதய மாச்சே
பிரிந்ததை எண்ணி எண்ணி!

யாருக்கு ஆறுதல் சொல்ல
யதார்த்தம் இங்கு என்ன?
சேருமிடம் மண் என்றாலும்
செதுக்கிய பாதை தவறே;

உயர்ந்தவன் அல்லாஹ் உந்தன்
உள்ளத்தின் கருணை தன்னால்
பயணித்து மரணித்த மக்களுக்கு
பயன்தரும் சுவனத்தை தந்துவிடு!

ஏ எம் கஸ்புள்ளா

(குறிஞ்சக்கைணிப் படகுப் பாதையில் பயணித்து மரணித்த சகோதர, சகோதரிகளுக்கு இக்கவிதை சமர்ப்பணம்)

இனம் புரியாத சோகம்!

பாவம் மக்கள்
பாலம் இல்லை!
படிப்பு வேண்டி
படகில் பயணம்!

குறிஞ்சாகேணி ஆறு
குடித்த உயிரோ ஏழு!

மூன்று வயது சிறுமி முதல்
முப்பது வயது முன்பள்ளி ஆசிரியை
எழுபது வயது வயோதிபரையும்
முழுதாய் முழுங்கிவிட்டது ஆறு!!

பள்ளி செல்வோர் உயிரை
பாதியிலே பறித்த எமன்!

கிண்ணியா மட்டுமன்றி
முழு நாட்டு மக்களும்
கோரச் சம்பவத்தின்
சோகத்தின் பிடியில்!

இதை விதி என்பதா
மதி கெட்ட செயல் என்பதா?

உயிர் நீத்தோரை
இறைவன் ஏற்பானாக!
இனம் புரியாத சோகம்
இதயத்தில் இழையோடுகிறது!

கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

ஓடிப்போனவளின் ஊர்

நீண்ட இடைவேளைக்குப் பின்
ஊருக்கு வந்திருந்த அவளிடம்
நிறையப் பேசியது ஊர்

ஓடிப்போனவள் ஊருக்குத்
திரும்பியிருந்ததில்
பெருமைப்பட்டுக்கொள்ள
முடியாவிட்டாலும்
முகஸ்துதிக்காக காணும் முகங்கள்
முறுவலித்துப் போயின

காறி உமிழ்வதற்காக
காத்துக்கொண்டிருந்த நிமிஷமொன்றில்
வாராதிருந்துவிட்ட
அவளுக்காக சேமித்துவைத்திருந்த
எச்சில்களை விழுங்கிக்கொண்டு
முகம்திருப்பிப் போன
முகங்களில் தொலைந்திருந்த
பிரகாசத்திற்கு அவளால்
மறுமலர்ச்சிக் கொடுக்கமுடியவில்லை.

ஓடுகாலி உருப்படாம போனவ
வெட்கமில்லாமல் திரும்பி
வந்திருக்கா பாரு என்றுத்
திட்டித்தீர்க்க சந்தர்ப்பம் வைக்காமல்
குழந்தைக் குட்டியோடு மகிழ்ச்சியாய்
இருப்பதை எண்ணி விட்ட
பெருமூச்சிகளின் அனல்காற்று
அவளின் தேகம் தீண்டியதை
உணராமலும் இல்லை.

அவளை மாதிரி எவனோடாவது
ஓடிப்போயிருந்தா நானும் என்று
நப்பாசை வைத்த முதிர்கன்னிகளின்
ஆதங்கத்தையும் யூகித்திருந்தாள்

விருப்பப் பட்டவனோடே
போயிருந்தாலும் பரவாயில்லை
கண்ணுக்குத்தெரியாத
இடத்தில் உன்னைப்போல வாழ்ந்திட்டுப்
போயிருப்பா ..பாவி மக
எங்களைத் தவிக்க விட்டுட்டுப்
போயிட்டாளே என்று துக்கித்த
அம்மாக்களின் துயரத்தையும்
மீட்டுவிட்டாள் ..

பழசை எல்லாம் மறந்துட்டு
ஓடிப்போனவ மகனுக்கு
பொண்ண கொடுக்கப் போறாங்க
உலகம் உருப்பட்ட மாதிரிதான் ..
காதுபடவே கச்சேரிகளும்
நிகழ்ந்தேறின ..

இரகசிய தாலிகட்டியவள் மகன்
பகிரங்கமாய் ஒருத்திக்கு
கட்டிய தாலியோடு ஊருக்கு
சம்மந்தியாகிப் போனவள் போய்விட்டாள்.

போனவளை எண்ணிப் புகையும் ஊரில்
இவ இனி ஊருக்கு வரகூடாது
வந்தா இவளைபார்த்து பிள்ளைங்க
கெட்டுப்போகும் என்றும்இ
இவ இனி ஊருக்கு வந்து போகணும்
வந்தாதான் ஓடிப்போனாலும்
உயர்வா வாழலாம் என்பதை பிள்ளைங்க
கற்றுக்கொள்ளும் என்றும் பட்டிமன்றம் .

என்றாலும் காதலிக்கவில்லை
என்பதற்காக கொலையும்
காதல் கைகூடவில்லை என்று
தற்கொலையும் .
பணமின்றி வாழ்வில்லா பரிதாபமும்
பாலியல் வன்கொடுமைஇ
ஓடிப்போதல் என்று என்றும்போல
ஊர் அவ்வப்போது பரபரப்பு நிரம்பிய
செய்தித்தாளாக இருக்கிறது.
ஒருநாளின் முடிவில் ஒன்று தீர
மற்றொரு செய்திக்காக காத்திருக்கும்
நம்மை ஏமாற்றாமல்.

மெய்யன் நடராஜ்

காலியான கல்யானம்

உள்ளத்தைக் கவர்ந்த
பேச்சுக்கள்

உறவுகளை ஈர்த்த
நடத்தைகள்

உணவுத்தட்டுக்கள்

குறுங்கவிகள்

சாலைதோறும்
போராட்டம் தொடர்கிறது
பயணிகள் ஜாக்கிரதை!

திறந்த வாசலில்
தீ மூட்டப் படுகிறது
வீதி விபத்து !

திடீர் விபத்து
விரும்பிக்கொள்ளாத பயணம்
உயிர் பிரிதல் !

கனவிலே
நினைவுன் வந்து செல்கிறது
மரண பயம்!

கவிச்சுடர் **ஏ எம் கஸ்புள்ளா**

பலூன்காரி

மூச்சுக்காற்றை
தொலைத்து
வயிற்றை
நிரப்புமவள்
கண்ணீரை
மறைத்து
புன்னகைகளை
விற்றுக் கொண்டிருப்பவள்

சோதிகா.ரெ
(ஆகிஷா)
கொக்குவில்.

நகர்வலம்

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அரூஸிய்யதுல் காதிரிய்யா தரீக்காவின் உலக ஆன்மிகத் தலைவர் அப்ழலுல் உலமா தைக்கா அஹ்மது நாஸிர் ஆலிம், இலங்கையின் முதல் அறபுக் கல்லூரியான மத்ரஸதுல் பாரி அறபுக் கல்லூரியில் அமைந்துள்ள புகாரிப் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார். அவரை சிறுமிகள் கஸீதா பாடி வரவேற்பதையும் ஊர் பிரமுகர்கள், உலமாக்கள், முஹிப்பீன்கள் ஊர் வலமாக அழைத்து வருவதையும் அருகில் பிரதமரின் முஸ்லிம் விவகார ஆலோசகர் அஸ்ஸெய்யத் ஹஸன் மௌலானாவையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)

மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை

பொலனறுவை தேசிய சிறுநீரக வைத்தியசாலை முழுமையாக செயற்படுவதில் இடையூறுகள்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலனறுவை மாவட்டத்தில் ரூ. 12 பில்லியன் செலவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலனறுவை தேசிய சிறுநீரக வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதார அலுவலக பணியாளர்களின் குறைபாடு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட சேவையினை மேற்கொள்ள முடியாதுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்படி வைத்திய சாலையை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளதுடன் கடந்த ஜூன் 11 ம் திகதி தற்போதைய ஜனாதிபதியினால் வைத்தியசாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் 100 குறுதி பெருக்க இந்திரம் இருந்த போதும் வைத்தியர்கள் , தாதியர்கள் மற்றும் சுகாதார அலுவலக பணியாளர்கள் இல்லாமையினால் 30 இயந்திரங்களை மாத்திரமே உபயோகிக்க முடிவதாகவும் வைத்திய சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

முதியோர் மற்றும் சிறுவர் சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு 201 கட்டில்கள் இருந்த போதும் அலுவலக பணியாளர்கள் இல்லாமையினால் படுக்கை திறன் 25 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். குறித்த வைத்திய சாலைக்கு பணிப்பாளர் ஒருவர் உள்ளிட்ட எண்ணிக்கைக்கான ஒப்புதல் சுகாதார அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளபோதும் அதை சுகாதார அமைச்சு நிறைவேற்ற தவறியுள்ளதாகவும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

சிறுநீரக நோய்த்தொற்றுகள் அறுவை சிகிச்சை அரங்கை இயக்கத்தவறியுள்ளதனால் காலப் போக்கில் இயந்திரங்களில் சிக்கல் ஏற்படலாம் என்றும் வைத்திய சங்கத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி விநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேக பூஜை

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி பனையடி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த வருஷாபிஷேக நவோத்திர (1008) சங்காபிஷேக விஷேட நிகழ்வுகள் நேற்று முன்தினம் (24) நடைபெற்றது.

புத்தளம் தில்லையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சோமசுந்தரம் தியாகராஜா குருக்கள் ஆதின கர்த்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பால்குட பவணி, மஹா யாகங்கள், வசந்த மண்டப பூஜைகள் என்பன இடம்பெற்றன.

அத்துடன், இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் எனவும் அனர்த்தங்களில் இருந்து மக்கள் பாதுகாப்பு பெற வேண்டும் எனவும் இதன்போது விஷேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில்; 121 வாகன விபத்துகளில் 124 பேர் மரணம்

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டோம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியினுள் இடம்பெற்ற 121 வாகன விபத்துக்களில் 124 பேர் மரணமடைந்துள்ளதாக அநுராதபுரம் மாவட்ட கோட்டப்பிரிவு மோட்டார் வாகன பொறுப்பதிகாரி மொகம்மட் நியாஸ் தெரிவித்தார்.

இந்த வாகன விபத்துக்களில் அதிகமான விபத்துக்கள் அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இதில் 21 விபத்துக்களில் 21 பேர் மரணமடைந்துள்ளதுடன், அதற்கு அடுத்தபடியாக நொச்சியாகம பொலிஸ் பிரிவில் 15 வாகன விபத்துக்களில் 15 பேரும் மதவச்சி பொலிஸ் பிரிவில் 12 விபத்துக்களில் 12 பேரும் மரணமடைந்துள்ளனர். கெகிராவ பொலிஸ் பிரிவில் 09 விபத்துக்களில் 11 பேர் மரணமடைந்துள்ளனர்.

புத்தளம் மாணவர்கள் 11 பேர் ஜனாதிபதி விருதுக்கு தகுதி

பாடசாலை சமூகம் பாராட்டு

(புத்தளம் தினகரன் நிருபர்)

கல்பிட்டி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கான நேர்முக தேர்வில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் 06 மாணவர்களும், பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலய 05 மாணவர்களும் ஜனாதிபதி விருது பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

தேசிய ரீதியிலான இப்போட்டியில் புத்தளம் மாவட்டத்தில் இவ்விரு பாடசாலை மாணவர்கள் மாத்திரமே தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி விருதுக்கு தெரிவாகிய சுற்றாடல் முன்னோடி மாணவர்கள். கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை:

எம்.எம்.நபீஸ், ஏ.எம்.அஸாம், ஜே.எப்.ரிஸ்கா, எம்.எஸ்.சம்லா பானு, எம்.டீ.எப்.தீஸா, ஏ.எப்.அப்ஹா ஆகியோர்.

பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் : டீ.எப். தஸ்லிமா, எம்.எச்.எப்.அப்ரோஸ், என்.எப். நதா, வை.எப்.ஸஜீயா, எம்.எஸ். ஸரபா பானு ஆகியோர்.

இம்மாணவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஜனாதிபதி மாளிகையில் இவ்வருட இறுதியில் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த ஜனாதிபதி விருதுகள் மூலம் இம்மாணவர்கள் புத்தளம் மாவட்டத்துக்கும், வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் மற்றும் கோட்டக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் பெருமையை பெற்றுத்தந்துள்ளனர்.

சிறைச்சாலைக்கு சொந்தமான வான்

காட்டு யானையுடன் மோதி விபத்து; ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கொழும்பு மெகசீன் சிறைச்சாலைக்குச் சொந்தமான வான் ஒன்று காட்டு யானையில் மோதி விபத்துக்குள்ளானதில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சீகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த 22 ஆம் திகதி அதிகாலை தம்புள்ள ஹபரனை பிரதான வீதியின் திகம்பத்தான பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் சாரதி உள்ளிட்ட மேலும் மூன்று உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். மெகசீன் சிறைச்சாலையில் கடமை புரியும் 44 வயதுடய சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சிறைக் கைதியொருவரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் ஒப்படைத்து விட்டு மீண்டும் கொழும்பு நோக்கி வரும் போது வான் காட்டு யானையில் மோதி வீதியை விட்டு விலகி மதில் ஒன்றின் மீது மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

தெதுரு ஓயாவின் வான் கதவுகள் திறப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

தெதுரு ஓயாவின் 8 வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த நீர்த்தேக்கத்தின் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு குறித்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், செக்கனுக்கு 28000 கன அளவு நீர் வெளியேற்றப்படுகிறது.

தர்காநகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் வளர்ச்சிக்காக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அளப்பரிய பங்களிப்புச் செய்த முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர் மர்ஹூம் அன்ஸார் ஹாஜியார் மற்றும் கலாபீடத்தின் வளர்ச்சிக்காக உதவிய தொழில் அதிபர்களான மர்ஹூம்களான ஸேம் ரிபாய் ஹாஜியார், இஸ்மத் ஹாஜியார் ஆகியோரின் சேவைகளை நினைவு கூரும் நிகழ்வும் கத்தமுல் குர்ஆன் தமாம் மற்றும் துஆப் பிரார்த்தனை வைபவமும் அண்மையில் கலாபீட மண்டபத்தில் நிர்வாக சபை பதில் தலைவர் ஏ.ஆர்.எம் பதியுத்தீன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் மூலம் இரு மின்விசிறிகள் மற்றும் பணத்தொகையும் இந்தநிகழ்வின் போது சங்கபொருளாளர் மௌலவி அப்துல் முனாப் (முஅய்யதி) கலாபீட அதிபர் மௌலவி எம். அஸ்மிகான் (முஅய்யதி) யிடம் இந்தநிகழ்வின் போது கையளிப்பதையும் துஆ பிரார்த்தனை நடைபெறுவதையும் அருகில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் உட்பட முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: பேருவளை விசேட நிருபர்)

வெலிகம நகர சபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம நகரசபையின் 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 5 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

வெலிகம நகரசபையின் தலைவர் திருமதி யமுனா காந்திபுஞ்சிஹேவா வரவுசெலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தனர்.

வரவுசெலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 11 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. எதிராக 6 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஐ.தே.கட்சி உறுப்பினர் பி.கே.ஸி. விமலசூரியா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதன்படி 5 வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது.

எந்த இனத்திற்கும் பாதிப்பு இன்றி மகாவலி காணிகள் பகிரப்படும்

இந்தவருடத்தில் 20 ஆயிரம் காணி உறுதிகள் வழங்க நடவடிக்கை – ராஜாங்க அமைச்சர் சிரிபால கம்லத்

மகாவலி வலய காணிகளை வழங்குவது எந்த இனத்திற்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் முன்னெடுக்கப்படும். இந்த வருட இறுதிக்குள் 20 ஆயிரம் காணி உறுதிகள் வழங்கப்படும் என ராஜாங்க அமைச்சர் சிரிபால கம்லத் தெரிவித்தார்.

தைக்தொழில், நீர்ப்பாசன அமைச்சுக்கள் மற்றும் ராஜாங்க அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

மகாவலி எல் வலயம் தொடர்பாக சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு முன்வைத்தார். மகாவலி காணிகள் வழங்குகையில் எந்த இனத்திற்கும் பாதிப்பு ஏற்படாதவாறு வழங்கப்படும். இதனை அரசின் காணிக்கொள்கைக்கு அமைய பிரதேச செயலக பங்களிப்புடன் மேற்கொள்ள இருக்கிறோம். எமது அமைச்சிற்கு நாட்டின் மூன்றில் இரண்டு பகுதிக்கு சேவையாற்ற நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் டிசம்பர் இறுதிக்குள் மகாவலி வலயங்களில் உள்ள 20 ஆயிரம் காணி உறுதிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளன. 2 வருடங்களில் காணி உறுதிகள் வழங்க இருக்கிறோம். 2023 இல் இதனை நிறைவு செய்ய இருக்கிறோம்.

3,28, 690 காணித்துண்டுகள் பகிரப்பட்டுள்ளன. 1,98,195 பேருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. 40 ஆயிரம் காணிகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

சார்ள்ஸ் நிர்மலநாதன்:

(தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி)

வடக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் மக்களின் பூர்வீக பயிர்ச்செய்கை நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பிலும் மைலத்தனை பகுதியிலும் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கம் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை போதிய உரம் இன்றி விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

நாட்டு எரு பசளைக்காக அரசாங்கம் 3000 ரூபாய் வழங்கி வரும் நிலையிலும் சிலருக்கு மட்டுமே அந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் அந்த கொடுப்பனவு வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.

தற்போது இரசாயன உரம் இறக்குமதி செய்வதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் விவசாயிகள் என்ன விலையில் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என்பது தெரியாமலுள்ளது.

வடபகுதியில் விவசாயிகள் தாம் கஷ்டப்பட்டு மேற்கொண்டுள்ள உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தை வாய்ப்புக்கள் இல்லாமல் உள்ளது.

அரசாங்கம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்னை சந்தித்த விவசாயி ஒருவர் தம்மிடம் 20 ஆயிரம் கிலோ மரவள்ளிக்கிழங்கு உள்ளதாகவும் அதனை சந்தைப்படுத்துதற்கு வழியில்லாமல் உள்ளதாகவும் தெரிவித்தார். 30 ரூபாவிற்குக் கூட அதனை விற்பனை செய்து கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் நியாய விலையில் அதனை விற்பனை செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இவ்வாறு பல விவசாயிகள் சந்தை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனுர குமார திசாநாயக்க:

(மக்கள் விடுதலை முன்னணி எம்பி)

ஆளும் கட்சியின் குப்பைகளை ஆளும் கட்சியினரே கிளறும் போது பல்வேறு விடயங்கள் வெளியில் வந்து கொண்டிருக்கின்றன.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே சபையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதற்கு முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பிலும் குற்றம் சுமத்தினார்.

அவர் விமானங்களை பாவித்த முறைமை, ஹெலிகொப்டர்களை பாவித்த விதம் குறித்தும் தெளிவாக குறிப்பிட்டார். இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தற்போதைய ஜனாதிபதி எவ்வாறு மக்களின் நிதியை துஷ்பிரயோகம் செய்கின்றார் என்ற விடயங்களையும் சபையில் கூறினார்.

சபையில் இருந்து கொண்டு நாம் நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இதன்மூலம் இந்த நாட்டிற்கு என்ன சாபக்கேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

இந்த குப்பைகளை மேலும் கிளறினால் அதிகமாக நாற்றம் வீசும் என்பதையும் மேற்படி இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதனால் இந்த குப்பைகளை அனைவரும் ஒன்றிணைந்து மூடி விடுவார்கள். அதற்கான பொது இணக்கப்பாடு ஒன்றினை எட்டுவார்கள் என்பது எமக்குத் தெரியும்.

எவ்வாறெனினும் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அப்பாவி நாட்டு மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வீ. இராதாகிருஷ்ணன்:

(ஐக்கிய மக்கள் சக்தி எம்பி)

விதை உருளைக் கிழங்குகளை வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்கு இறக்குமதி செய்வதை விடுத்து உள்நாட்டிலுள்ள பண்ணைகளில் அவற்றை உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நுவரெலியா உட்பட மத்திய மாகாணத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யக்கூடிய ஆறு விவசாயப் பண்ணைகள் உள்ளன. அதனை முழுமையாக உபயோகித்து விதை உருளைக்கிழங்குகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தற்போது 50 கிலோ விதை உருளைக்கிழங்கு இருபத்தி மூவாயிரம் ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. அதற்கிணங்க உருளைக்கிழங்கு ஒரு கிலோவை உற்பத்தி செய்வதற்கு நூறு ரூபா விவசாயிகளுக்கு செலவாகிறது. அவர்கள் அதனை 150 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும்.

அதேவேளை இங்கு உருளைக் கிழங்கு அறுவடை நடைபெறும் காலங்களில் வெளிநாட்டு உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படும். ஆனால் உள்ளூர் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும். விவசாயிகளின் வருமானமும் பெரிதும் பாதிக்கப்படும்.

நாட்டில் உரத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதும் நுவரெலியா போன்ற இடங்களில் திருட்டுத்தனமாக மிக அதிகமான விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுகின்றன. அவ்வாறு விற்பனை செய்யப்படும் உரங்களும் தரமானல்ல. அவை கலப்படமாகவே உள்ளது. அந்த வகையில் சுமார் 10,000 ரூபாய்க்கு உரத்தை கொள்வனவு செய்து எவ்வாறு விவசாயத்தை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். விவசாய அமைச்சர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ

அடிப்படையற்ற அப்பட்டமான குற்றச்சாட்டுகளே மக்களுக்கு இரசாயன உரம் வழங்குவதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய விவசாய உற்பத்திப் பொருட்கள் தற்போது இறக்குமதி செய்யப்படாமல் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

நாட்டில் இரசாயன உரப் பாவனையை நிறுத்தி சேதனப் பசளை மூலமான உற்பத்தியை ஊக்குவிக்கும் பாரிய சவாலை ஜனாதிபதி என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

நாட்டு மக்களை நோயற்ற ஆரோக்கியமான பிரஜைகளாக உருவாக்குவதற்கு இது சிறந்த திட்டமாக அமைந்துள்ளது.

எனினும் இந்தத் திட்டத்தை சீர்குலைப்பதற்கு பல சக்திகள் திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் சேதனப் பசளை திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த போகத்திற்குத் தேவையான சேதனப் பசளை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்க இருக்கிறோம். உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய 22 கிருமிகொல்லிகளுக்கு அனுமதி வழங்க இருக்கிறோம். தனியார் துறைக்கு தேவையானால் இரசாயனப் பசளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உலக அளவில் யூரியா விலை அதிகரித்துள்ளது. 3 மாதங்களாக திட்டமிட்டு இந்திய அரசின் தலையீட்டுடன் நெனோ நைட்ரிஜன் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எம்மீது பொய்க்குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது.இந்திய விமானப்படை இலவசமாக அவற்றை எடுத்து வந்தன. அதற்கு நாம் நன்றி 4 கூட சொல்லவில்லை. சகல விவசாய நிலங்களிலும் பயிற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேவையான பசளை வழங்கப்பட்டுள்ளது. பெரும்போகத்தில் எந்த குறையும் இன்றி அறுவடையை பெறுவோம்.

நளின் பண்டார எம்.பி

(ஐ.ம.ச)

6 இலட்சம் ஹெக்டயார் நிலத்தில் விவசாயம் செய்திருக்கும் விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை அரசாங்கம் எப்போது வழங்கப்போகின்றது.

அரசாங்கம் இரசாயன உரத்தைத் தடைசெய்து விடுத்திருந்த வர்த்தமானி அறிவிப்பை வாபஸ் பெற்றுக்கொண்டு இரசாயன உரம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்குவதாக அறிவித்திருந்தது. ஆனால் இதுவரை அந்த வர்த்தமானி அறிவிப்பு வாபஸ் பெறப்படவில்லை. அத்துடன் இந்த காலப்பகுதியில் 6 இலட்சம் ஹெக்டயாரில் விவசாயம் செய்யப்பட்டிருப்பதாக விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு உரம் கொண்டுவந்து விநியோகிப்பதற்கு இன்னும் 2 மாதங்கள் வரை செல்லும். தனியார் துறையினரே உரம் கொண்டுவர இருக்கின்றது. அதனால் தற்போது விவசாயம் செய்ய ஆரம்பித்திருக்கும் விவசாயிகளுக்கு உரிய நேரத்துக்கு உரம் கிடைக்கப்போவதில்லை.

ரஞ்சித் மத்துமபண்டார:

ஐக்கிய மக்கள் சக்தி எம் பி.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள நெனோ யூரியா திரவ உரம் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அரசாங்கம் விசாரணை மேற்கொள்ள வேண்டும். இரசாயன உர இறக்குமதி தொடர்பில் அரசாங்கத்தினால் அவசரமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக நாட்டில் பெரும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள நேரும்.

உரத்தட்டுப்பாடு மற்றும் இரசாயன உரத்தின் அதிகரித்து விலை காரணமாக சோளம் பயிர்ச் செய்கை விவசாயிகள் மூன்றில் ஒரு வீதமானோரே இம்முறை சோளம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

சி. வி. விக்னேஸ்வரன் எம். பி

அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்திற்கு சுமையாக உள்ளனர் என்று அரச தரப்பினர் கூறி வருகின்றனர். இம்முறை வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எவரது பாதுகாப்புக்கு இந்தளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என நாம் கேட்கின்றோம். நாட்டில் இப்போது எந்த பயங்கரவாதமும் கிடையாது. இத்தகைய செயற்பாடுகள் அரசியல் நோக்கங்களுக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. அவை ஒரு போதும் மக்கள் நலனுக்கானதல்ல.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித நலன்கள் தொடர்பிலும் இந்த அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

சபையில் அதாவுல்லா எம்பி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சேதனப் பசளை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில் பால் உற்பத்தி தொடர்பிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆட்டுப்பால், ஒட்டகப்பால் ஆகியவற்றை எம்மால் பெற முடியாவிட்டாலும் பசுப் பாலை பெறக்கூடிய சகல வசதிகளும் எமது நாட்டில் உள்ளன.

தேவையான சிறந்த புல் வயல்கள், அதற்கான விவசாயிகளும் எமது நாட்டில் உள்ளனர். அதேவேளை மாட்டிலிருந்து பால் மட்டுமன்றி உரம்,சாணம், சிறுநீர் என பல்வேறு தேவைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனைக் கவனத்தில் கொண்டு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விரிவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் சிறந்த மழை வீழ்ச்சி போதிய தண்ணீர் காணப்படுகின்ற நிலையிலும் தண்ணீரையும் பணம் கொடுத்து வாங்கும் நிலை காணப்படுகின்றது அதேபோன்று பால் ஒரு கோப்பையை எமது எதிர்கால சந்ததிகளுக்கு நாம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் விவசாயத்துறை பெரும் முன்னேற்றம் கண்டது விவசாயிகளை பலப்படுத்திய தலைவராக அவரை குறிப்பிடமுடியும்.

தற்போது நஞ்சற்ற உணவு உற்பத்தி,நீண்டகால இரசாயன உர பிரச்சினை அதன் மூலம் ஏற்படும் நோய்கள் பற்றி பேசப்பட்டு வருகின்றன. இரசாயன உரத்திற்கு பதிலாக சேதன பசளையை ஊக்குவிப்பதற்கு அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதற்கான பொறுப்பு அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே சசீந்ர ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதே நிலையில் உலகில் உணவு நெருக்கடி ஏற்படலாம் என்றும் ஆருடம் கூறப்படுகின்றது. இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு சிறந்த வேலைத் திட்டங்கள் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்க்க வரவு செலவு திட்டத்தில் மேலதிகமாக 31 மில்லியன் ரூபா

ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கான அமைச்சரவை உப குழுவின் அறிக்கைக்கு அமைய, பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி தீர்வை வழங்குவதற்கு இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் மேலதிகமாக 31 மில்லியன் ரூபாய் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன

அதேபோன்று, உயர்தர பெறுபேறுகளுடன் தொடர்புடைய Z Score தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளதாக அறிவித்த அமைச்சர், ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடு காணப்படும்

நிலையில் க.பொ.த. (சாதாரண தர) பெறுபேறுகளை வெளியிடுவதில் இருந்த தடைகள் நீங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், கொவிட் 19 தொற்று நோய் காரணமாக பிற்போடப்பட்ட க.பொ.த. (உயர் தர) பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைகளுக்கான தினங்கள் தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அதற்கமைய, 2022 ஜனவரி மாதத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையையும், பெப்ரவரி முதலாம் வாரத்தில் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையையும், மே மாதம் 23 ஆம் திகதி க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையையும் நடத்துவதற்கு தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் ஒரு பாடமாக உள்ளடக்குவது தொடர்பான பாராளுமன்ற உபகுழுவினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவினால் ஆலோசனைக் குழுவின் அனுமதிக்க சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பாடசாலை பாடத்திட்டத்தில் தற்போது 6ஆம் தரம் முதல் 9ஆம் தரம் வரை கட்டாயப் பாடமாக உள்ள குடியுரிமைக் கல்வி பாடத்தை இந்த சீர்திருத்தங்களுக்குப் பிறகு சட்டம் மற்றும் குடியுரிமைக் கல்வியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இத்தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின்படி, பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாகச் சேர்ப்பதன் மூலம், மாணவர்களிடையே சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சட்டத்துக்கு கீழ்ப்படியாமை மற்றும் தண்டனையின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல், சட்டம் இயற்றுதல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறிமுறை தொடர்பில் புரிதலை ஏற்படுத்துதல், ஒரு நாகரிக சமுதாயத்தில் சட்டத்தால் நிறுவப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல் போன்ற திறன்களை வளர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தேச கல்விச் சீர்திருத்தங்களில், சிறுவயது முதல் உயர்தரம் வரை எதிர்பார்க்கப்படும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள், தொழிற்கல்வி தொடர்பான கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் உயர் கல்வி சீர்திருத்தங்கள் என மூன்று பகுதிகளாக தயாரிக்கப்பட்ட கொள்கைக் கட்டமைப்பு தொடர்பான இறுதி அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அதில் பொதுக் கல்வி குறித்து எவரும் கருத்து தெரிவிப்பதற்கான டிஜிட்டல் தளம் 2021 மார்ச் 28ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அது தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள 2400 கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, தேசிய பல்கலைக்கழகம் இல்லாத ஒவ்வொரு மாவட்டத்திலும் நகர பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள 1000 தேசிய பாடசாலை வேலைத்திட்டம் தொடர்பில் இங்கு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

கொவிட் -19 நோயாளர்களுக்கு

வீட்டு அடிப்படையிலான பராமரிப்பு தீர்வுகளை வழங்கும் 1390 திட்டம்

கொவிட்19 ஒருங்கிணைந்த வீட்டு அடிப்படையிலான பராமரிப்புத் தீர்வு, சுகாதார அமைச்சினால் (MOH) கருத்துருவாக்கம் செய்யப்பட்டு திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த வாரம் 100,000 க்கும் மேற்பட்ட வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட கொவிட் 19 நோயாளர்களுக்கான சிகிச்சையை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது. இந்த முயற்சிக்கு உலக சுகாதார அமைப்பு, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) ஆகியவை ஆதரவினை வழங்கியதுடன் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கை வங்கி மற்றும் Wavenet இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் ஆகியவற்றால் இயக்கப்பட்டது.

1390 கட்டணமற்ற மும்மொழியிலான துரித இலக்கம் மற்றும் நோயாளர் மேலாண்மை அமைப்பு என்பன, PCR/RAT பரிசோதனைகளில் தொற்றுறுதியான நோயாளர்களுக்கு வீட்டிலிருந்தவாறான பராமரிப்புக்களை நிர்வகிக்க ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தினூடாக செயல்படுத்துவதில் சுகாதார அமைச்சிற்கு (MOH) ஆதரவளிப்பதற்காக தொடங்கப்பட்டது. கட்டணமற்ற 1390 துரித இலக்கம் மற்றும் ஏனைய அனைத்து இணைப்புத் தேவைகளுக்கும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அனுசரணை வழங்குகிறது, நோயாளர் மேலாண்மை அமைப்பிற்கு Wavenet இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் அனுசரணை வழங்குவதுடன், அழைப்பு மையமானது இலங்கை வங்கியின் அனுசரனையில் செயற்படுகிறது. நோயாளர் மேலாண்மைத் திட்டமானது சிறப்பு மருத்துவ ஆலோசகர்களால் வழிநடத்தப்பட்டது. தனிப்பட்ட பராமரிப்பு/ கவனிப்பை வழங்க சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் 600 க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற மருத்துவர்கள் GMOA இன் ஒருங்கிணைப்புடன் நியமிக்கப்பட்டனர்.

1390 ஒருங்கிணைந்த வீட்டு அடிப்படையிலான பராமரிப்புத் திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாடானது, கொவிட்19 தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின் போது, வைரஸின் புதிய புறழ்வுகளின் பரவலுடன் மருத்துவமனைகளின் பராமரிப்பு அமைப்புகளுக்கான மேலதிக சுமையைக் குறைத்துள்ளது.

மத்திய வங்கியின் LANKA QR அமுலாக்கத்திற்கு ஆதரவாக கைகோர்த்துள்ள சம்பத் வங்கி

நாட்டில் LANKAQR அடிப்படையிலான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் அதன் நீண்ட கால முயற்சிகளைக் கட்டியெழுப்புவதில், சம்பத் வங்கியானது நாட்டின் முன்னணி பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான னுயஅ சழ குழுமத்தில் LANKAQR கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் திறன்களுக்கு தற்போது வழிகோலியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள Damro காட்சியறைகள் இப்போது LANKAQR ஐப் பயன்படுத்தி பணமில்லா மற்றும் தொடுகை இல்லாத கொடுப்பனவுகளை ஏற்கத் தொடங்கும். சம்பத் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பிற வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் உள்ளிட்ட வாடிக்கையாளர்கள் PoS திரைகளில் தோன்றும் இந்த தனித்துவமான ஞசு குறியீடுகளை ஸ்கேன் செய்து, LANKAQR வசதி கொண்ட கட்டணத் தீர்வுகளான ளுயஅறயவா றுநீயல போன்றவற்றைப் பயன்படுத்தி பணம், அட்டைகள் அல்லது கொடுப்பனவு முனையங்களைத் தொடாமல் பணம் செலுத்தலாம்.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் LANKAQR கொடுப்பனவுகளை பிரபலப்படுத்தும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியின் LANKAQR தொடர்பான நாடு தழுவிய ஊக்குவிப்புப் பிரச்சாரமான 'LankaQR Janagathakaranaya' ஆரம்ப நிகழ்வு அண்மையில் இலங்கை மத்திய வங்கியின் வளாகத்தில் இடம் பெற்ற சமயத்தில் இந்த கூட்டாண்மை தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

டிஜிட்டல் கொடுப்பனவுகளை துரிதப்படுத்துவதன் மூலம் பணம் மூலமாக மேற்கொள்கின்ற கொடுப்பனவுகளைக் குறைக்கின்றதொரு சமூகத்தை உருவாக்கும் அரசாங்கத்தினதும் இலங்கை மத்திய வங்கியினதும் குறிக்கோளுக்கு ஆதரவளிக்கும் சம்பத் வங்கியின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்டாரகமவில் 15 மில். டொலர் முதலீட்டில் மருத்துவ சாதனங்கள் தயாரிப்பு தொழிற்சாலை

நிதி அமைச்சரால் திறந்து வைப்பு

U.K, Flexicare குழுமத்தின் துணை நிறுவனமான Flexicare Lanka நிறுவனம் இலங்கையில் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி நிலையத்தை பண்டாரகமவில் திறந்து வைத்துள்ளது. 15 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இது, புதிய புத்தாக்க மருத்துவ சாதனங்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையாகும். தற்போதுள்ள 150 பணியாளர்களுடன் நாட்டில் அதன் முதல் கட்ட நடவடிக்கைகளை அது ஆரம்பித்துள்ளது.

பண்டாரகமவில் அண்மையில் நடைபெற்ற பிரம்மாண்டமான திறப்பு விழாவில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் Flexicare உற்பத்தி தொழிற்சாலை, உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், கௌரவ விருந்தினர்களாக இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் (Sara Hulton) மற்றும் சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் விசேட அதிதியாக முன்னாள் சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன, Flexicare Lanka நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஊடக நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு கௌரவ விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதம அதிதி பசில் ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில், உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சாதன உற்பத்தி நிறுவனமான Flexicare நிறுவனத்திற்கு, குறிப்பாக உலகளாவிய தொற்றுநோய்க்கு மத்தியில் இலங்கையில் தனது முதலீட்டுத் தெரிவை மேற்கொண்டமை தொடர்பில் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Flexicare இன் உயிர் நிலைபேறுத்தன்மை மற்றும் உயிர்காக்கும் தயாரிப்புகள் எமது சொந்த நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு, உலக அளவில் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தப் போவதைக் காண்பதில் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் தருகிறது" என்றார்.

Hatchக்கு Global Startup Awards 2021விருது

இலங்கையின் இணைந்து பணியாற்றும் பகுதியும், ஆரம்பநிலை வர்த்தகங்களின் அமைவிடமும் ஊக்குவிப்பகமுமான Hatch, உலகின் சிறந்த இணைந்து பணியாற்றும் பகுதிக்கான விருதை வென்றுள்ளது. Global Startup Awards 2021 நிகழ்வில் கௌரவ விருதை வென்றுள்ளது. இலங்கையின் அல்லது தெற்காசிய நிறுவனமொன்று இவ்விருதைப் பெற்றுக்கொண்ட முதல் சந்தர்ப்பமாகும்.

இலங்கையின் ஆரம்பநிலை கட்டமைப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக இது அமைந்துள்ளது. ஆரம்பநிலை வர்த்தகங்களுக்கு வேகமான வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கு, இணைந்து பணியிடப்பகுதி கொண்டிருக்க வேண்டிய சேவைகள், ஆதரவு மற்றும் வளங்கள் மற்றும் உலகில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கலாசாரம் மற்றும் சூழல் ஆகியவற்றை உருவாக்க அவசியமான புத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் போன்றவற்றின் பிரகாரம் இந்த விருதுக்காக இணைந்து பணியிடம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

பிராந்திய மற்றும் சர்வதேச நிலைகள் ஆகிய இரண்டு சுற்றுகளிலிருந்து Hatch தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 18000 விண்ணப்பங்கள் வரை இதில் கிடைத்திருந்தன. இறுதிப்போட்டியில் ஐந்து உலகத்தரம் வாய்ந்த போட்டியாளர்களுடன் போட்டியிட்டு, தமக்கான விருதை Hatch வெற்றியீட்டியிருந்தது. உலகின் எதிர்காலத்துக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் Global Startup விருதுகள் அமைந்திருப்பதுடன், கடந்த தசாப்த காலப்பகுதியில் UiPath, Zendesk, Supercell, Turbine மற்றும் Grab போன்ற நிறுவனங்களை கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Hatchஐப் பொறுத்தமட்டில், கடந்தகாலங்களில் முன்னெடுத்திருந்த பணிகளுக்காக சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. Hatchஇன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் இணை ஸ்தாபகருமான பிருந்தா செல்வதுரை ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், மூன்று குறுகிய ஆண்டுகாலப் பகுதியில், தொழில்முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்கான அடித்தளத்தை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பான எமது நோக்கம் மற்றும் முயற்சிகளுக்கு சர்வதேச அளவில் கௌரவிப்புக்கிடைத்துள்ளமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

ஆரோக்கிய துவாய் விநியோகத்தின் மூலம்

மாதவிடாய் ஆரோக்கியத்தை இயல்பாக்கும் Fems Aya

முன்னணி பெண்கள் சுகாதார வர்த்தக நாமமான Fems, கடந்த 2021 மார்ச் மாதத்தில், மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய நடைமுறைகள் குறித்து பெண்களுக்கு தெளிவுபடுத்தும் மற்றும் மலிவான விலையில் ஆரோக்கிய துவாய்களை சந்தையில் அறிமுகப்படுத்தும் ஆகிய இரு தனித்துவமான குறிக்கோள்களுடன் ஒரு புதிய பயணத்தை ஆரம்பித்தது. அதன் முயற்சிகள் எதிர்பார்த்த முடிவுகளை விட சிறப்பான பெறுபேறுகளை வழங்கியிருந்த நிலையில், ஒரு பெரு நிறுவன முன்னோடி எனும் வகையில் Hemas, நிறுவனம் அதன் நோக்கத்தை நடைமுறைப்படுத்த, Fems Aya ஆரோக்கிய துவாய்களை அதன் முழு ஊழியர்களுக்கும் இலவசமாக விநியோகிக்கும் திட்டத்தை செயல்படுத்தியது. இதில் ஆண்களும் பங்குபெறும் வகையில் அவர்களின் நேரடியான உறவினர்கள் மற்றும் தொழில் முறை ரீதியான தொடர்பாளர்களிடையே விநியோகிக்கும் பொருட்டு அவர்களுக்கும் அதனை வழங்கியிருந்தது. மலிவான மற்றும் உயர்தர மாதவிடாய் சுகாதாரப் பொருட்களுக்கான அணுகலை நோக்காகக் கொண்டு, மாதவிடாய் தொடர்பான தவறான கருத்துகளை நீக்கும் வகையில் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனை நாடு முழுவதுமுள்ள கணிசமான அளவிலான பெண்களை சென்றடைவதனையும் நோக்கமாகக் கொண்டு MJF Foundation, ARKA Initiative, Sarvodya பெண்கள் அமைப்பு மற்றும் Sarvodaya Fusion போன்ற ஒரே எண்ணம் கொண்ட அமைப்புகளுடன் Fems Aya இம்முயற்சியை முன்னெடுத்தது.

மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் பற்றிய தெளிவூட்டலை ஏற்படுத்தி அது தொடர்பான கட்டுக்கதைகளை தகர்ப்பது காலத்தின் தேவையாக இருந்தது.

உலக கழிப்பறை தினத்தை கொண்டாடிய ஹார்ப்பிக்

உலகில் பெயர்பெற்ற நுகர்வோர் பண்ட பெருநிறுவனமான Reckitt இன் வர்த்தக நாமமான கழிப்பறை கிருமிநாசி ஹார்ப்பிக் உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு மீரிகம ஆதார வைத்தியசாலையின் துப்பரவு உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்து, மறுசீரமைத்தது. நாளொன்றுக்கு 750 முதல் 1000 பேர் வரையானவர்களுக்கு சேவையாற்றும் ஆதார வைத்திய சாலையாக இது காணப்படுகிறது. "Harpic: Mission Wellbeing" என்ற தொனிப் பொருளில் நவம்பர் 19ஆம் திகதி உலக கழிப்பறை தினம் கொண்டாடப்பட்ட நாளில் புனரமைக்கப்பட்ட வசதிகள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

உள்ளூர் சுகாதாரத் துறையினரைப் பலப்படுத்துவதற்கு இதுபோன்ற ஒத்துழைப்புக்களை வழங்க ஹார்ப்பி உற்பத்திகளை உள்நாட்டில் விநியோகிக்கும் Reckitt Sri Lanka நிறுவனம் பல வருடங்களாக உள்நாட்டு சுகாதார அதிகாரிகளுடன் கைகோர்த்துள்ளது. 2017ஆம் ஆண்டு முதல் மக்களின் வீடுகளில் உள்ள கழிப்பறைகளை புனரமைப்பதற்காகக அவர்கள் பணியாற்றியிருப்பதுடன், வருடத்துக்கு 150 குடும்பங்கள் வீதம் கடந்த நான்கு வருடங்களில் 600ற்கும் அதிகமான குடும்பங்கள் இதன்மூலம் நன்மையடைந்துள்ளன.

பொது துப்பரவு வசதிகளுக்கான அர்ப்பணிப்பு இத்துடன் நிறைவடையவில்லை. கடந்த 3 ஆண்டுகளாக அவர்கள் சிவனொளிபாத மலையில் உள்ள பொது குளியலறையில் துப்புரவுத் திட்டத்தை நடத்தி 600,000 யாத்ரீகர்களுக்கு வசதிகளை வழங்கியுள்ளனர்.

Reckitt Sri Lanka இன் சந்தைப்படுத்தல் தலைவர் ஷமிந்த பெரேரா இந்த முயற்சி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,: "சுகாதாரமான இடத்தில் ஒரு வர்த்தகநாமமாக, அனைத்து குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதில் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்; இந்த ஆண்டு தொனிப்பொருள் மற்றும் எங்கள் நிறுவன நெறிமுறைகளுடன் இணைந்து, இந்தப் புனரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

எதிர்காலத்தில் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சுடன் இணைந்து இது போன்ற முன்முயற்சிகளில் பங்குபெற நாங்கள் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

Allianz உடன் இணைந்து தனது

வாடிக்கையாளர்களுக்கு 'MercedesProtect' இனை வழங்குகிறது DIMO

இலங்கையில் உள்ள முன்னணி பல்வகை கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO, அதன் MercedesBenz வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மோட்டார் காப்புறுதித் திட்டமான 'MercedesProtect' இனை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. MercedesBenz இன் உலகளாவிய காப்புறுதி பங்காளரான Allianz உடன் இணைந்து, DIMO வின் பெருமைக்குரிய MercedesBenz வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததை வழங்கும் நோக்கில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

MercedesProtect ஆனது, வாகன உரிமையாளரின் பூச்சிய பங்களிப்பு அடிப்படையிலான காப்புறுதி வசதியாகும். வாகனக் காப்புறுதியின் போதான கோரல்களின் (insurance claims) போது, உரிமையாளரின் கணக்கின் பகுதியை முழுமையாக விட்டுக்கொடுத்து, 'விபத்து பழுதுபார்த்தலை முற்றிலும் பூச்சிய செலவில்' வழங்குகிறது. இத்திட்டத்தில், மோட்டார் காப்புறுதி கோரலின் விபத்து தொடர்பான பழுதுபார்த்தலில், வாடிக்கையாளர் எந்தவொரு பகுதியையும் செலுத்த வேண்டியதில்லை. இதன் மூலம், புகழ்பெற்ற MercedesBenz வாகனங்களுக்கான சிறந்த பாதுகாப்புத் தீர்வாக MercedesProtect அமைகின்றது.

இந்த காப்புறுதித் திட்டம், உற்பத்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களுக்குக் குறைவான வாகனங்களுக்கு பொருந்தும் என்பதுடன், வாகனத்தின் அனைத்து உடல் மற்றும் பூச்சு பழுதுபார்ப்புகள், சேவைகள் யாவும் MercedesBenz இனது விசேட மையமான DIMO 800 இனால் பிரத்தியேகமாக கையாளப்படுகின்றன. அனைத்து பழுதுபார்த்தல் பணிகளும் MercedesBenz AG பழுதுபார்த்தல் வழிகாட்டல்களை இறுக்கமாக பின்பற்றியவாறு மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் MercedesBenz வாகனங்களுக்கான ஒரே அங்கீகரிக்கப்பட்ட முகவர் DIMO என்பதுடன், தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் உள்ள வாகன உடல் மற்றும் பூச்சு பழுதுபார்ப்புகளுக்கான MercedesBenz AG சான்றளிக்கப்பட்ட, MercedesBenz AG பயிற்சி பெற்ற பழுதுபார்த்தல் வல்லுநர்கள் குழுவைக் கொண்ட, பொது விநியோகஸ்தர் சேவை மையத்தையும் அது கொண்டுள்ளது.

நீர்கொழும்பு மாநகர சபை

மாநகர சபை கட்டளை சட்டத்தின் 235 (I) விதியின் கீழான அறிவித்தல்

வரி அறவீடு - 2022

01. மாநகர சபை கட்டளை சட்டத்தின் 235(I) பந்தியின் விதிமுறைகளுக்கு அமைவாக இந்தமாநகர சபை 2022 வருடத்துக்கான வரிக் கட்டண அட்டவணையை தயாரித்து குறிப்பிட்ட நகர சபை அலுவலகத்தில் வைத்துள்ளதெனவும் இந்த அட்டவணையை பொது மக்கள் பரீட்சிக்கலாம் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

02. மேலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230ம் பந்தி பிரகாரம் அதில் அடங்கியுள்ள விதி முறைகளுக்கு அமைவாக நீர்கொழும்பு மாநகர சபையில் 2022 வருடத்துக்காக கீழ் கண்டவாறு வரிக்கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்படுகின்றது.

03. நீர்கொழும்பு நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் வருடாந்த பெறுமதியின் பதின்மூன்று வீதமும் (13%) மற்ற எல்லா வீடுகள் மற்றும் எல்லா விதமாகவும் விபரிக்கப்படும் கட்டிடங்கள், காணி மற்றும் சிறிய வீட்டு தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியில் ஆறு வீதமும் (6%) அறவிடப்படும்.

04. கொச்சிக்கடை நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களின் வருடாந்த பெறுமதியின் பதின்மூன்று (13%) வீத வரியும், வேறு எல்லா வீடுகள் மற்றும் எல்லாவிதமாகவும் விபரிக்கப்படும் கட்டிடங்கள், காணி, மற்றும் சிறிய வீட்டு தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியில் 7% வீத வரியும், அறவிடப்படும்.

05. தலாஹேன நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களின் வருடாந்த பெறுமதியின் பதின்மூன்று (13%) வீத வரியும், மற்ற எல்லா வீடுகள் மற்றும் எல்லா விதமாகவும் விபரிக்கப்படும் கட்டிடங்கள், காணி மற்றும் சிறிய வீட்டு தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியின் 7% வீதமும் அறவிடப்படும்.

06. 2022 ஆண்டில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தவணைகளில் வரிகட்டணங்கள் முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்டெம்பர் 30, மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் அல்லது அதற்கு முன்பு நகர சபை அலுவலகத்தில் செலுத்தி முடிக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு செலுத்தப்படாத எல்லா வரிகட்டணங்களுக்கும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 255 (அ), 11, 111 பந்திகளின் பிரகாரம் சொத்தின் தன்மை பிரகாரம் பதினைந்து (15%) வீதமும் மற்றும் இருபது (20%) வீத கட்டணங்களும் மேலதிகமாக அறவிடப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

07. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 230(I) மற்றும் (4) விதியின் கீழ் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட சட்ட திட்டங்கள் பிரகாரம் வருடாந்த வரிக்கட்டணம் 2022 ஜனவரி 31ம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்தப்பட்டால் 10% கழிவும் மூன்று மாத கட்டணங்களை முதலாவது மாதத்திலேயே செலுத்தினால் 5% கழிவும் வழங்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

08. உங்களால் செலுத்தப்படும் வரிக்கட்டணம் உங்கள் நன்மைக்காகவே உபயோகிக்கப்படுவதால் உங்கள் வரிக்கட்டணங்கள் உரிய நேரத்தில் செலுத்தி உங்களது பங்களிப்பை சபைக்கு பெற்றுத்தரும்படி தயவாய் வேண்டுகிறோம்.

N.B.R.V. பர்ணாந்து
மாநகர சபை ஆணையாளர்,
மாநகர சபை, நீர்கொழும்பு.

இவ் அறிவித்தல் 2021.11.25ஆம் திகதி தினகரன் 21 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதில் தவறுகள் இருப்பதால் மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது

சம்பள சபைகள் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

தெங்கு உற்பத்தித் தொழில்

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136-ஆம் அத்தியாயம்) 28ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் ஆட்சேபணைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றை உடையதாய் எழுத்துவாயிலாகச் செய்யப்படல் வேண்டும்.

பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி
தலைவர்,
தெங்கு உற்பத்தித்
தொழிலுக்கான சம்பளச் சபை.

மெஹெவரபியெச
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2021ஆம் ஆண்டு 11 மாதம் 24ஆந் திகதி

அட்டவணை

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆந் திகதிய 9971ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாகவும், 2019ஆம் ஆண்டு சனவரி மாதம் 30ஆந் திகதிய 2108/35ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவாறானதுமான தீர்மானங்கள், அவ் அட்டவணையின் IIஆம் மற்றும் IIIஆம் பாகங்களுக்குப் பதிலாக பின்வரும் புதிய பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

11ஆம் பாகம்

சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் விவரிக்கப்பட்டுள்ள தெங்கு உற்பத்தி தொழிலுக்குரிய நடவடிக்கைகளின் குறித்த சில செய்முறைகளுக்குப் பொருந்துவனவும் துண்டு வேலைக்குரியனவுமான கீழெல்லைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு:

செய்முறைகள்	விகிதம்	ரூ.ச.
உலர்த்திய தேங்காய் பூ உற்பத்தி		
தேங்காய்களை உரித்தல்	100 காய்களுக்கு	541.00
சிரட்டைகளை அகற்றுதல்	1000 காய்களுக்கு	375.00
மேல் தோல் சீவுதல்	1000 காய்களுக்கு	375.00
தேங்காய்ப் பருப்பைக் கழுவுதலும் உடைத்தலும்	1000 இறாத்தலுக்கு	327.00
உலர்த்துதல் (சுயமாகவன்றி)	1000 இறாத்தலுக்கு	256.00
சிறு துண்டுகளாக்குதல் மூலம் உலர்த்துதல்	1000 இறாத்தலுக்கு	345.00
சலித்தெடுக்கும் வகைப்படுத்தலும்	1000 இறாத்தலுக்கு	290.00
அடைத்தலும் பெட்டிகளுக்கு அடையாளமிடுதலும்	120-130 இறாத்தல் வரையான பை ஒன்றிற்கு	23.00

குடிசைத் கைத்தொழிலாகவன்றி வேறு வகையில் தும்பு, கயிறு ஆகிய உற்பத்தி செய்தல்

		ரூ.ச.
மட்டை அடித்தல் (கிளர்த்திய பின் ஈர நிறை)	அந்தர் ஒன்றிற்கு	236.00
மட்டைகளைப் பிரித்தலும் சுத்தப்படுத்தலும் (ஈரநிறை)	அந்தர் ஒன்றிற்கு	236.00
மெத்தை தும்பு சுத்தப்படுத்தலும் காய வைத்தலும்	அந்தர் ஒன்றிற்கு	202.00
சிப்பமாக்குதலும் சிலிர்த்த தும்பை கிளர்த்தலும், சிப்பமாக்குதலும்	அந்தர் ஒன்றிற்கு	192.00
பாய்களின் உற்பத்தியும் பின்னலும்:		
பாய்கள்	சதுர அடி ஒன்றிற்கு	232.00
பின்னல் பாய்கள்	சதுர அடி ஒன்றிற்கு	211.00
சிலிர்த்த தும்பை சிக்குவாங்குதலும் கூட்டுதலும்	அந்தர் ஒன்றிற்கு	628.00

111ஆம் பாகம்

நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பளம்

"இதனோடுள்ள 1-ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சாதாரண வேலை நாளொன்றிற்கு ஏற்புடையதாகவுள்ள நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம், II - ஆம் நிரலிலுள்ள நேரொத்த பிரிவில் தரப்பட்டுள்ள விகிதமாகும்."

	நிரல் வேலையாளர் வகுப்பு	நிரல் II விகிதம் ரூ.ச.
01. உலர்த்திய தேங்காய் உற்பத்தி செய்வதில்	கங்காணி ஒருவருக்கு	595.00
02. தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதில்	வேலையாள் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்)	574.00
03. இழை உற்பத்தி பொருட்களையும் தும்பு உற்பத்தி பொருட்களையும் செய்வதில்	18 வயதிற்கு குறைந்த வேலையாளர் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்)	500.00
04. தும்பு, சிலிர்த்த தும்பு உற்பத்தி	கங்காணி ஒருவருக்கு	500.00

கேள்வி அறிவித்தல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

Supply and Installation of Main Fire Wall for Sri Lanka Rupavahini Corporation

Tender Number: 85/16.12.2021

கொழும்பு-07, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு **Main Fire Wall** ஐ வழங்கல் மற்றும் நிறுவுவதற்காக உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோரிடமிருந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனமானது கேள்விகளை அழைக்கின்றது.

2021.12.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து நியதிகள், நிபந்தனைகள், அளவுக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபாவை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்திய பின்னர், பெறக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பெறுகை அலுவலகத்தில் கேள்வி ஆவணத்தை இலவசமாக பரீட்சிக்கலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளில் 2021.12.16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகை குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். 2021.12.16 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியின் பின்னர் உடனடியாகவே கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

தலைவர்/பெறுகை குழு,
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. ல/பிசெ/3/3/5/12/1
காணி அமைச்சின் குறிப்பு இல. 13/96/FR/85

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிரக்கிறார்கள். மேலதிக விரபங்களுக்கு இலக்கம் 2252/55 கொண்ட 2021.11.06 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	: மாத்தளை
பிரதேசச் செயலகப் பிரிவு	: லக்கல
கிராம அலுவலர் பிரிவு	: இல. E387, மஹலகொட்டுவ பிரிவு
கிராமம்	: மஹலகொட்டுவ
காணியின் பெயர்	: பனவெல்லாவாடிய
வரைபட இலக்கம்	: பூ.பூ.வ.இல. 21, குறை நிரப்பி இல. 78, பத்திர இல. 38
துண்டு இலக்கம்	: 1499, 1500
விஸ்தீரணம்	: து.இ.1499-10.4271 ஹெக்டயர் து.இ.1500-3.0647 ஹெக்டயார்

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

2021.11.22ஆம் திகதி
லக்கல பிரதேச செயலகத்தில்

கொழும்பு மாநகர சபை

2021/04ஆம் காலாண்டிற்கான வரிக்கட்டண வரி செலுத்தும் இறுதித் திகதி, 2022/01ஆம் காலாண்டிற்காக 5% கழிவு பெறுதல் மற்றும் 2022 நான்கு காலாண்டுகளுடன் சம்பந்தப்பட்ட முழுமையான வரிக்கட்டண தொகையை ஒரே முறையல் செலுத்தி 10% கழிவு பெற்றுக் கொள்ளல்

2021/04ஆம் தவணை

1. 2021/04ஆம் காலாண்டிற்காக செலுத்த வேண்டிய வரிக்கட்டணம் வரி 2021 டிசம்பர் 31ம் திகதி அல்லது அதற்கு முன் இவ் அலுவலகத்திற்கு கிடைத்தல் வேண்டும்.
2. 2021.12.31ம் திகதிக்குப் பின்னர் 2021/04ஆம் காலாண்டிற்காக மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் சார்பாக குடியிறுப்புச் சொத்து மற்றும் தரிசு நிலத்திற்காக காலாண்டின் வரிக்கட்டண வரி பெறுமதியில் 15%உம் ஏனைய சொத்துக்களுக்கு 20% ஆக தண்டக் கட்டணம் அறவிடப்படும்.

2022 சகல தவணைகள்/2022/01ஆம் தவணை

3. 2022 ஜனவரி 31 அல்லது அதற்கு முன் 2022 சகல தவணைகளுக்கும் கொடுப்பனவிற்காக ஆண்டின் முழு வரிக்கட்டண வரி பெறுமதியில் 10% கழிவாக வழங்கப்படும்.
4. 2022 ஜனவரி 31 அல்லது அதற்கு முன் 2022/01 காலாண்டு சார்பாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகளுக்கு காலாண்டின் வரிக்கட்டண வரி பெறுமதியில் 5% கழிவாக வழங்கப்படும்.

வரிக்கட்டண வரி செலுத்தக் கூடிய முறை

5. நகர சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வரிக்கட்டண கரும பீடம் மற்றும் காசாளர் கரும பீடம் வாரத்தில் சகல அலுவலக நாட்களிலும் மற்றும் அரச விடுமுறை தினம் அல்லாத சனிக்கிழமை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை திறக்கப்படும். காசாளர் கரும பீடத்திற்கு காசு, காசோலை, கடன் அட்டை (Credit Card) மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.
6. கொழும்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ள இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி கிளை (நகர மண்டபக்கிளை தவிர்ந்த) மூலம் வரிக்கட்டண வரி செலுத்த முடியும் அத்துடன் அங்கு நகர சபையினால் வங்கிக்கு வழங்கியுள்ள மாதிரிப் பத்திரங்களை மட்டும் பாவித்து வரிக்கட்டண வரி செலுத்துதல் வேண்டும். குறித்த மாதிரிப் பத்திரங்களை பாவிக்காமலிருத்தல் மற்றும் மாதிரிப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டிய சகல விடயங்களும் சரியாக பூர்த்தி செய்யாதிருத்தல் போன்ற காரணங்களினால் காசு முறையாக கணக்கில் இடப்படாமை பற்றி நகர சபையினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.
7. கொழும்பு மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.colombo.mc.gov.lk ஊடாக சேவைக் கட்டணமின்றி ஒன்லைன் (online) முறையில் வரிக்கட்டண வரியை செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது.
8. கொழும்பு நகர சபைக்கு செந்தமான கீழ்க்காணும் அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ள வரிக்கட்டண கரும பீடம் மற்றும் காசாளர் கரும பீடத்தில் வாரத்தின் சகல அலுவலக நாட்களிலும் மு. ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வரிக்கட்டண வரி செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
   I. மாவட்ட அலுவலகம் இல. 4 - ரொபர்ட் குணவர்தன மாவத்த, கிருலப்பன
9. கொமர்சல் வங்கியில் கணக்கு உள்ள வரி செலுத்துபவர்களுக்கு வலையமைப்பின் ஊடாக கொழும்பு மாநகர சபைக்கு வரிக்கட்டணவரி செலுத்தும் வசதிகள் காணப்படும்.
   காசோலை மூலம் வரிக்கட்டண வரி செலுத்தும்போது கீழ்க்காணும் விடயங்கள் பற்றி கவனம் எடுத்தல் வேண்டும்.
10. 'மாநகர பொருளாளர், கொழும்பு மாநகர சபை' பெயருக்கு காசோலை எழுதப்படல் வேண்டும். அத்துடன் 'கொடுக்கப்படுபவரின் கணக்கிற்கு மாத்திரம்' என்று எழுதப்படல் வேண்டும்.
11. சகவ காசோலைகளினதும் பின்பக்கம்
    (அ) வரிக்கட்டண கணக்கு இலக்கம்
    (ஆ) செலுத்துபவரின் பெயர் மற்றும் முகவரி
    (இ) சொத்து இலக்கம், வீதி, பிரிவு
    (ஈ) கொடுப்பனவு செலுத்தப்படுவது எந்த காலாண்டிற்கு என்பதுவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
12. காசோலைகள் மாறிய பின்னரே உத்தியோக பூர்வ பற்றுச் சீட்டு விநியோகிக்கப்படும்.

வேறு விடயங்கள்

13. தபால் மூலம் அனுப்பப்படும் காசோலைகள் வங்கி நிலையான கட்டளையின் கீழ் கொடுப்பனவுகள் மேற்படி இல. 1, 3 மற்றும் 4இல் குறிப்பிடப்படும் குறித்த தினம் அல்லது அதற்கு முன் இந்த அலுவலக த்திற்கு கிடைக்குமாறு மாநகர பொருளாளர், மாநகர பொருளாளர் திணைக்கம், கொழும்பு மாநகர சபை, த. பெ. 108, நகர மண்டபம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
14. வரிக்கட்டண வரி பற்றிய தொடர்புகள்
    தொலைபேசி இல. 011 2693136, 011 4360847 (கணக்காளர் வரிக்கட்டணங்கள்)
    மின்னஞ்சல் acc02@colombo.mc.gov.lk/ acc07@colombo.mc.gov.lk
    இணையத்தளம்: www.colombo.mc.gov.lk

சட்டத்தரணி ரோஷனீ திஸாநாயக்க,
மாநகர ஆணையாளர்,
கொழும்பு மாநகர சபை.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. ல/பிசெ/3/3/5/7/1
காணி அமைச்சின் குறிப்பு இல. 13/99/FR/89

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அர சாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விரபங்களுக்கு இலக்கம் 2252/55 கொண்ட 2021.11.06 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	: மாத்தளை
பிரதேசச் செயலகப் பிரிவு	: லக்கல
கிராம அலுவலர் பிரிவு	: இல. E389A, கங்கஹேன்வல பிரிவு
கிராமம்	: கங்கஹேன்வல
காணியின் பெயர்	: ஆரச்சிதெவொல
வரைபட இலக்கம்	: பூ.பூ.வ.இல. 21, குறை நிரப்பி இல. 77, பத்திர இல. 37
துண்டு இலக்கம்	: 1497
விஸ்தீரணம்	: து.இ.1497-0.5098 ஹெக்டயார்

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

2021.11.22ஆம் திகதி
லக்கல பிரதேச செயலகத்தில்

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. ல/பிசெ/3/3/5/18/1
காணி அமைச்சின் குறிப்பு இல. LD05/2001/FR/131

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அர சாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விரபங்களுக்கு இலக்கம் 2252/55 கொண்ட 2021.11.06 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டம்	: மாத்தளை
பிரதேசச் செயலகப் பிரிவு	: லக்கல
கிராம அலுவலர் பிரிவு	: இல. E385, பிட்டவல பிரிவு
கிராமம்	: பிட்டவல
காணியின் பெயர்	: பதனகடய
வரைபட இலக்கம்	: பூ.பூ.வ.இல. 21, குறை நிரப்பி இல. 79, பத்திர இல. 39
துண்டு இலக்கம்	: 1502
விஸ்தீரணம்	: து.இ.1502-0.2615 ஹெக்டயார்

எஸ். விஜயகுமார்,
பிரதேச செயலாளர்,
லக்கல.

2021.11.22ஆம் திகதி
லக்கல பிரதேச செயலகத்தில்

சீதாவக பிரதேச சபை - ஹங்வெல்ல

ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் – 2022

2022ஆம் ஆண்டின் பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்வதற்காக எதிர்பார்த்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள்/ அங்கீகாரம் பெற்றுள்ள தொண்டர் அமைப்புக்கள்/ வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து 2021.12.27 அன்று பி.ப. 3.00 வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனைத்து விண்ணப்பங்களும் தம் நிறுவனம் (இருப்பின்) முகவரி மற்றும் ஏனைய விபரங்களுடன் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் பின்வரும் மாதிரிப்படிவத்திற்கமைவாக மேற்படி விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளில் 'வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2022' எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேற்படி விண்ணப்பப்படிவத்தை எமது www.seethawaka.ps.gov.lk என்ற இணையத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதற்காக ரூபா 1000.00 இற்கான படிவக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அதற்காக 'தலைவர், சீதாவக பிரதேச சபை' என்ற பெயருக்கு வரையப்பட்ட காசோலையொன்று உங்கள் விண்ணப்பத்துடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

இதற்காகப் பதிவு செய்து கொள்ள ஆர்வமுள்ள வழங்குநர்கள் சீதாவக பிரதேச சபை அதிகாரப் பிரிவில் குறிப்பிடப்படும் நிலையங்களிற்கு பண்டங்களை ஏற்றி இறக்கி ஒப்படைத்தல் வேண்டுமென வலியுறுத்துகின்றேன்.

அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ரூபா 1000.00 இற்கான தொகையைப் பதிவுக்கட்டணமாக (படிவக்கட்டணம்) செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் ஒப்பந்தப் பெறுமானத்திற்குச் சமமான பெறுமதிச் சான்றிதழ் ஒன்று பிரதேச செயலாளரிடம் பெற்று விண்ணப்பங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். சித்திகரமான ஒப்பந்தக்காரர் என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ICTAD (CIDA) நிறுவனத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் பெறுமதிச் சான்றிதழ் சமர்ப்பிக்கத்தேவையில்லை.

1. **வழங்கல்கள் மற்றும் சேவைகள்:**
   1) அலுவலக உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகள்
   2) மின்சாரப் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள்
   3) மரச்சாமான்கள்
   4) அச்சு நடவடிக்கைகள்
   5) சுகாதார உபகரணங்கள் (கூட்டுமாறுகள் தும்புத்தடிகள் இரேக்கைகள் வண்டிகள் மண்வெட்டிகள், சவல்கள்)
   6) கைத்தொழில் உபகரணங்கள் (கல், மணல், செங்கல், குப்பைகள் அழுத்தப்பட்ட கொங்கிறீட் புளொக் கற்கள் இரும்பு, சீமெந்து பலகைகள், பராள, ரீப்ப GI குழாய்கள், வர்ணப்பூச்சு வகைகள் எஸ்பெஸ்டோஸ், நீர்க்குழாய்கள் போன்றவை)
   7) ஹியும் குழாய்கள்
   8) தொற்று நீக்கிகள் மற்றும் ஔடத வகைகள்
   9) போக்குவரத்து நடவடிக்கைகளிற்காக (வேன், லொறி, பூம்ட்ரக்)
   10) சீருடைத்துணிகள் மற்றும் சிகிச்சைகளிற்கான துணி வகைகள்
   11) போக்குவரத்து உபகரணங்கள் (டயர், டியுப் போன்றவை)
   12) இயந்திர உபகரணங்கள் (டோசர், மண் வெட்டும் இயந்திரம், வீதி தகர்ப்பு இயந்திரங்கள் கல் உருளைகள் போன்றவை)
   13) பெயர்ப்பலகைகள்/பதாகைகளைத் தயாரித்தல்
   14) கணனி துணை உருப்புக்களை வழங்கல் மற்றும் சேவை செய்தல்
   15) சகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் (கையுறைகள், முகமூடிகள், மழை அங்கிகள், கம்பூட்ஸ், சப்பாத்து பூட்ஸ்)
   16) தார் மற்றும் கோலாஸ் வழங்கல்
   17) விளையாட்டுப் பண்டங்கள்
   18) கண்ணாடிகள் மற்றும் கண்ணாடிப் பண்டங்கள்
   19) வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் வாகனங்களின் சேர்விசு வேலைகள்
   20) தீயணைப்புக் கருவிகள்
   21) பொலித்தீன் உறைகள்/உர உறைகளை வழங்கல்
   22) நில அளவைச் சேவைகள்
   23) L.P. Gas
   24) சட்டத்தரணிகள் சேவைகள்
   25) ஒலிபெருக்கிச் சேவைகள்
   26) முன்கலவை கொங்கிறீட் (Ready Mis) வழங்கல்

பின்வரும் ஒப்பந்தப் பெறுமானம் மற்றும் CIDA தரத்திற்கமைவாக பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

தொ. இல.	ஒப்பந்தப் பெறுமானம்	CIDA தரம்
01	02 மில்லியன்களிற்குக் குறைவான	C9 அல்லது C8
02	02 மில்லியன்களிற்கு மேல் மற்றும் 05 மில்லியனுக்குச் சமமான அல்லது குறைந்த	C8 அல்லது C7
03	05 மில்லியனுக்கு மேல் மற்றும் 10 மில்லியனுக்குச் சமமான அல்லது குறைவான	C7 அல்லது C6
04	10 மில்லியனுக்கு மேல் அல்லது 25 மில்லியனுக்குச் சமமான அல்லது குறைவான	C6 அல்லது C5
05	25 மில்லியனுக்கு மேல் மற்றும் 50 மில்லியனுக்குச் சமமான அல்லது குறைவான	C5 அல்லது C4

93 நிபந்தனைகள்

1. மேற்படி வழங்கல்கள் மற்றும் சேவைகள்/ ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அதற்காகத் தனித்தனி படிவக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
2. பதிவுக்குத் தகைமையுள்ள அனைத்து வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பொதுவாக 06 மாத காலத்தினுள் மாற்றம் அடையாமல் நிலையான நிலைமையில் வைத்திருத்தல் வேண்டும்.
3. வழங்குநர்கள் 30 நாட்களிற்கான கடன் எல்லையின் அடிப்படையில் பதார்த்தங்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு உடன்படுதல் வேண்டும்.
4. பதிவு செய்து கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்
   1) வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள் இப்பதிவுக்காக தனித்தனியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   2) ஒன்றுக்கு மேற்பட்ட சேவைகளிற்காகப் பதிவு செய்ய நாடினால் ஒவ்வொரு சேவைக்காகவும் படிவக்கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
   3) கூட்டுத்தாபனம் ஒன்றெனின் அதற்காக சட்டமாக்கப்பட்ட சான்றிதழ்
   4) தனிநபர் வியாபாரமொன்றெனின் அதன் பதிவுச் சான்றிதழ்
   5) கம்பனியொன்றெனின் கம்பனியாகப் பதிவு செய்யப் பெற்றுள்ள சான்றிதழ்
5. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிற்குப் புறம்பாக வேறு வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் பண்டங்கள் மற்றும் சேவைகளிற்காக விலை மனுக்களைப் பெற்றுக் கொள்ளும் உரிமை சீதாவக பிரதேச சபைக்கு உரித்தாகும்.
6. பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகையில் குறித்த பண்டங்கள் அல்லது சேவைகளை எவரிடமிருந்து பெற்றுக் கொள்வதென்பதனை நிச்சயிக்கும் தீர்மானம் மதிப்பீட்டுக் குழுவொன்றின் பரிந்துறையின் பிரகாரம் பெறுகைக் குழு மற்றும் தலைவரினால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தீர்மானிக்கப்படும்.
7. வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் சபைக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் அவர்களிடமிருந்து மாத்திரம் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்ற உரிமை அவர்களுக்கு இருத்தல் கூடாது.
8. மாதிரி விண்ணப்பப்படிவம்:-

சீதாவக பிரதேச சபை

..... ஆண்டில் வழங்குநர்/ஒப்பந்தக்காரர் ஒருவராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

1. வழங்குநரின்/ஒப்பந்தக்காரரின் நிறுவனத்தின் பெயர்:
2. வழங்குநரின்/ஒப்பந்தக்காரரின் நிறுவனத்தின் முகவரி:
3. தொலைபேசி இலக்கம்:
   I. நிலையான தொலைபேசி இலக்கம்:
   II. கைத் தொலைபேசி இலக்கம்:
4. மின்னஞ்சல் முகவரி:
5. தெலைநகல் இலக்கம்:
6. வியாபாரப் பதிவு இலக்கம்:
7. வியாபாரத்தின் தன்மை:
8. பதிவு செய்து கொள்ளப்பட வேண்டிய பண்டங்கள்/ சேவைகளின் வகுதி:
9. கணக்கு நடைமுறைப்படுத்தப்படும் வங்கியின் பெயர்:
10. கடன் வசதி வழங்கக் கூடிய கால எல்லை:
11. சித்திகரமான ஒப்பந்தக்காரரென உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்கள்
12. ICTAD நிறுவனத்தில் பதிவு செய்யப் பெற்றிருப்பின் அப்பதிவு இலக்கம்
13. வட் (VAT) வரி இலக்கம் (இருப்பின்)
14. பதிவுக்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 1000.00 (எதிர் காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் படிவக்கட்டணம் தொடர்பாக வரி விதிக்கப்படின் அவ்வரிகளும் செலுத்தப்படல் வேண்டும்.)

மேற்படி தொகையை ரொக்கப்பணமாக/ இலக்க ..... காசோலையாகச் செலுத்துவதுடன் என்னால்/ எங்களால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையெனவும் சீதாவக பிரதேச சபையின் தலைவரினால் விடுக்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் பண்டங்கள்/ சேவைகளை வழங்குவதற்கு மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்குச் சம்மதம் தெரிவிப்பதுடன் அதற்காக வழங்குநரொருவராக/ ஒப்பந்தக்காரரொருவராகப் பதிவு செய்து கொள்ளுமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
சீதாவக பிரதேச சபை.

திகதி:

விண்ணப்பதாரரின் பெயர்:
விண்ணப்பதாரரின் ஒப்பம்
மற்றும் உத்தியோக முத்திரை

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
LAKE HOUSE

ஜே ஸி அளவதுவல மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

ஹெக்டர் அப்புஹாமி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ், ஜே ஸி அளவதுவல மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:

(அ) பாடசாலை மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் :

(ஆ) நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல் :

(இ) மக்களின் ஒழுக்க மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளல், பிறவும்.

மற்றும்

ஹெக்டர் அப்புஹாமி
பாராளுமன்ற உறுப்பினர்

பெயர் மாற்றம்

காத்தான்குடி - 02, ஊர் வீதி, இல-197/1 ஐ சேர்ந்த முகம்மமது புஹார்தீன் அப்துல்லா அம்ழால் ஆகிய நான், (பிறப்பு பதிவு இலக்கம் : (116/2003-06-12) 25/11/2021 தொடக்கம் முகம்மது **புஹார்தீன் அப்துல்லா அப்ழால்** என எனது பெயரை மாற்றிக் கொண்டேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும், பெது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

முகம்மது புஹார்தீன் அப்துல்லா அப்ழால்

உடபலாத பிரதேச சபை

2022ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் தகைமை பெற்ற நிபுணர்கள் பதிவு செய்தல்

உடபலாத பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக 2022ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இந்த அறிவித்தல் பிரசுரமான திகதி முதல் 2021-12-31ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இயைபுடைய விடயங்களின் பிரகாரம் பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வம் காட்டும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக தங்களாலே தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணமாகிய 500.00 ரூபாவையும் சேவைகளுக்கு 750.00 ரூபாத் தொகைக்கான காசுக் கட்டளை அல்லது காசோலையை தலைவர், / செயலாளர், உடபலாத பிரதேச சபை, எல்பிட்டிய, அடபாகே, கம்பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அல்லாவிடின் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் பதிவு செய்தல் - 2022' எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்கள் 0812352218 தொலைபேசி ஊடாக விசாரித்து அறிந்து கொள்ள முடியும்.

2021-11-27ஆம் திகதி
உரிமை வழங்கல்	-	-	-	-	-	-	-	-	-	-	-
காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை	-	-	-	-	-	-	-	1,576	1,576	-	1,576
பங்கு மூலதன உரிமையாளர்களுக்கான பங்கிலாபம்	-	-	-	-	-	-	-	-	-	-	-
தலைமை காரியாலயத்திற்கு மாற்றப்பட்ட இலாபம்	-	-	-	-	-	-	-	-	-	-	-
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) (செலவு முறை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின்)	-	-	-	-	-	29	-	-	29	-	29
ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)	-	-	-	-	-	(379)	(1,000)	(2,178)	(3,557)	-	(3,557)
பங்கு மூலதன உரிமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள்	24,654	-	-	-	-	(350)	(1,000)	15,744	39,048	-	39,048
30.09.2021 அன்று மீதி (இறுதி மீதி)	189,024	-	-	29,268	-	21,855	(182,108)	157,488	215,527	-

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

319

வெற்றிடங்கள்
வீட்டு வேலையாளர்கள்

கொள்ளுப்பிட்டியில் உள்ள அலு வலகம் ஒன்றிற்கு ஒரு வாரத்தில் 03 நாட்கள் 02 மணித்தியால வேலைக்கு பெண் தேவை. T.P. 0777385979. 076037

325

தொழில்துறை பொது

ஹோமாகம, பனாகொடயிலுள்ள ரெம்பின்பேர்க் கைத்தொழில் உற்பத்திக் கம்பனிக்கு பயிற்சியுள்ள/ பயிற்சி இல்லாதவர்கள் அவர்களின் உற்பத்திப் பிரிவிற்கு தேவை. வயது 18 32. பிறிதான சலு கைகளுடன் சம்பளம். தயவு செய்து 0778869803 என்ற இலக்கத்திற்கு அழைப்பைக் கொடுக்கவும். 074292

காணி/தோட்டம்

612

கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்

நீர்ப்பாதுகாப்பு தயாரிப்புக்கள் நீச்சல் குளங்கள், கூரையுடனான குளியலறைக்கான இரசாயனங்கள் Epoxy உள்ளக, வெளியக பெயின்ட்கள். Reg R14121 CIDA SP 0132. 071-7955307, 0777673528. 074476

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விசேட பயிற்சி பட்டறை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் மாவட்டத்தில் சகல வைத்தியசாலைகளினதும் பிரதான வைத்திய அதிகாரிகள், ஆரம்ப சிகிச்சை பிரிவு வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதார வைத்தியர்களின் பங்களிப்புடன் விசேட பயிற்சி பட்டறை ஒன்று அனுராதபுரம் கோல்டன் மெங்கோ விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது வைத்தியசாலைகளுக்கு தேவையாகவிருந்த Ventillator, Bipap, Ecg, Autoclave உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன். அதன் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் தொடர்பிலான பயிற்சி இடம்பெற்றது. மேலும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலை இருதய நோய் விசேட வைத்திய நிபுணர் அஜித் வன்னியாராச்சி மற்றும் வடமத்திய மாகாண பிரதான வாழ்க்கை தொழில்நுட்ப பொறியியலாளர் தேசப்பிரிய வன்னிநாயக்க உள்ளிட்ட வளவாளர்கள் கலந்து கொண்டனர். மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பேராசிரியர் சிசிர சிறிவர்தன உள்ளிட்ட விசேட வைத்திய நிபுணர்கள் குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.

எல்லவெவ பிரதேசத்தில் சமுதாய குடிநீர் திட்டத்திற்கு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன அடிக்கல் நட்டி வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.
படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கற்பிட்டி மாணவர்கள் ஜனாதிபதி விருதுக்கு தெரிவு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி கோட்டக் கல்வி வலயத்துக்குட்பட்ட இரண்டு பாடசாலைகளில் சுற்றாடல் முன்னோடி மாணவர்கள் 11 பேர் ஜனாதிபதி விருதுக்கு தெரிவாகியுள்ளனர்.

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கான நேர்முக தேர்வின் போதே குறித்த மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இருந்து 6 மாணவர்களும் பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இருந்து 5 மாணவர்களுமாக 11 மாணவர்கள் ஜனாதிபதி விருது பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

தேசிய ரீதியிலான இப்போட்டியில் புத்தளம் மாவட்டத்தில் இவ்விரு பாடசாலை மாணவர்கள் மாத்திரமே தெரிவாகியுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அடுத்த மாதம் அளவில் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளதாக புத்தளம் வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் பாறூக் பதீன் ஆசிரியர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்டோர் பொறுப்புடன்..

(05ஆம் பக்கத் தொடர்)

அடுத்த கோரிக்கையாக குறிஞ்சாக்கேணி பிரதேசத்திலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றவும் மீள பாடசாலையிலிருந்து வீடுகளுக்கு அழைத்து வர இலங்கை போக்குவரத்து சபை பேரூந்து சேவையொன்றை அடுத்த நாள் தொடக்கம் நடத்துமாறு கோரப்பட்டது. குறித்த கோரிக்கையும் உடன் அரசாங்க அதிபரால் நிறைவேற்றி கொடுக்கப்பட்டது. விபத்து ஏற்பட்ட அடுத்த தினமே பஸ் சேவை செயற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இருப்பினும் குறித்த பஸ் சேவையை மக்கள் நடாத்த இடமளிக்கவில்லை என தகவல் வெளிக்கொணரப்பட்டது. இதற்கு காரணமாக இன்னும் பிரத்தியேக பஸ் சேவை தேவை என பிரதேச மக்கள் கோரியமையே இதற்கு காரணமாகும். அரசாங்க அதிபர் என்ற வகையில் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் ஒரு பஸ் சேவையை வழங்குமாறு கோரியதனால் ஒரு பஸ் சேவை அரசாங்க அதிபரால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு பிரத்தியேக பஸ் சேவை தேவையெனின் அக்கோரிக்கையை முறைப்படி அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தினால் அந்த விடயமும் சாத்தியமாகலாம்.

அடுத்த விடயமாக இழப்பீடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ பிரிவு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார். அரசாங்க அதிபர் என்ற அடிப்படையில் மக்களது நியாயமான கோரிக்கைகளை செவிமடுத்து மக்களது உணர்வுகளை புரிந்து செயற்பட்டமை உண்மையில் முக்கியமான விடயமாகும்.

இருப்பினும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கூட்டம் பல மணித்தியாலயங்களுக்கு மேல் பிரதேச செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களது கோரிக்கைகளை கேட்டறிந்து கொள்வது அரசாங்க அதிகாரிகளின் கடமையாக அமைவதோடு உரிய நடவடிக்கைக்காக செயற்படுவதும் அவர்களது பொறுப்பாகும். அதன்படி அரசாங்க அதிபர் அதற்கிணங்க செயற்பட்டார். இருப்பினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உணர்வை கட்டுப்படுத்த முடியாமல் பிரதேச செயலக சொத்துக்களை சேதப்படுத்தி செயற்பட்டமை நியாயமா? என்பதனை அலசி ஆராய வேண்டியுள்ளது.

இப்படகு சேவைக்கும் பிரதேச செயலகத்திற்கும் எவ்வித தொடர்பும் காணப்படவில்லை என்றே கூறப்படுகின்றது. படகு சேவைக்காக அனுமதி கிண்ணியா நகர சபையே வழங்கியுள்ளது என்ற விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டிய தேவையுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் நோக்கம் என்னவென்று ஊகிக்க முடியாத புதிராகவே அமைந்திருந்தது. அங்கு வேறு வகையான அரசியல் நோக்கங்களும் காணப்பட்டதா என்பதனை ஆராய வேண்டியுள்ளது. அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நிலைமையை சுமுகமாக தீர்க்க பொருத்தமான குழுவின் பிரதிநிதிகள் இதன் போது முன்வராமை கவலைக்குரிய விடயமாகும்.

பொதுச்சொத்துக்களை பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இது இவ்வாறிருக்க குறித்த சம்பவத்தை செய்தி சேகரித்து உலகறியச் செய்ய சென்ற ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டு அவர்களது ஊடக உபகரணங்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கிண்ணியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மேலும் சுதந்திர ஊடக இயக்கமும் கிண்ணியாவில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை வன்மையாக கண்டித்துள்ளது. மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரச் செய்பவர்களான ஊடகவியலாளர்களை தாக்குவதனை விட அவர்களை மக்கள் பாதுகாக்க வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகின்றது.

இடங்களுக்கு சென்று தமக்கே உரித்தான பிரச்சினைகளை முன்வைப்பது மக்களின் பொறுப்பாக அமைகின்றது.

பண்டாரவளை மாநகர சபை

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல் – 2022 ஆம் ஆண்டு

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2022.01.01 முதல் 2022.12.31 (அந்த இரு தினங்களும் உள்ளடங்களாக) திகதி வரையான ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு குத்தகைக்காரர்களை தேர்ந்தெடுப்பதற்காக 2021.12.17ஆம் திகதி மு.ப.10.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள், 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மற்றும் பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் உட்பட ஏனைய நிறுவனங்களில் இருந்து இத்தால் கோரப்படுகின்றன.

02. பெறுகை கேள்வி மாதிரிப் பத்திரங்களை 2021.11.26 முதல் 2021.12.16 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பண்டாரவளை மாநகர சபையில் அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திர கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கெள்வி நிபந்தனைகள் அடங்கிய விண்ணப்பங்களை முறையாக பூர்த்தி செய்து உறுதி செய்த பின்னர் வேறுவேறாக குறிப்பிட்டு (அவற்றின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சொத்தின் விபரத்தையும் குறிப்பிட்டு) மேற்படி இரு பிரதிகளையும் ஒரு உறையில் இட்டு மேற்படி உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சொத்தின் விபரத்தையும் கட்டாயமாக குறிப்பிட்டு பொறியிட்டு 2021.12.17 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு, "பெறுகைக்குழுவின் தலைவர், மாநகர சபை, பூங்கா வீதி, பண்டாரவளை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலும் தபாலில் ஏற்படும் தொலைதல் மற்றும் தாமதம் பற்றி மாநகர சபை பொறுப்புக்கூற மாட்டாது அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

அட்டவணை

தொடர் இல	குத்தகைக்கு விடுதலுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்	குறைந்தபட்ச பெறுகை கேள்வி (வரி இன்றி)	பெறுகை வைப்பு தொகை	
			மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூ.சதம்	மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திர கட்டணம் ரூ. சதம்
01	சில்லறை சந்தை	2,211,000.00	100,000.00	50,000.00
02	மொத்த சந்தை	4,235,000.00	100,000.00	50,000.00
03	வேன் நிறுத்துமிடம் அருகில் பொது மலசலகூடம்	396,000.00	10,000.00	5,000.00

03. 2021.12.17 மு.ப.10.00 இற்கு பின்னர் உடனடியாக பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் வருகை தந்து அதனை பரிசீலிக்கலாம். மேலும் இது பற்றிய மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபை அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது இல: 057-2222275 என்ற தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைகள்

01. பெறுகை கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை/சாரதி அனுமதிப்பத்திரம்/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி மாதிரிப் பத்திரங்களை ஒரு சொத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பங்களை வேறுவெறாக பெற்றுக்கொள்வதுடன் அதற்காக அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணத்தை வேறுவேறாக செலுத்துதல் வேண்டும். மேலும் மேற்படி கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது மேற்படி இலக்கம் 02 ஆம் பந்தியில் குறிப்பிடமாறு செயற்படுதல் வேண்டும்.
03. சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக அட்டவணையில் ஒவ்வொரு இலக்கத்துடன் சொத்துக்களுக்காக சமர்ப்பிக்கப்படும் அதிகூடிய கேள்வியில் இருந்து குறைந்த கேள்வி வரை கவனத்தில் கொள்ளப்படுவதுடன், அதற்காக மீளளிக்கப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வைப்பொன்று கேள்விதாரரால் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் மாநகர சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். மேலும் மேற்படி வைப்பிற்காக காசு செலுத்துதல் 2021.12.16 பி.ப.3.00 இற்கு முன் இடம்பெறல் வேண்டும்.
04. பெறுகை விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது கேள்விதாரரால் குறிப்பிடப்படும் திருத்தங்கள் இருப்பின் அவற்றை அவர்களது குறுகிய ஒப்பத்தை இட்டு உறுதி செய்து இருப்பதுடன் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்ளும் போது டிபெக்ஸ் பாவித்தல் கூடாது.
05. அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக கேள்வித் தொகை குறிப்பிடப்பட்டிருப்பின் மேற்படி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், மீளளிக்கப்படும் வைப்பு சபைக்கு உரியதாக்கப்படும்.
06. விண்ணப்பதாரிகள் பண்டாரவளை மாநகர சபைக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் எந்த விதத்திலும் சட்டரீதியான விபரங்களை மேற்கொள்ளாத ஒருவராக இருப்பதுடன் இதற்கு முன் சொத்துக்களை குத்தகைக்கு பெற்று குத்தகை நிபந்தனைகள் மற்றும் பெறுகை சட்டங்களை மீறாதவராக இருத்தல் வேண்டும். ஏதேனும் காரணங்களால் கேள்விகளை வழங்கிய பின்னர் அவ்வாறான விடயங்கள் உறுதி செய்யப்பட்டால் கேள்வி வழங்கப்பட்டிருப்பினும் அதனை இரத்துச் செய்து பிணை வைப்பு சபைக்கு உரியதாக்கப்படும்.
07. கேள்விகளை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் இதற்கு முன்பு கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கு பண்டாரவளை மாநகர சபையின் கேள்வி கோரலின் மூலம் முறையாக கடை அறைகள் அல்லது சொத்துக்களை குத்தகைக்குப் பெற்று இருப்பின் உடன்படிக்கைப் பிரகாரம் வெற்றிகரமாக ஒப்பந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்து பண்டாரவளை மாநகர சபையின் நம்பிக்கையை சிதைக்காத ஒருவராக இருப்பதுடன் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் 2021 நவம்பர் 30 வரை எந்த நிலுவையையும் பண்டாரவளை மாநகர சபைக்கு செலுத்துவதற்கு இல்லாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
08. ஒவ்வொரு குத்தகை சொத்துக்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் மற்றும் திறக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், அக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கேள்விதாரர் விடயத்தில் பெறுகை குழுவின் தீர்மானம் மற்றும் மகா சபையின் தீர்மானத்தை அறிவிப்பதுடன், மேற்படி அறவித்தலின் பின் ஒரு வாரத்திற்குள் சமர்ப்பித்துள்ள வருடாந்த கேள்வித் தொகையில் 03 மாதத்திற்கு சமமான தொகையை மாநகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும். அதன்பின்னர் நகர சபையுடன் குத்தகை உடன் படிக்கைக்கு வரல் வேண்டும்.
09. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் ஒப்பந்தம் ஒன்றிற்கு வருவதற்கு முன்னர் மேற்படி வைப்புச் செய்யப்படும் தொகைக்கு மேலதிகமாக மிகுதி கேள்வித் தொகையில் 10% பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி பிணைமுறி 2023.01.31 வரை செல்லுபடியாவதுடன் அதனை மாநகர துணையாளரின் பெயரில் வைத்தல் வேண்டும் இல்லையெனில் மேற்படி 10% தொகைக்கு சமமான தொகையை பண்டாரவளை மாநகர சபையில் இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் வைப்புச் செய்தல் வேண்டும் முழுக் கேள்வித் தொகையையும் ஒரே முறையில் செலுத்துவதாயின் மேற்படி தொகை அல்லது பிணைமுறியை வைத்தல் அவசியமில்லை.
10. தற்போது பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான கடை அறைகள் அல்லது வேறு பிணை முறியைப் பெற்றுக்கொண்டுள்ள விண்ணப்பதாரிகளால் சமர்ப்பிக்கப்படுகின்ற பெறுகை விண்ணப்பங்களை கவனத்தில் கொள்ளப்படுவது அவர்களால் குறித்த பிணைமுறி சார்பாக செலுத்த வேண்டிய குத்தகை அல்லது வாடகை தொகையை பெறுகை ஏற்றுக்கொள்ளும் தினத்திற்கு முன்பு முடிவடையும் மாதம் வரை நிலுவையின்றி செலுத்தி இருப்பின் மட்டுமே.
11. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கேள்விதாரர்களுக்கு அறிவித்த பின்னர் குறித்த தினத்திற்கு முன்பு குறித்த நிதியை வைப்புச்செய்து ஒப்பந்தம் ஒன்றிற்கு வரல் வேண்டும். அத்துடன் அவரால் மேற்படி காசை செலுத்தாது ஒப்பந்தம் ஒன்றிற்கு உட்படின் அவரால் வைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் வைப்பு சபைக்குரியதாக்கப்படும்.
12. சந்தை வாடகை சேகரிக்கும் போது இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்தி பற்றுச்சீட்டை விநியோகித்தல் கட்டாயம் ஆவதுடன், கேள்வி வழங்கப்பட்ட பின்பு ஜனவரி 01 ஆம் திகதி முதல் மேற்படி ஊடகத்தை பாவித்து பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்கப்படுவதுடன், அவ்வாறு இல்லையெனில் பண்டாரவளை நகர சபையினால் பொருத்தமான 04 இயந்திரங்கள் வழங்கப்படுவதுடன், அதற்கான செலவுகள் உங்களால் சபையில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
13. இந்த நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கேள்வி அட்டவணையில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கேள்விதாரர் இணங்குதல் வேண்டும்.
14. கிடைக்கும் கேள்விகளில் பொருத்தமான கேள்வியை ஏற்றுக்கொள்ளல் அல்லது சகலதையும் நிராகரிக்கும் முழுமையான உரிமை பெறுகைக்குழு மற்றும் மகா சபைக்கு உரித்தாவதுடன் அத் தீர்மானங்கள் இறுதித்தீர்மானமாகும்.

2021.11.23 ஆம் திகதி
மாநகர சபை

ஒப்பம் - ஜானக்க நிஷாந்த ரத்னாயக்க,
நகர முதல்வர்/பெறுகைக் குழுவின் தலைவர்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் (GWUIM) யக்கல

யக்கல, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் (GWUIM) AC2 கட்டிடத்தின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகள்

01. வட் உட்பட 11 மில்லியன் ரூபா (வட் உட்பட பதினொரு மில்லியன்) மதிப்பிடப்பட்ட தோராயமான செலவைக் கொண்டதும் கீழ் விபரிக்கப்பட்டவாறுமான யக்கல, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் (GWUIM) AC2 கட்டிடத்தின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக (GWUIM) துணைவேந்தர் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் (GWUIM) (தோராயமான பரப்பளவு 75 m^2) தற்போதுள்ள நான்கு மாடி கட்டடத்தில் இடமளிப்பதற்கு கொங்கிறீற் வேலைகள், கட்டுமான வேலைகள், சாந்திடல், வண்ணப்பூச்சு, தரை முடித்தல்கள், நீர்க் காப்பு, அலுமினியம் வேலைகள், கட்டமைப்பு உருக்கு வேலைகள் மற்றும் கூரை வேலையின் பகுதியுடன் நிர்மாணத்தின் குறைபாடு பொறுப்புக் காலத்தின்போது பூர்த்தி செய்தல் மற்றும் பராமரித்தலோடு, தற்போதுள்ள நான்கு மாடி கட்டிடத்தின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடுகளை இந்த வேலை கொண்டிருக்கும்.

யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் (GWUIM) இந்தத் தளம் அமைந்துள்ளது.

பணி வழங்கப்பட்ட திகதியில் இருந்து 90 நாட்காட்டி தினங்களில் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கான பணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 50.0 மில்லியன் ரூபாவுக்கு கீழ் (வட் மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) இருக்கும் வரை 04/2016 (iii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
03. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கட்டிட நிர்மாணப் பிரிவில் C5 மற்றும் C6 தரத்தில் CIDA உடன் பதிவு செய்தும் இருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு தேவையான தகைமையில் உள்ளடங்குவன;
    a) கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளின் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்தது வட் உட்பட 68.0 மில்லியன் ரூபா (அறுபத்து எட்டு மில்லியன்) இருத்தல் வேண்டும்.
    b) தற்போதுள்ள கட்டிடத்திற்காக (தோராயமான பரப்பளவு 75 m^2) எஞ்சிய வேலைகளுக்கு இணையாக அதனை ஒத்த பண்பு, பெறுமதி மற்றும் சிக்கற்பாட்டின் குறைந்தது மூன்று (3) கட்டிடங்களை நிர்மாணித்த அனுபம் மற்றும் கடந்த ஐந்து (5) ஆண்டு காலத்தில் குறைந்தது 11.0 மில்லியன் ரூபா பணியை 90 நாட்காட்டி தினங்களுக்குள் பூர்த்தி செய்திருத்தல் அல்லது உச்ச பெறுமதி திட்டத்தை அளவொத்த காலத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (இந்தத் தேவைகளுக்கு இணங்க, குறைந்தது 70% வேலைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்).
    c) இந்த ஒப்பந்தத்தின் கீழான எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து ஒப்பந்தக் கடப்பாட்டின் திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது நிகர கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 11.0 மில்லியன் ரூபாவுக்கு (பதினொரு மில்லியன்) குறையாதிருத்தல் வேண்டும்.
05. 2021.11.29 ஆம் திகதி தொடக்கம் 2021.12.15 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் (GWUIM) அலுவலகத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
06. வட் உட்பட 7,500.00 ரூபா மாத்திரமான (ரூபா ஏழாயிரத்து ஐந்நூறு) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2021.11.29 ஆம் திகதி தொடக்கம் 2021.12.17 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையில் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக, பொது நிர்வாகப் பிரிவு, உதவிப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.
07. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2021.12.21 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் இங்கு கிடைப்பதற்கு உதவிப் பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் 2ஆவது மாடியில் புதிய நிர்வாகக் கட்டிடத்தின் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல்ள வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகளுக்கு பங்கேற்கலாம்.
08. விலைமனு 2022.03.22 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
09. விலைமனுக்களானது நிலையான படிவங்கள் பிரிவு II இல் உள்ளடக்கப்பட்ட (நிபந்தனையற்ற, மாற்றமுடியாத மற்றும் கோரும்போது பெறத்தக்க) விலைமனு பிணை வடிவத்தை பயன்படுத்தி தொழில் வழங்குநருக்கு ஏற்க முடியுமான இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட அல்லது ரொக்கப்பணத்தில் 2022.04.19 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக ரூபா 110,000.00 (ரூபா நூற்று பத்து ஆயிரம்) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2021.12.08 ஆம் திகதி மு.ப. 10.00க்கு யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் 2ஆவது மாடியில் புதிய நிர்வாகக் கட்டிடத்தின் கூட்ட அறையில் இடம்பெறும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்பது கட்டாயமாகும்.
11. மேலதிக விபரங்களுக்கு யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக, பொது நிர்வாகப் பிரிவு, உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும் (தொ.:- 0332223784/ 0332215821/ 0332222748)

தொழில்நுட்ப தெளிவுபடுத்தல்களுக்காக:- 0332231681

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,
கண்டி வீதி, யக்கல.

2021.11.27

இந்திய செய்திகள்

முதல்முறையாக இந்தியாவில் ஆண்களை விட பெண்களே எண்ணிக்கையில் அதிகம்! ஆய்வில் தகவல்

இந்தியாவில் முதல்முறையாக ஆண்கள் எண்ணிக்கையை விட பெண்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக தேசிய குடும்ப சுகாதார ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் 2019–21 ஆண்டுகளுக்கான தேசிய குடும்ப சுகாதார ஆய்வு5 நடத்தப்பட்டுள்ளது. 2 கட்டங்களாக நடத்தப்பட்ட குடும்ப சுகாதார ஆய்வின் முடிவுகளை மத்திய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ 88.6 சதவீத குழந்தைகள் ஆஸ்பத்திரிகளில் பிறந்துள்ளன. முந்திய ஆய்வில் இது 78.9 சதவீதமாக இருந்தது. இது இந்தியா ஆஸ்பத்திரிகளில் குழந்தைகள் பிறப்பதை நோக்கி இந்தியா முன்னேறி செல்கிறது என்பதற்கு சான்றாக அமைகிறது.

★ இந்தியாவில் முதல்முறையாக ஆண்களின் எண்ணிக்கையை விட பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1,000 ஆண்களுக்கு 1,020 பெண்கள் என்கிற அளவுக்கு பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன்மூலம் இந்தியா, வளர்ந்த நாடுகளுடன் சேருகிறது.

★ பெரும்பாலான மாநிலங்களில் ஆண்களை விட பெண்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஆனால் ஆண்களை விட பெண்கள்

எண்ணிக்கை குறைவாக உள்ள மாநிலங்களாக குஜராத், மராட்டியம், அருணாசலபிரதேசம், அரியானா, மத்திய பிரதேசம், பஞ்சாப் உள்ளன.

★ குழந்தைகள் பிறப்பை பொறுத்தவரையில், 2015–16ல் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 929 பெண்குழந்தைகள் என இருந்தது. இது 2019–20ல் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 929 பெண் குழந்தைகள் என்ற அளவுக்கு அதிகரித்தது.

★ ஐந்தில் நான்கு தாய்மார்கள் அதாவது 78 சதவீத தாய்மார்கள் பிரசவத்துக்கு பிந்தைய பராமரிப்பை பிரசவித்த 2 நாட்கள் வரையில் டாக்டர்கள், தாதிகள் உள்ளிட்ட சுகாதார பணியாளர்கள் மூலம் பெற்றுள்ளனர். முந்திய ஆய்வில் இது 62.4 சதவீதமாக இருந்துள்ளது. இது பிரசவத்தின்போதும், அதற்கு பின்னரும் குழந்தைகள் இறப்பை தடுக்கும்.

★ மொத்த கருத்தரிப்பு விகிதம், ஒரு பெண்ணுக்கு 2 குழந்தைகள் என்கிற அளவை எட்டி உள்ளது. முந்திய ஆய்வில் இது 2.2 ஆக இருந்து இருக்கிறது. இது பெண்கள் கருத்தரிப்பு காலத்தில் குறைவான எண்ணிக்கையில் குழந்தை பெறுகின்றனர், குடும்பக்கட்டுப்பாடு, சற்றே தாமதமாக திருமணம் செய்தல் போன்ற அறிவினை பெண்கள் கொண்டுள்ளனர் என்பதை காட்டுகிறது.

★ குழந்தைகள் பிறப்பு பதிவை பொறுத்தமட்டில் 5 வயது வரையில் பதிவு செய்வது 89.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. முந்திய ஆய்வில் இது 79.7 சதவீதம் ஆகும்.

★ 41 சதவீத குடும்பங்களில் குறைந்தது ஒருவராது சுகாதார காப்பீடு செய்துள்ளனர். முந்திய ஆய்வில் இது 28.7 சதவீதமாக இருந்துள்ளது. தற்போது திருமணமான 15–49 வயது பெண்களில் மூன்றில் இருபங்கினர் அதாவது 66.7 சதவீதத்தினர் கருத்தரிப்பை தள்ளிப்போட அல்லது கட்டுப்படுத்த குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை (கருத்தடை முறைகள்) பயன்படுத்துகின்றனர்.

★ நாட்டில் தற்போது திருமணமான 15–49 வயது பெண்களின் குடும்ப கட்டுப்பாட்டு தேவை 9.4 சதவீதமாக குறைந்துள்ளது. இது 2015–16ல் 12.9 சதவீதமாக இருந்துள்ளது.

★ 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை கடந்த ஆய்வில் இருந்து இந்த ஆய்வில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

பாஜகவின் ஆணவத்தை விவசாயிகள் போராட்டம் என்றும் நினைவூட்டும்

விவசாயிகளின் போராட்டம் ஓராண்டு நிறைவையொட்டி, தலைவர்கள் தங்கள் கருத்துக்களை பதிவிட்டவண்ணம் உள்ளனர்.

மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் கடந்த ஆண்டு நவம்பர் 26ம் திகதி டெல்லியின் பல்வேறு எல்லைகளில் போராட்டம் தொடங்கினர். போராட்டம் தொடங்கி நேற்றுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இதையொட்டி தற்போது வேளாண் சட்டங்கள் திரும்ப பெறப்படும் என மத்திய அரசு கூறி உள்ள நிலையில் , விவசாயிகளின் போராட்டம் குறித்து தலைவர்கள் தங்கள் கருத்துக்களை பதிவிட்டவண்ணம் உள்ளனர்.

இதுபற்றி காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கூறுகையில், விவசாயிகளின் அசைக்க முடியாத சத்யாகிரகம், 700 விவசாயிகளின் உயிர்த்தியாகம்

மற்றும் இரக்கமற்ற பா.ஜ.க.வின் ஆணவத்துக்காக இந்தப் போராட்டம் நினைவுகூரப்படும் என்று தெரிவித்தார். இந்தியாவில் விவசாயிகள் எப்போதும் போற்றப்படுகிறார்கள், போற்றப்படுவார்கள் என கூறிய பிரியங்கா காந்தி, விவசாயிகள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியே இதற்குச் சான்று என்றார்.

டெல்லியில் அரசியலமைப்பு தின நிகழ்ச்சி; 14 எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

டெல்லியில் நேற்று நடைபெற்ற அரசியலமைப்பு தின நிகழ்ச்சியை 14 எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளன.

75வது சுதந்திர ஆண்டை முன்னிட்டு அரசியலமைப்பு தினம் நேற்று நாடாளுமன்ற வளாகத்தின் மைய மண்டபத்தில் உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்பட்டது. காலை 11 மணிக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இந்த கொண்டாட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

மேலும் துணை ஜனாதிபதி, பிரதமர், மக்களவைத்தலைவர், அமைச்சர்கள், எம்.பி.க்கள் மற்றும் பிற பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இதையடுத்து ஜனாதிபதி உரைக்குப், பின் அரசியல் சாசனத்தின் முன்னுரையை அவருடன் நேரலையில் படிக்க நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின் 'அரசியலமைப்பு ஜன நாயகம்' குறித்த இணையவழி வினாடிவினாவை ஜனாதிபதி தொடங்கி வைத்தார். மேலும் அரசியலமைப்பின் முன்னுரையை 23 மொழிகளில் (22 அதிகாரபூர்வ மற்றும் ஆங்கிலம்)

வாசிப்பது தொடர்பான இணைய போர்டல் சேவை நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டெல்லியில் நேற்று நடைபெற்ற அரசியலமப்பு தின நிகழ்ச்சியை புறக்கணிப்பதாக காங்கிரஸ், திமுக, திரிணாமூல் காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட 14 கட்சிகள் அறிவித்துள்ளன. ஏற்கனவே நேற்றுமுன்தினம் காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப்போவதில்லை என முடிவு எடுக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் 14 எதிர்கட்சிகளும் அரசியலமப்பு தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப்போவதில்லை என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இருந்து தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி

போதுமான கையிருப்பு இருப்பதால், கோவிஷீல்ட், கோவேக்சின் தடுப்பூசிகளை வணிக நோக்கத்துடன் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தியாவில், ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் 'கோவேக்சின்' தடுப்பூசியை உற்பத்தி செய்து வருகிறது. புனேவில் உள்ள சீரம் நிறுவனம், 'கோவிஷீல்ட்' தடுப்பூசியை உற்பத்தி செய்து வருகிறது. சீரம் நிறுவனம் தன்னிடம் 24 கோடியே 89 இலட்சம் கோவிஷீல்ட் தடுப்பூசிகள் கையிருப்பில் இருப்பதாகவும், நாள்தோறும் கையிருப்பு அதிகரித்து வருவதாகவும் சமீபத்தில் மத்திய அரசிடம் தெரிவித்தது.

அதுபோல், கோவேக்சின் தடுப்பூசி கையிருப்பும் அதிகமாக உள்ளது.

எனவே, கோவிஷீல்ட், கோவேக்சின் தடுப்பூசிகளை வணிக நோக்கத்துடன் ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இது தவிர, ஐ.நா. ஆதரவுடன் நடக்கும் 'கோவாக்ஸ்' என்ற சர்வதேச தடுப்பூசி திட்டத்துக்கும் இந்திய தடுப்பூசிகள் வினியோகிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அன்னா ஹசாரே மருத்துவமனையில் அனுமதி

சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நெஞ்சுவலி காரணமாக புனே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடியாக இருந்த சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே. சமூகப் பிரச்சினைகளுக்காக அவ்வப்போது உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடுவார்.

புனேவில் இருந்து 87 கி.மீ. தொலைவில் உள்ள மகாராஷ்டிராவின் அகமது நகர் மாவட்டத்தில் உள்ள ராலேகான் சித்திகிராமத்தில் தங்கி வருகிறார். இந்நிலையில், அன்னா ஹசாரேவுக்கு நேற்று திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. இதையடுத்து, அவர் உடனடியாக புனேவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது அன்னா ஹசாரேவின் உடல் நிலை சீராக உள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அன்னா ஹசாரே பூரண குணமடைய வேண்டும் என முதல் மந்திரி உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

சபரிமலையில் தரிசனம் செய்ய தினமும் 45 ஆயிரம் பேருக்கு அனுமதி

சபரிமலையில் தரிசனம் செய்ய தினமும் 45 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். கூடாரங்கள் அமைத்தும் பக்தர்கள் தங்கலாம் என கேரள தேவஸ்தான துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சபரிமலையில் மண்டல பூஜைக்காக நடை திறக்கப்பட்டு தினமும் சிறப்பு பூஜை நடந்து வருகிறது. அங்கு தினமும் 30 ஆயிரம் பக்தர்கள் ஒன்லைன் முன்பதிவு மூலம் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் ஐயப்ப பக்தர்களின் அடிப்படை வசதி தொடர்பாக கேரள தேவஸ்தான துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன் எருமேலி, நிலக்கல் மற்றும் பம்பை ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டார்.

தொடர்ந்து பம்பை நுணங்கார் தற்காலிக பாலம் கட்டும் பணிகளை செய்த பிறகு அவர் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றார். இதையடுத்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது.

சபரிமலையில் தரிசனம் செய்வதற்கு ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 40 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அதேபோல் உடனடி முன்பதிவு மூலமாக தினசரி 5 ஆயிரம் பக்தர்கள் கூடுதலாக அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு குறைந்தால் அதில் குளிக்க பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். சபரிமலை வரும் பக்தர்கள் தரிசனத்திற்கு பிறகு பம்பையில் தங்கி ஓய்வு எடுக்க வசதியாக அங்குள்ள அறைகளை ஒழுங்கு படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 300 வாடகை அறைகள் ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது. இந்தநிலையில் மேலும் 200 அறைகள் தயாராகி வருகிறது. விரைவில் சபரிமலை சன்னிதானத்தில் பக்தர்கள் தங்கி ஓய்வு எடுப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

"வாழ்ந்து தான் போராட வேண்டும்; தயவு செய்து உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டாம்"

பாலியல் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை நாகரிகத்தையும், பண்பாட்டையும் பற்றிப் பேசுவதில் எந்தப் பொருளும் இல்லை என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தையொட்டி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் வாழ்ந்து காட்டுவதன் மூலமாக தான் அத்துமீறிய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த காணொலியில் அவர் கூறியிருப்பதாவது;

"சமீபகாலமாக நாம் அதிகம் கேள்விப்படும் செய்தி ஒன்று என்னை அதிகமான மன உளைச்சலுக்கு ஆளாக்கிக்கொண்டு வருகிறது. பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறையும் அதைத் தொடர்ந்து அவர்கள் தற்கொலை செய்து கொள்வதுமான செய்தியைக் கேள்விப்படும் போது உண்மையைச் சொல்லவேண்டுமென்றால் அவமானமாக இருக்கிறது.

அறத்தையும் பண்பாட்டையும் அதிகம் பேசும் ஒரு சமூகத்தில் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் முன்னேறிய ஒரு நாட்டில் அறிவியலும், தொழில் நுட்பமும் வளர்ந்த காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட கேவலமான, அருவருப்பான செயல்களும் நடக்கத்தான் செய்கின்றன என்பது வெட்கித் தலைகுனிய வைக்கிறது.

இவற்றைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது, இருக்கவும் கூடாது! விட்றாதீங்கப்பா என்று அந்தக் குழந்தைகள் கதறுவது என் மனதிற்குள் ஒலிக்கிறது. பள்ளிகளில், கல்லூரிகளில், பணிபுரியும் இடங்களில் பொது வெளிகளில் பெண்களும், குழந்தைகளும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதில் சில சம்பவங்கள்தான் வெளியில் வருகிறது. மற்றவை அப்படியே மறைக்கப்படுகிறது.

அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னால் தலைவர் கலைஞர், ஒரு படத்தில், "மனச்சாட்சி உறங்கும் சமயம் பார்த்துத்தான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்புகிறது" என்று எழுதினார். அப்படி மனச்சாட்சியற்ற மனிதர்களால் பெண் பிள்ளைகள் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாக்கப்படும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை நாம் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பற்றிப் பேசுவதில் எந்தப் பொருளும் இல்லை. சக உயிராக பெண்ணைப் பார்க்கும் எண்ணம் தோன்றாத வரை இதனைத் தடுக்க முடியாது.

உடல் ரீதியாக ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாகச் செய்யப்படும் வெளிப்படையான பாலியல் சீண்டல்களுக்கு எதிராக எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டு இத்தகைய நபர்கள் கடுமையாக கண்டிக்கப்படுவார்கள் என்று நான் இந்த நேரத்தில் உறுதி அளிக்கிறேன்.

இப்படியான பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படும் பெண்கள், குழந்தைகள் அதைப்பற்றி வெளிப்படையாகப் புகார் தருவதற்கு முன் வர வேண்டும். பள்ளியின் ஆசிரியர்களிடம், தலைமை ஆசிரியரிடம், பெற்றோர்களிடம், சக அதிகாரிகளிடம், நிர்வாகத்திடம் புகார்களைத் தர வேண்டும். அந்தப் புகார் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களும் தயங்கக் கூடாது.

புகாரை வாங்கினால் பள்ளியின் பெயர் கெட்டுப் போகும் என்று பள்ளி நிர்வாகமும், தனது மகளுக்கு நடந்ததை வெளியில் சொன்னால் ஊரார் தவறாகப் பேசுவார்கள் என்று பெற்றோரும் நினைக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அது உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்துக்குச் செய்யும் மாபெரும் துரோகமாக ஆகிவிடும்.

பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்கப்படும் பெண், உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார். உடல் வலியோடு உள்ளத்து வலியும் ஏற்படுகிறது. அவமானம் அடைகிறார்.

ஊக்கம் குறைகிறது, நம்பிக்கை தளர்ந்து போகிறது, சக மனிதர்கள் மீதே வெறுப்பு வளர்கிறது, ஆண்கள் மீதே கோபம் அதிகம் ஆகிறது, கல்வியிலோ வேலையிலோ கவனம் செலுத்த முடியாதவராக ஆகிறார். அந்தப் பெண்ணின் அனைத்துச் செயல்பாடுகளுமே இதனால் தடைபடுகிறது. அவரது எதிர்காலமே கேள்விக்குறியாகிறது.

இத்தகைய சரிவுகளில் இருந்து பெண் குலத்தை காக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. இதை மற்ற அனைத்துப் பிரச்னைகளையும் விட மிக முக்கியமான பிரச்சினையாக தமிழ்நாடு அரசு கருதுகிறது. பாலியல் தொல்லைகள், சீண்டல்கள் குறித்த புகார்கள் வந்ததும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீங்களே கடந்த சில நாட்களாக அதனைச் செய்திகளில் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுத் தர இந்த அரசு தயங்காது.

★ குழந்தைகளுக்கான உதவி எண் 1098 அரசின் நடைமுறையில் உள்ளது. எந்தக் குழந்தையாக இருந்தாலும் தனக்கு ஒரு பாதிப்பு என்றால் 1098 என்ற எண்ணுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். இரகசியம் காத்து, அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

★ அதேபோல் சென்னை டி.பி.ஐ. அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கல்வித் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் உளவியல் பயிற்சி பெற்ற நிபுணர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். பாலியல் வன்முறை தொடர்பாக மாணவர்களிடம் இருந்து பெறப்படும் புகார்களுக்கு, தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

★ குழந்தைகளின் பாதுகாப்பினை பள்ளிகள் உறுதி செய்ய சுய தணிக்கைப் பட்டியல் பள்ளிக் கல்வித்துறையால் கடைப்பிடிக்கப்படுகிறது.

★ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்தடுப்பு பிரிவு தலைமையகத்தில் இணையதளக் குற்றப்பிரிவு (சைபர் கிரைம்) காவல்நிலையம் அமைக்கப்பட்டு காவல் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

★ பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக நிதியம் ஒன்று செயல்படுகிறது.

★ போக்சோ சிறப்பு நீதிமன்றங்கள் முறையாகச் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 16 மாவட்டங்களில் போக்சோ நீதிமன்றங்கள் அமைந்துள்ளது. மேலும், 4 மாவட்டங்களில் நிறுவ ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்து வழக்குகளையும் விரைந்து முடித்து உண்மைக் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தர உத்தரவிட்டுள்ளேன்.

★ குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைக்க அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது.

★ குழந்தைப் பாதுகாப்பு குறித்து சிறப்பாக செயல்படுவதற்கு, இந்தியாவிலேயே முதன்முதலாகத், தமிழ்நாடு மாநில குழந்தை பயிற்சி மையம் யுனிசெப் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

19 வயதுக்குட்பட்ட

டிவிஷன் - 3 அரையிறுதி போட்டியில் மோதும் யாழ். மத்திய கல்லூரி அணி

இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையிலான U19 டிவிசன் 3 போட்டித்தொடரின், எந்தேரமுல்ல சென். ஜோசப் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில், 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கொழும்பு கோட்டை ஆனந்த சாஸ்திராலயா மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், அணிக்கு தலா 38 ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டது. இந்தப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோசப் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி, களமிறங்கிய சென். ஜோசப் கல்லூரி அணியின் சார்பாக, வினோத் வீரசேகர 12 ஓட்டங்களையும், டளஸ் குணசேகர 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுக்க, 27.4 ஓவர்கள் நிறைவில், 61 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, சகல விக்கெட்டுகளையும் இழந்தது. யாழ். மத்திய கல்லூரி அணிசார்பாக, அஜய் மற்றும் வியாஸ்காந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்த இந்துஜன், கவிதர்ஷன் மற்றும் கௌதம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பாக, சாரங்கன் மற்றும் விதுஷன் விக்கெட்டுகளை விட்டுக்கொடுக்காமல் விளையாட, 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றியை பெற்றுக்கொண்டது. இதில், சாரங்கன் 31 ஓட்டங்களையும், விதுஷன் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர். இந்த போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி இன்று 27ம் திகதி அரையிறுதிப் போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஓமானில் நடைபெறவுள்ள புதிய லெஜண்ட்ஸ் தொடர்

சர்வதேச கிரிக்கெட்டில் பிரகாசித்த முன்னாள் வீரர்கள் விளையாடும் புதிய லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஓமானில் நடைபெறவுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் முதல் லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரில் விளையாடியிருந்தனர்.

மேற்குறித்த நாடுகளை சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்களை உள்ளடக்கி, மூன்று அணிகள் உருவாக்கப்படவுள்ளன. இதில், இந்தியா, ஆசியா மற்றும் உலக கிரிக்கெட் பதினொருவர் என்ற மூன்று அணிகள் விளையாடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டு, பதவிக்காலம் நிறைவுக்கு வந்துள்ள ரவி சாஸ்திரி இந்த தொடருக்கான ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த புதிய லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடர் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதுடன், போட்டிகள் அனைத்தும் அல் அமெரட் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

43rd OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT–மொபிடெல்
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை–2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :
வாக்களித்தவர் பெயர் :
முகவரி :
மொபைல் இல. :

Sunday Observer

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 27-11-2021 இல. 08

தற்போது உங்களுக்கும், இலங்கையின் முதன்மையான, அதிவேகமான மற்றும் விஸ்தரிக்கப்பட்ட Premium Fibre வலையமைப்பு.
Fibre இணைப்பினைப் பெற்றிட, அழையுங்கள் 1212
FIBRE | தேசத்தின் நிகரில்லா பைபர் இணைப்பு
www.sltmobitel.lk
SLTMOBITEL திகரற்ற இணைப்பு

டெஸ்ட் போட்டிகளில் இருந்து மஹமதுல்லாஹ் ஓய்வு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினை ரி 20 போட்டிகளில் வழிநடாத்தும் சகலதுறை வீரரான மஹமதுல்லாஹ், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

கடைசியாக பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, சிம்பாப்வேயுடன் விளையாடிய டெஸ்ட் போட்டியில் அவ்வணி 220 ஓட்டங்களால் வரலாற்று வெற்றியொன்றினை பதிவு செய்ய பங்களிப்புச் செய்திருந்த மஹமதுல்லாஹ் குறித்த டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 150 ஓட்டங்கள் பெற்று, டெஸ்ட் போட்டிகளில் தனது சிறந்த இன்னிங்ஸினையும் பதிவு செய்திருந்தார்.

இதனையடுத்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு தொடர்ந்தும் டெஸ்ட் போட்டிகளில் பங்களிப்புச் செய்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையிலையே, மஹமதுல்லாஹ் தனது திடீர் ஓய்வினை அறிவித்திருக்கின்றார்.

மஹமதுல்லாஹ்வின் திடீர் ஓய்வு பங்களாதேஷ் அணியின் ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருப்பதோடு அது தனக்கும் வருத்தத்தினை தருவதாக

மஹமதுல்லாஹ் அவரின் உத்தியோக பூர்வ பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

"உயர்ந்த நிலைமை ஒன்றுக்கு போக நான் எப்போதும் விரும்பிய போதும், இதுதான் எனது டெஸ்ட் வாழ்க்கையினை நிறைவு செய்வதற்கு சிறந்த தருணம் எனக் கருதுகின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் டெஸ்ட் அணிக்கு திரும்பிய போது எனக்கு ஆதரவு வழங்கிய பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு, எனது ஆற்றல் மீது நம்பிக்கை வைத்த அணி வீரர்களுக்கும், எனது அணி ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பங்களாதேஷ் அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது பெருமையாக இருப்பதுடன், அந்த ஞாபகங்களை தொடர்ந்து என்னுடன் வைத்திருப்பேன்."

மஹமதுல்லாஹ் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற போதும், பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினை தொடர்ந்து ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிகளில் பிரதிநிதித்துவம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டில் பங்களாதேஷ் அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகியிருந்த மஹமதுல்லாஹ் இதுவரையில் 33.49 என்கிற துடுப்பாட்ட சராசரியுடன் 3,000 ஓட்டங்கள் வரை குவித்திருப்பதோடு, 43 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

புஷ்பகுமார Jaffna Kings அணியின் பயிற்றுவிப்பாளராக இணைவு

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியினை பிரதிநிதித்துவப்படுத்திய முதுமுதலிகே புஷ்பகுமார Jaffna Kings அணியின் சுழற்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் Jaffna Kings அணியின் சுழற்பந்துவீச்சு பயற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த சஜித் பத்திரண 19 வயதுக்குற்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டமையினாலேயே இவ்வாறு புதிய சுழற்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் ஒருவர் Jaffna Kings அணிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். முதுமுதலிகே புஷ்பகுமார 2019ம் ஆண்டிலிருந்து குவைட் இராச்சியத்தின் பிரதான கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராகவும், குவைட் கிரிக்கெட் அபிவிருத்தி முகாமையாளராகவும் பணியாற்றி வருவதுடன் அவரது பயிற்றுவிப்பின் கீழ் குவைட் தேசிய கிரிக்கெட் அணி பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

குவைட் தேசிய அணி ஆசிய கிண்ணத்திற்காக தகுதிபெற்றமை முதுமுதலிகே புஷ்பகுமாரவின் பயிற்றுவிப்பின் கீழ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Jaffna Kings உரிமம் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "Jaffna Kings என்பது லங்கா பிரீமியர் லீக்கில் பங்கேற்கும் ஒரு உரிமம் கொண்ட கிரிக்கெட் அணியாகும்.

அவ்வணியின் உரிமையாளராக இலங்கையில் பிறந்த பிரித்தானியாவின் தொழிலதிபரான அல்லிராஜா சுபாஸ்கரன் திகழ்கின்றார். இவர் லைகா குழும நிறுவனங்களின் நிறுவனரும் தலைவருமாவார்.

லைகா குழுமமானது ஒரு பிரித்தானிய பன்னாட்டு நிறுவனமாகும். இது தொலைத்தொடர்பு, பொழுதுபோக்கு, பயணம் மற்றும் சுற்றுலா, உடல்நலம், ஊடகம், தொழில்நுட்பம், நிதிச் சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் விருந்தோம்பல் ஆகியவற்றில் அதன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் வலுவான முன்னிலையுடன் தெற்காசிய பிராந்தியத்தில் தனது வணிகங்களை பல்வகைப்படுத்தி வருகின்றது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் பரீட்சையில் சாஜித் வாஹிட் சித்தி

நிந்தவூர் குறூப் நிருபர்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் நடாத்தப்பட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் தரம் 1 (ICC Level 1 Coach) பரீட்சையில் நிந்தவூர்2 ம் பிரிவைச் சேர்ந்த அப்துல் வாஹிட் சாஜித் சித்தியடைந்துள்ளார்.

கடந்த வாரம், மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடாத்தப்பட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் (ICC Level 1 Coach) தரம் 1 பரீட்சையில் நிந்தவூர் லகான் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பங்கு பற்றியிருந்தார்

இப்பரீட்சையில், கிழக்கு மாகாணத்தில் இருந்து 24 வீரர்கள் பங்குபற்றியிருந்தனர். இதில் நிந்தவூர் பிரதேசத்தில் இருந்து இப் பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைந்த முதலாவது நபரும் இவர் ஆகும்.

இதன் மூலம் லகான் விளையாட்டு கழகத்திற்கும் தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் NCC கழக உறுப்புரிமையையும் கொண்ட ஒரு வீரர் என்பதுடன், நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் கடின பந்து பயிற்றுவிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 27ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.